# லீலா தமிழ்ச் செல்வம்

## முதற்புத்தகம்

### நான்காம் படிவம்—பொது

தொகுப்பாசிரியர் :

T. S. உமாபதி, M.A., L.T., (Dip. in Geog.)

தலைமை ஆசிரியர், சி. அப்துல் ஹக்கிம்

இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

பதிப்பாசிரியர் :

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

M. சேஷாசலம் அண்டு கம்பெனி

7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை–1

பதிப்புரிமை]

1954

[விலை 1–4–0

முதற்பதிப்பு—அக்டோபர், 1953
இரண்டாம் பதிப்பு—1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

Kabeer Printing Works, Madras (2503)

# முகவுரை

'லீலா தமிழ்ச் செல்வம்' என்னும் பெயருடன் வெளி வரும் இத்தொகுப்பு நூல் நமது இராச்சியத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் நான்காம் பாரத்தில் தமிழைப் பொதுவாகப் பயிலும் மாணவ மாணவியர்க்குரியது. இது 1952-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கென அரசினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை முற்றிலும் பின் பற்றித் தொகுக்கப்பட்டுள்ளது.

இதன்கண் சங்க காலம், இடைக்காலம், பிற்காலம் என்னும் தலைப்புக்களில் இடம் பெற்றுள்ள செய்யுட்பாடங்கள், பண்டு முதல் இன்றளவும் செய்யுள் நிலையில் ஏற்பட்டு வந்துள்ள வேறுபாடுகளை மாணவ மாணவியர் அறிதற்குத் துணை புரியுமென்பது எனது எண்ணம். அன்றியும், இப்பாடங்கள் தமிழ்த் தொண்டில் சமய வேறுபாடின்றிச் சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிறித்தவர், இஸ்லாமியர் அனைவரும் ஈடுபட்டுச் சிறந்ததொரு தமிழர் சமுதாயத்தை உருவாக்க முயன்றுள்ளனர் என்பதை விளக்குதலும் ஒருதலை. உரைநடைப் பாடங்களும் அங்ஙனே அமைக்கப் பெற்றுள்ளன.

பாடத்திட்டத்தில் பொதுப் பகுதிக்கு 400 வரி அளவுக்குச் செய்யுட்பாடங்களும், 50 பக்க அளவுக்கு உரைநடைப் பாடங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவாயினும், இடத்துக்கிடம் மாணவ மாணவியர் தரம் வேறுபடக் கூடுமாகலின், தத்தம் மாணவர் நிலைக்கேற்பத் தமிழாசிரியர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளற்பொருட்டுப் பாடத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகட்கு அதிகமாகவே செய்யுட்பாடங்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூல் உருவாதற்கு உறுதுணையாக உயரிய கட்டுரைகள் நல்கிய அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் யான் பெரிதும் கடப்பாடுடையேன். அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இந்நூல் அச்சாகுங்கால் இன்றியமையாத திருத்தங்கள் நல்கி, பிரதிகளை ஒப்புநோக்கி, சிறந்த முறையில் இது வெளி வருமாறு செய்த இதன் பதிப்பாசிரியரும் எனது பூதிப்பிற்குரிய கெழுதகை நண்பருமாய **வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்கட்கும் எனது அன்பு கலந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இதற்கு ஆதரவு நல்கி எனக்குத் துணை புரியுமாறு ஆசிரிய அறிஞர் உலகத்துக்கு எனது பணிவு மிக்க வேண்டுகோள் உரியதாகுக.

த. சே. உமாபதி

# நன்றியுரை

இந்நூலின்கண் இடம்பெற்றுள்ள சிறந்த கட்டுரைகளை அன்புடன் அளித்த கீழ்க்காணும் அறிஞர் பெருமக்களுக்கு எமது அன்பு கலந்த நன்றி உரியதாகுக.

## கட்டுரையும் உரிமையாளரும்

1. நாட்டுக்கு நன்மை விளைவிப்பவன் செலவாளியா, சிக்கனக்காரனா?
 **—திரு. கா. ந. தணிகைவேலனார்**

2. பெரிய புராணத்திற் காணப்படும் நாகரிகப் பண்பாடு
 **—டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L. Ph. D.**

3. கோயிற்கலையின் மறுமலர்ச்சி
 **—டாக்டர் பா. நடராசனார், M.A., D.Litt.**

4. பாரதியாரும் பெண்மையும்
 **—திருவாட்டி ர. இராசாமணி அம்மையார், B.A. (Hons.) L.T.**

5. கலிங்கம் எறிந்த கருணாகரன்
 **—திரு. S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.**

6. பள்ளிப் பயணங்கள்
 **—திருவாட்டி இராசாம்பாள் கோவிந்தராசனார், M.A., L.T. Praveen**

7. ரூஸ்ஸோ
 **—திரு. பி. கோதண்டராமர், M.A.**

8. குண்டலகேசி
 **—திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார், M.A.**

9. பலர் புகழ் ஞாயிறு
 **—திரு. தோ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A.**

10. தோல் வாத்தியங்கள்
 **—பேராசிரியர் R.K. விசுவநாதர், M.A.**

11. எங்கள் இன்பச் செலவு
 **—புலவர் பு. செல்வராசனார்**

# உள்ளுறை

## செய்யுட்பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | இறை வணக்கம் | ... | 1 |
| II. | தமிழ் மொழி வாழ்த்து | ... | 1 |
| III. | அறவுரை | | |
| 1. | திருக்குறள் | ... | 2 |
| 2. | நாலடியார் | ... | 4 |
| 3. | திரிகடுகம் | ... | 5 |
| 4. | அறநெறிச்சாரம் | ... | 6 |
| IV. | தொடர்நிலைச் செய்யுள் | | |
| 1. | நளவெண்பா—தமயந்தி சுயம்வரம் | ... | 7 |
| 2. | அரிச்சந்திரபுராணம்—மயான காண்டம் | ... | 11 |
| 3. | திருவிளையாடல்—விறகு விற்ற படலம் | ... | 13 |
| 4. | வில்லி பாரதம்—கிருட்டிணன் தூது | ... | 19 |
| V. | சிறு நூல்கள் | | |
| 1. | அந்தாதி | ... | 26 |
| 2. | நான்மணி மாலை | ... | 26 |
| 3. | தமிழ் விடு தூது | ... | 27 |
| 4. | கலம்பகம்—குறம் | ... | 28 |
| 5. | பிள்ளைத்தமிழ் | ... | 29 |
| VI. | வருணனை | | |
| 1. | மலை | ... | 31 |
| 2. | யாறு | ... | 31 |
| 3. | நாடு | ... | 31 |
| 4. | சூரியோதயம் | ... | 32 |
| 5. | அந்தி மாலை | ... | 32 |
| VII. | தனிப்பாடல்கள் | ... | 32 |
| | குறிப்புரை | ... | 33 |

## உரைநடைப் பகுதி

1. நல்லொழுக்கம் ... 49
—யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்

2. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா, சிக்கனக்காரனா ? ... 56
—திரு. கா. ரா. நமச்சிவாய முதலியார்

3. பெரிய புராணத்திற் காணப்படும் நாகரிகப் பண்பாடு ... 64
—டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., PH.D.

4. கோயிற்கலையின் மறுமலர்ச்சி ... 72
—டாக்டர் பா. நடராசனார், M.A., D.LITT.

5. பாரதியாரும் பெண்மையும் ... 77
—திருவாட்டி ர. இராசாமணியம்மையார், B.A. (HONS.) L.T.

6. கலிங்கம் எறிந்த கருணாகரன் ... 82
—திரு. S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.

7. பள்ளிப் பயணங்கள் ... 89
—திருவாட்டி இராசாம்பாள் கோவிந்தராசனார், M.A., L.T. PRAVEEN

8. ரூஸ்ஸோ ... 94
—திரு. பி. கோதண்டராமர், M.A.

9. குண்டலகேசி ... 104
—திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார், M.A.

10. பலர் புகழ் ஞாயிறு ... 110
—திரு. தோ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A.

11. தோல் வாத்தியங்கள் ... 116
—பேராசிரியர் R. K. விசுவநாதர், M.A.

12. எங்கள் இன்பச் செலவு ... 123
—புலவர் பு. செல்வராசனார்

# லீலா தமிழ்ச் செல்வம்

## நான்காம் படிவம்—பொது

## செய்யுட்பகுதி

### I. இறை வணக்கம்

அருள்பழுத்த பழச்சுவையே ! கரும்பே ! தேனே !
ஆரமிர்தே ! என்கண்ணே ! அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே ! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றஒன்றே ! புனித வாழ்வே !
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே ! யான்சொலும்விண் ணப்பம் கேளே !

—தாயுமானவர்

### II. தமிழ் மொழி வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும் ;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே !

*　　　*　　　*

உன், சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

# III. அறவுரை

## 1. திருக்குறள்

### கடவுள்

அகரம் முதல எழுத்தெல்லாம் ; ஆதி
பகவன் முதற்றே யுலகு. 1

### கற்பதன் பயன்

கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின் ? 2

### அறன்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் ; அனைத்தறன் ;
ஆகுல நீர பிற. 3

### அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 4

### செய்ந்நன்றியறிதல்

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 5

### நா அடக்கம்

யாகாவா ராயினும் நாகாக்க ; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 6

### தீயவை செய்தாரை வெல்லும் உபாயம்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 7

### மக்கட்பதர்

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல் ;
மக்கட் பதடி யெனல். 8

### ஈகை

நல்லா(று) எனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 9

### அருளுடைமை

வலியார்முன் தன்னை நினைக்க,தான் தன்னின்
மெலியார்மேற் செல்லும் இடத்து. 10

### நெஞ்சு சான்றாதல்

தன்னெஞ்(சு) அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 11

### வெகுளாமை

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 12

### இன்னா செய்தாரை ஒறுத்தல்

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 13

### மெய்யுணர்வு

எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு. 14

### கற்றலும் ஒழுகலும்

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 15

### வருவாய்க்கு ஏற்ற செலவு

ஆகா(று) அள(வு)இட்டி(து) ஆயினும், கேடில்லை
போகா(று) அகலாக் கடை. 16

### தெரிந்து தெளிதல்

குணநாடிக் குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி, மிக்க கொளல். 17

### ஊக்கமுடைமை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை. 18

### முயற்சி

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 19

### பெருமையும் சிறுமையும்

அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 20

—திருவள்ளுவர்

## 2. நாலடியார்

### கல்வி

கல்வி கரையில ; கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைக்கின் பிணிபல :—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 1

### புலவர் பெருமை

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் :
கடைநிலத்தோர் ஆயினும், கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 2

### நட்பு

யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் : யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 3

### பெருமை

உறுபுனல் தந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறும் ஆறேபோல்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை. 4

### தாளாண்மை

நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை ;—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ, தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றா னாகுங் குலம். 5

—சமண முனிவர்கள்

## 3. திரிகடுகம்

### நன்மை பயவாதன

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்—பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. 1

### நட்புக் கொள்ளத் தக்கவர்

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன் ;
வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணுதான் ;
கோளாள னென்பான் மறவாதான் ; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 2

### இறந்தும் இறவாதவர்

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்,—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னர். 3

### பயனில் செயல்கள்

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்,
இல்லது காமுற் றிருப்பானும்,—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானுமிம் மூவர்
உமிக்குற்றிக் கைவருந்து வார். 4

### கற்றவர் கடமை

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும், நூற்கேலா
வெண்மொழி வேண்டினும் சொல்லாமை,—நன்மொழியைச்
சிற்றினம் அல்லார்கண் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன். 5

—நல்லாதனர்

## 4. அறநெறிச்சாரம்

### இளமையில் அறம் செய்தல்

இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொற் களைகட்டு, வாய்மை யெருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 1

### அறவுரையால் பயனெய்தாதவர்

வைகலும் நீருள் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும் ; அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. 2

### சினம் கடிதல்

உயிரும் உடம்பும் பிரிவுண்மை உள்ளிச்
செயிரும் சினமுங் கடிந்து,—பயிரிடைப்
புற்களைந்து நெற்பயன் கொள்ளும் ஒருவன்போல்
நற்பயன் கொண்டிருக்கற் பாற்று. 3

### கற்ற வழியில் நிற்றல்

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை,—அப்பிறப்பில்
கற்றலும், கற்றவை கேட்டலும், கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். 4

### அடக்கம்

'பலகற்றோம் யாம்!' என்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும் ;
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல். 5

—முனைப்பாடியார்

# IV. தொடர்நிலைச்செய்யுள்

## 1. நளவெண்பா

### தமயந்தி சுயம்வரம்

நிடத நாட்டின் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. 1

மாவிந்த நகர்ச்சிறப்பு

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. 2

நளனது ஆட்சி

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு. 3

நளன் பூஞ்சோலையை அடைதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. 4

நளன்முன் அன்னம் தோன்றுதல்

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப,—மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 5

### அன்னம் கலங்குதல்

அன்னந் தனைப்பிடித்தங்(கு) ஆயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 6

### நளன் அன்னத்திற்குத் தேறுதல் மொழி கூறுதல்

'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்,' என்றான்; களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 7

### அன்னம் தமயந்தியின் குணத்தைக் கூறுதல்

'நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.' 8

### அன்னம் நளனை நோக்கி, 'உனக்குத் தமயந்தியை மணம் புரிந்து வைப்பேன்,' என்று கூறிப் போதல்

'வீமன் திருமகளாம் மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையாய்!' என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. 9

### தமயந்தி அன்னத்தைக் கண்டு வினவுதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய—நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடம்சேர்ந் தாங்கதனை
'என்னாடல்? சொல்'என்றாள் 'ஈங்கு.' 10

### அன்னம் நளனது சிறப்பை எடுத்துரைத்தல்

'செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்,—மெய்ம்மை
நளனென்பான், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.' 11

### நளனைத் தனக்கு மணஞ்செய்து வைக்கும்படி தமயந்தி அன்னத்தை வேண்டுதல்

' வாவி யுறையும் மடவனமே ! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி,' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 12

### வீமன் தமயந்தியின் சுயம்வரத்தை அரசர்க்குத் தெரிவிக்கச் செய்தல்

' மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென்(று) இயம்பினான்—பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. 13

### அரசர்கள் குண்டின புரத்தில் வந்திருத்தல்

' புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்தன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 14

### தமயந்தியின் சுயம்வரத்திற்கு நளன் புறப்படுதல்

' கெட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர் நீள்வரம்பின்
இட்ட பசுங்குவளை ஏரடித்த—கட்டி
கரையத்தேன் ஊறுங் கடல்நாடன் ஊர்க்கு
விரையத்தேர் ஊர்,'என்றான் வேந்து. 15

### இந்திரன் அக்கினி முதலிய தேவர்கள் தமயந்தியின் சுயம்வரத்திற்குப் புறப்படுதல்

' மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவருங்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 16

### நளனும் தேவர்களும் சுயம்வர மண்டபத்தை அடைதல்

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்(று)அவர்கள்
தங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு. 17

### தமயந்தி சுயம்வர மண்டபத்திற்கு வருதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 18

### தோழி தமயந்திக்கு அரசர்களைத் தெரிவித்தல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்(று) இயலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 19

### நளன் வடிவுகொண்டு வந்திருந்த நான்கு தேவர்களைக் கண்டு தமயந்தி சஞ்சலப்படுதல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். 20

### தமயந்தி சில குறிகளால் நளனை அறிதல்

கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. 21

### தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டல்

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 22

—புகழேந்திப் புலவர்

## 2. அரிச்சந்திர புராணம்

### மயான காண்டம்

சந்திரமதியின் கைகளைக் கட்டியிருந்த கயிற்றைப்பற்றி
அரிச்சந்திரன் அவளை நகர்ப்புறம் கொண்டேகல்

'என்ன பாதகஞ் செய்தனம் !' எனவிறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னு மாமணித் தோரண வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திருத்தான். 1

அரிச்சந்திரன் வாய்மையைக் காணுமாறு
வசிட்டர் இந்திரனை அழைத்தல்

உற்ற நாளையில் வசிட்டனவ் வும்பர்கோன் றனக்குக்
'கொற்ற வா! நினக் கியான்புகல் கோதிலா னிடத்தே
அற்றை நாண்முதற் கௌசிகன் அமைக்குமூ றனைத்தும்
இற்றை நாள்விடும் ; காண்பம்; நீ யெழுக,' என் றிசைத்தான். 2

இந்திரன் முதலியோர் அந்தரத்தில் வந்திருத்தல்

தாழும் வார்சடை மாமுனி யவ்வுரை சாற்றச்
சூழு மாதருந் தும்புரு நாரதர் தாமும்
வாழும் வச்சிர பாணியும் வசிட்டனு மியாரும்
ஏழு பாலருங் காணவந் தந்தரத் திருந்தார். 3

விசுவாமித்திரன் அரிச்சந்திரனை வாக்கினின்று
தவறுமாறு தூண்டல்

அந்த வேளையிற் கௌசிகன் விரைந்துவந்(து), 'அரசே !
இந்த நோதக வெய்தலென் ? எனக்குநீ முன்னந்
தந்த நாடு 'யான் தந்திலேன்,' எனுமொழி சாற்றி
உந்தம் நாடுமிவ் வுயிர்களும் பெறுெ'கன வுரைத்தான். 4

விசுவாமித்திரனுக்கு அரிச்சந்திரன் தன்
வாய்மை பற்றிக் கூறல்

சேர நின்றவன் செப்பிய தாங்கவ ரன்றி
யாருங் கேட்டிலர் ; வசிட்டனும் அமரரு மறிந்தார் ;
வீர வேந்தனும் மங்கையு மவனடி வீழ்ந்(து), 'இங்(கு)
யாரை நீயிந்த ஏழைமை யுரைசெய்தி ?' என்றார். 5

'சேய்மை யண்மையி லுயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையாம் ; மற்றிலை ; புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி. 6

'புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினு நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்!
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ? 7

'இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிநீ டுமிழ்கலா வெரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினு மெய்ம்மையை விடேமால்! 8

'பதியி ழந்தனம் ; பாலனை யிழந்தனம் ; படைத்த
நிதியி ழந்தனம் ; இனிநமக் குளதென நினைக்குங்
கதியி ழக்கினுங் கட்டுரை யிழக்கிலேம்,' என்றூர் ;
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான். 9

விசுவாமித்திரனை இந்திரன் அழைத்து அருகிருக்கச் செய்தல்

மறைந்து போகலும் வாசவன் மாமுனி வனைக்கூய்,
'அறைந்த காரண மறிந்துபோ,' எனவரு கழைத்தான் ;
நிறைந்த நாணமுங் குறைந்தபார் வையுமுற நினைவு
குறைந்தி ருந்தனன் முகிலிடத் தவருடன் கூடி. 10

சந்திரமதியை வெட்டுவதற்காக அரிச்சந்திரன் அழைத்தேகல்

வாசத் தார்புனை வாசவ னுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர் பாசங்கை பற்றிப்
பேசத் தான்பெருன் பிணஞ்சுடு கோலினுற் றள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர் நெடுநில முற்றுன். 11

சந்திரமதியைத் தன் வழிபடு கடவுளை வணங்கும்படி
அரிச்சந்திரன் கூறல்

'வழக்கி னென்றுநீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கியீண் டிரு,'எனக் கிளிமொழி மடந்தை
பழக்க மானவக் கணவனைப் பரவி,'என் றுவி
இழக்கற் கஞ்சிநீ யறம்வழு வேல்,'என, இயம்பும் : 12

### சந்திரமதி அரிச்சந்திரனைத் தன் கடமையைச் செய்யும்படி கூறல்

'பொருந்து நீத்தத்திற் புற்புத வாழ்வைநீ மெய்யென்(று)
அருந்த வத்தையும் அறத்தையு மெய்யையும் விடுத்து
வருந்தல் மன்னவ ! வழிவழி சிறக்க'கென வாழ்த்தி
இருந்த பின்சுடர் வாட்படை வலக்கையி னெடுத்தான். 13

### அரிச்சந்திரன் கூற்று

'உலகு யிர்க்கெலாம் பசுபதி யொருமுத லாயின்,
அலகில் சீருடை யவன்மொழி மறையெனின், அதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மையீ டிலதேல்,
விலகு றுமலவ் வாய்மையே விரதமாக் கொளின்யான், 14

'நெறியி னன்னவென் றனைவிடா நிறையிவட் குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுக;இல் லெனினிவ ளிறுதி
பெறுக,' என்றுவாள் வீசினன் ; பேதைதன் கழுத்தில்
மறும ணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள். 15

—ஆசுகவி வீர கவிராயர்

## 3. திருவிளையாடற்புராணம்

### விறகு விற்ற படலம்

#### ஏமநாதன் என்னும் பாணன் மதுரையை அடைதல்

**ம**ன்றலந் தெரியல் மார்பன்
வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவ லானிற்
பொலியும்நாள், ஏம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன்
வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னோடும்
விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான். 1

ஏமநாதன் பாண்டியன் அவையிற்பாடுதல்

பூழியர் பெருமான் கோயில்
புகுந்துவேந் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத்
தொழுதுபல் புகழ்கொண் டாடி,
ஏழிசை மழலை வீணை
இடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்னன்
அருஞ்செவி வழியப் பெய்தான். 2

ஏமநாதன் பரிசில் பெற்றுச் செல்லுதல்

முகையுடைந் தவிழ்ந்த மாலை
முடித்தலை துளக்கித் தூசு
பகலவிர் மணிப்பூண் நல்கிப்
பல்லுணுக் கருவி நல்கி
அகன்மனை வேறு காட்டி
அரசர்கோன் வரிசை செய்ய,
இகலறு களிப்பி னேடும்
இசைவல்லான் இல்லிற் புக்கான். 3

பாண்டியன், பாணபத்திரரை வருவித்தல்

மீனவன் வரிசை பெற்ற
செருக்கினும் விருதி னுனும்
மானமேற் கொண்டு, தன்னே
டின்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங்
கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப்
'பத்திரற் கொணர்திர்,' என்ருன். 4

பாண்டியன் வினவ, பாணபத்திரர் கூறத் தொடங்குதல்

உழையரால் விடுக்கப் பட்ட
பத்திரன் உவரி வென்ருேன்
கழல்பணிந் தருகு நிற்பக்
கௌரியன் நோக்கிப் 'பாணி

பழகிசை வல்லா னோடும்
பாடுதி கொல்லோ ?' என்ன,
மழலையாழ் இடத்தோள் இட்ட
பாணர்கோன் வணங்கிச் சொல்வான் : 5

### பாண்டியன், பாணபத்திரருக்கு ஆணை தந்து விடுத்தல்

'தென்னவர் பெரும ! யானுன்
திருவுள வலனும் கூடல்
முன்னவ னருளு மூட்டு
முயற்சியான் முயன்று பாடி,
அன்னவன் விருது வாங்கி
அவனைவீ றழிப்பன்,' என்றான் ;
மன்னவன், ' நாளைப் பாடு ;
போபோ'கன வரைந்து சொன்னான். 6

### ஏமநாதன்பாற் கற்பவர் வீறு தோன்றத் திரிதல்

இற்கண்ணே இசைவல் லான்போய்
இருந்துழி, அனையான் பாங்கர்க்
கற்கும்பாண் மக்கள் மல்லல்
ஆவணம் கவலை மன்றம்
பொற்குன்றம் அனைய மாட
மறுகெங்கும் போகிப் போகிச்
சொற்குன்று வகையாற் பாடித்
திரிந்தனர் வீறு தோன்ற. 7

### பாணபத்திரர், 'ஏமநாதனை வெல்லுவது எவ்வாறு?' என்று எண்ணுதல்

இவ்விசை கேட்டு, ' நன்றெ'றன்(று)
அதிசயித்து, ' இசைவல் லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும்
வண்ணமீ தென்னை கெட்டேன் !
அவ்விசை வல்லான் பாடும்
முறையெற்றோ ! அவனை நாளைச்
செவ்விசை பாடி வெல்வ
தெவன்?'எனத் திவவுக் கோலான் 8

### பாணபத்திரர் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தம் மனை புகுதல்

மையணி மிடற்றி னானை
மதுரைநா யகனை வந்தித்(து)
'ஐயனே! அடியேற் கின்றுன்
அருட்டுணை செய்யல் வேண்டும்!
மெய்யனே!' என்று போற்றி
வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லம்
புக்கினி திருந்தான்; இப்பால் 9

### சோமசுந்தரர் விறகு விற்போன் வடிவங்கொள்ளுதல்

வருத்த னாகிவந் திரந்தவ னிசைப்பகை மாற்ற
விருத்த னும்விற காளென விண்ணிழி விமானத்(து)
ஒருத்த னாறி வாகிய உண்மையா னந்தத்
திருத்த னார்தம திச்சையால் திருவுருக் கொள்வார். 10

### சோமசுந்தரர் விறகு சுமந்து செல்லுதல்

தறிந்த இந்தனந் தினந்தொறும் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காண(து)
எறிந்த இந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி 11

நடந்து, கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியும் கவலையும் முடுக்கரும் மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார். 12

### மாலைக்காலம் வருதல்

திங்கள் வாள்நுதல் முயற்கறைத் திலகமும் சிவந்த
மங்கு லாடையும் மயங்கிரு ளோதியும் வான்மீன்
பொங்கு மாரமும் பொலிந்துதன் கொண்கனைப் பொருப்பன்
மங்கை தேடிவந் தாளென வந்தது மாலை. 13

### சோமசுந்தரர் பாடுதல்

எடுத்த இந்தனம் ஒருபுறத் திறக்கியிட் டூன்றி,
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிதெழீஇப் பாடினார் ; சுருதி
மடுத்து, ‘ யாரவன் பாடுவான் ?’ என்றிசை வல்லான் 14

### சோமசுந்தரர் ஏமநாதனுக்குக் கூறல்

வண்டறை கொன்றை யான்முன்
வந்து,‘நீ யாரை ?’ என்றான் ;
‘ பண்டரு விபஞ்சிப் பாண
பத்திர னடிமை,’ என்றான்
முண்டக மலரோன் மாயோன்
புரந்தரன் முதல்மற் றேனை
அண்டரும் தன்குற் றேவல்
அடிமையாக் கொண்ட அம்மான். 15

‘ கனியிசைக் கிழவன் றன்கீழ்க்
கற்பவ ரனேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு
நானுமவ் வினைஞ னானேன் ;
தனியிசைக் கிழவன் நோக்கித்
‘ தசையெலாம் ஒடுங்க மூத்தாய் ;
இனியிசைக் கிழமைக் காகாய்,’
என்றெனைத் தள்ளி விட்டான். 16

### சோமசுந்தரர் மீண்டும் பாடுதல்

‘ வெவ்விற கெறிந்து கட்டி
விலைபகர்ந் தேனும் ஐய !
இவ்வயி றோம்பு கேன்என்
றித்தொழில் பூண்டேன்,’ என்ன,
நைவளந் தெரிந்த ஏம
நாதனும், ‘ விறகு மள்ளா !
அவ்விசை யொருகால் இன்னும்
பாடெ’ன, ஐயன் பாடும் : 17

'விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரைசாய் மதுரை அமர்ந்தான் என்னே!
அரைசாய் மதுரை அமர்ந்தான் அவனென்
புரைசார் மனனும் புகுந்தான் என்னே!' 18

சோமசுந்தரர் பாடிய இசையின் சிறப்பு

பைத்தலை விடவாய் நாகம்
பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய்
வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமா றறியா வாகித்
தலைத்தலை மயங்கிச் சோர,
இத்தகை மாவும் புள்ளும்
இசைவலைப் பட்ட அம்மா! 19

வன்றரை கிழிய வீழ்போய்
வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்க ளெல்லாம்
செவியறி வுடைய வாகி
மென்றளி ரீன்று போது
விரிந்துகண் ணீருஞ் சோர
நன்றறி மாந்தர் போல
நகைமுகம் மலர்ந்த மாதோ. 20

கண்ணிறை நுதலோன் சாம
கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதம்
சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும்
விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரும் மெய்யும்
உருக்கிய திசைவல் லானை. 21

சோமசுந்தரர் மறைந்து போதல்

சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாப் புலன்கள்
ஐந்தும் ஓசையா இசைவலான் இருந்தன ணாகப்
பந்த நான்மறை நாவினுற் பத்திர னாய்
வந்து பாடினர் இந்தனச் சுமையொடு மறைந்தார். 22

ஏமநாதன் கவலுதல்

'யான றிந்தசா தாரியன் றிம்பருள் இதனை
'நான றிந்தெ'தன் றொருவரும் நவின்றிலர் ; தேவ
கானம் ஈதிவற் குணர்த்திறேன் கடவுளே யன்றி,
ஏனை மானிடர் வல்லரோ? இதுவியப்பெ'பன்னு 23
'இழுக்கி விட்டவிக் கிழமக னிசையிதேல், அந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றே!'என மதியா,
அழுக்கம் உற்றெழுந் திசைவலா னடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான். 24

சோமசுந்தரர் பாணபத்திரர் கனவில் தோன்றுதல்

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
'இன்று பத்திர! இசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று, 'பத்திர னடிமையாம்,' என்றுபாண் செய்து
வென்று பத்திரஞ் செய்தும்நின் வேண்டுகோள்,' என்றார். 25

—பரஞ்சோதி முனிவர்

## 4. வில்லி பாரதம்

### கிருட்டிணன் தூது

தருமன் கண்ணபிரானை நோக்கிக் கூறுதல்

'செஞ்சொல்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த
கருமமும்,முன் சென்ற காலை
அஞ்சொல்முனி புரோகிதனுக்(கு) அவனிசைத்த
கருமமுநீ அறிதி அன்றே?
நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்தும்
மந்திரமும் விரைந்து நாடா(து)
எஞ்சினர்தங் களைப்போல இருக்குமதோ?
யார்மனத்தும் இருக்குஞ் சோதீ!' 1

### தருமனையும் அவன் தம்பியரையும் நோக்கிக் கண்ணபிரான் கூறுதல்

'செய்வரால் இனமுகளுந் திருநாடு
பெறநினைவோ? சென்று மீளப்
பைவராய் அருங்கானில் பயின்றுதிரி
தரநினைவோ? 'பகைத்த போரில்
உய்வரார்?' எனவிரைவின் உருத்தெழுந்து
பொரநினைவோ? உண்மை யாக
ஐவராம் அவனிபர்க்கும் நினைவே(து)?'என்(று)
அருள்புரிந்தான் அமரர் கோமான். 2

### தருமன் கண்ணபிரானைப் பார்த்து, 'சமாதானத்திற் காரியத்தை முடிக்க வேண்டும்,' என்று புகலுதல்

'வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்கா(டு) என்னச்
செயிரமரில் வெகுளிபொரச் சேரஇரு
திறத்தேமுஞ் சென்று மாள்வேம்;
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக்
குருநாட்டிற் கலந்து வாழ,
உயிரனையாய்! சந்துபட உரைத்தருள்,'என்
றுன்அறத்தின் உருவம் போல்வான். 3

### 'சமாதானத்திற்கு வாராத அவர்களை அழிப்பதே தகுதி,' என்று கண்ணபிரான் கூறுதல்

'அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்
வென்றஅந்நாள் அவன்ருன் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர்; வெய்யோன் உங்கள்
குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தால்
ஆங்கவனைக் கொன்று போரில்
இருநிலத்தை ஆளஇனித் துணிவதே
கடன்,'என்ருன் எம்பி ரானே. 4

**'பலரைக் கொன்று அரசு பெறுவது தகுதியன்று,' என்று தருமன் எடுத்துரைத்தல்**

'சூரவரையும் கிளைஞரையும் குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்(று)
அரவநெடுங் கடலாடை அவனியெலாந்
தனியாளும் அரசு தன்னின்
கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறும்
இரவுபகல் பலமூல சாகநுகர்ந்(து)
உயிர்வாழ்தல் இனிது நன்றே!' 5

**'தருமர் கூறுவது தகுதி அன்று,' என்று கண்ணபிரான் புகலுதல்**

கோதிலான் இந்தமொழி கூறுதலும்
மாமாயன் கூற லுற்றான் :
'மோதமருக்(கு) இளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றால்,
பூதலத்தோர் ஏசாரோ ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ ?
நீதியோ ?' எனஉரைத்தான் ; ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்த லுற்றான் : 6

**தருமன், கண்ணபிரானுக்குத் தூது பேசும் வகையைக் கூறுதல்**

'முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்(து)உழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம்வேண்டு ;
நாடொன்றும் நல்கான் ஆகில்
ஐந்தூர்வேண்டு ; அவையிலெனில், ஐந்திலம்வேண்(டு);
அவைமறுத்தால், அடுபோர் வேண்டு ;
சிந்தூரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!' 7

தருமன் கூறியதைக் கேட்டு, வீமன் வெறுத்துக் கூறுதல்

மூத்தோன்மற்(று) இவையுரைப்ப, இளையோன்வெஞ்
சினமனத்தின் மூள மூள
நாத்தோமில் உரைபதறக் கதுமெனவுற்(று)
எழுந்திறைஞ்சி, 'ஞால மெல்லாம்
பூத்தோனே ! பூந்தவிசில் பூவைபுணர்
மணிமார்பா ! புன்மை யாவும்
தீர்த்தோனே ! ஊனமிலான் மானமிலா(து)
உரைப்பதற்(கு)என் செய்வ(து) ?' என்றான். 8

வீமன் தருமனை நோக்கிக் கடுமையாகப் பேசுதல்

'கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தானாளுந் தரணியெலாம் ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே !
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் தன்பதமற்(று)
அவன்தனக்கே வழங்கு வேனே !' 9

தருமன் வீமனுக்குச் சமாதானம் கூறுதல்

பரிவுடன்மற்(று) இவைகூறும் பவனகுமா
ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
'குருகுலத்தோர் போரேறே ! குற்றமது
பார்க்குங்காற் சுற்ற மில்லை ;
ஒருகுலத்திற் பிறந்தார்கள் உடன்வாழும்
வாழ்வினைப்போல் உறுதி யுண்டோ ?
இருவருக்கும் வசையன்றோ இருநிலங்கா
ரணமாக எதிர்ப்ப(து) ?' என்றான். 10

வீமன் தருமனைப் பார்த்துக் கூறுதல்

'மலைகண்ட தெனவென்னகம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொருந் திறல்கண்டும்,
எமக்காகத் திருமால் நின்ற

நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல், அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றுயே!' 11

### அருச்சுனன் கண்ணபிரானையும் தருமனையும் நோக்கிக் கூறுதல்

மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று,
முக்காலங் களுமுணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னே :
'அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல்
இன்னமிருந்(து) அறமே சொன்னல்,
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங்
குழல்முடிக்க இருக்கின் றுளே?' 12

'பொன்னுருந் திகிரியினன் போனலும்
பொறைவேந்தன் புகன்ற வெல்லாம்
சொன்னலும் அவன்கேளான் ; விதிவலியாற்
கெடுமதிகண் தோன்று(து) அன்றே?
எந்நாளும் உவர்நிலத்தின் என்முளைவித்
திடினும்விளை வெய்தி டாது ;
பன்னகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும்
விடமொழியப் பயன்கொ டாதே!' 13

### நகுலன் கூற்று

''கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள்
கழித்ததற்பின் கானம் நீங்கி
ஈனமிலா வகைவந்தார் நந்துணைவர்!'
எனச்சிறிது மிரங்கா னுகில்,
மாநகரும் வளநாடு முரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கா னுகில்,
தானறியா தவன்பிறர்போய்க் கற்பித்தால்
அறிவனே தரணி வேந்தே!' 14

### கண்ணபிரான் சகாதேவனை அபிப்பிராயம் கேட்டல்

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை
யமைத்தருளி, ‘ நகுலன் சொல்லும்
இகல்விசயன் றன்மொழியுந் திறல்வீமன்
இயம்பியதும் யாவுங் கேட்டோம் ;
புகலரிய வுணர்வுடையோய் ! புகழுடையோய் !
திறலுடையோய் ! புகல்நீ,’ என்ன,
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றனே : 15

### சகாதேவன் கூற்று

‘ சிந்தித்த படிநீயுஞ் சென்றாலென்,
ஒழிந்தாலென் ? செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென், வழங்கி னலென் ?
கொந்துற்ற குழலிவளு முடித்தாலென்,
விரித்தாலென் ? குறித்த செய்கை,
அந்தத்தின் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமோ ஆதி மூர்த்தி !’ 16

### சகாதேவனைக் கண்ணபிரான் பாரதப்போர் நடவாதிருக்க உபாயம் கேட்டல்

இவ்வண்ணஞ் சாதேவ னியம்புதலும்
நகைத்தருளி, ‘ இகலோர் சொன்ன
அவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தான்
இவன்,’என்ன அவனே டாங்கோர்
பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப்
‘ பாரதப்போர் பயிலா வண்ணம்
உய்வண்ணஞ் சொல்லுகநீ யுபாயம்,’எனத்
தொழுதுரைப்பா னரங்கொள் வேலான் : 17

### சகாதேவன் தனது கருத்தைக் கூறுவதும் கண்ணபிரான் வாக்குறுதியும்

‘ நீபா ரதவமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா !

கோபாலா! போரேறே! கோவிந்தா! நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றூர்கொல் வல்லாரே? 18

'பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்,
வாராமற் காக்கலாம் மாபா ரதம்,'என்றான். 19

'முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலும்
என்னைநீ கட்டுமா றெவ்வா றெ'னமாயன்
'உன்னைநீ தானு முணராதாய்! உன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யான்,'என்றான். 20

மாயவனு மன்பன் மனமறிவான் 'கட்டுக,'என்(று)
ஆய வடிவுபதி னாறு யிரங்கொண்டான்;
தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந்(து) எவ்வுலகுந்
தாய வடியிணைகள் தன்கருத்தி னாற்பிணித்தான். 21

'அன்பாலின் றென்னை யறிந்தே பிணித்தமைநன்(று)!
என்பாதந் தன்னை யினிவிடுக,' என்றுரைப்ப,
'வன்பா ரதப்போரில் வந்தடைந்தே மைவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டும் நெடுமாலே!' 22

என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளில்
ஒன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி,
'இன்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
ஒன்றும் பிறரறிய வோதா தொழி'கென்றான். 23

—வில்லிபுத்தூராழ்வார்

# V. சிறு நூல்கள்

## 1. அந்தாதி

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவ ராகியுள் ளோரு முனிவரரும்
யாவரு மேனைய வெல்லா வுயிரு மிதழ்வெளுத்த
பூவரு மாதி னருள்கொண்டு ஞானம் **புரிகின்றதே.** 1

**புரிகின்ற** சிந்தையி னூடே புகுந்து புகுந்திருளை
அரிகின்ற தாய்கின்ற வெல்லா வறிவி னரும்பொருளைத்
தெரிகின்ற வின்பங் கனிந்தூறி நெஞ்சந் தெளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண் கலைமா னுணர்த்திய **வேதமுமே.** 2

**வேதமும்** வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமும் மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போத வுருவாகி யெங்கும் பொதிந்தவிந்து
நாதமும் நாதவண் டார்க்கும்வெண் டாமரை நாயகியே. 3

சரசுவதியந்தாதி] [கம்ப நாடர்

## 2. நான்மணி மாலை

### திருஞான சம்பந்தர்

நேரிசை வெண்பா

**பூ**வால் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவால் மொழிஞானப் பாலுண்டு—நாவால்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமலமே **வீடு.** 1

### திருநாவுக்கரசர்

கலித்துறை

**வீட்டிற்கு** வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்த!பொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனுமொப் பீரெப் **படியினுமே.** 2

### சுந்தரர்

விருத்தம்

படியிலா நின்பாட்டில் ஆரூர !
நனிவிருப்பன் பரமன் என்ப(து),
அடியனேன் அறிந்தனன்;வான் தொழும்ஈசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே. 3

### மாணிக்கவாசகர்

நேரிசை ஆசிரியப்பா

'விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ,
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ,
யாதோ சிறந்த(து)?' என்குவீ ராயின்,
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம் ;
திருவா சகமிங் கொருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி,
மன்பதை உலகில் மற்றையர் இலரே ! 4

நால்வர் நான்மணி மாலை] [சிவப்பிரகாச சுவாமிகள்

## 3. தமிழ் விடு தூது

மண்ணிற் புகழுருவாய் வாழ்வதற்கும் வாழுநர்
விண்ணிற்போய்த் தேவுருவாய் மேவுதற்கும்—எண்ணியுனைக்
கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடும்;உனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால்;—தண்டமிழே !

ஈங்குனது சங்கத்தால் ஈசர் உயர்ந்தாரோ,
ஓங்குமவ ரால்நீ உயர்ந்தாயோ ?—பூங்கமல
வீடாளும் வாணியங்கை மேலே இருந்தாயோ,
ஏடாக உன்மேல் இருந்தாளோ?—ஆடரவத்
தாழ்பாய லாளரைநீ தானே தொடர்ந்தாயோ,
சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ?—வாழ்வேயென்(று)
ஓதிமுனி கேட்க உனை முருகர் சொன்னாரோ,
சோதி யவரைநீ சொற்றனையோ ?—பேதியா
நேசருனக் கேபொருளாய் நின்றாரோ, நீள்மதுரை
வாசருக்கு நீபொருளாய் வந்தாயோ ?—பாசமுறும்
என்செய்தி நீகண் டிரங்குவது நீதியல்லால்,
உன்செய்தி நானோ உரைசெய்வேன்?—இன்சொல்லாய் !
‘ கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக,’ என்ற—சொற்குள்ளே
எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற
வல்லாய் ! உனக்குரைக்க வல்லேனோ ?—**நல்லாய்!கேள் :**
அந்தரலோ கத்தின்மே லானதிரு வாலவாய்ச்
சுந்தர மீனவனின் சொற்படியே—வந்து
துறவாதே சேர்ந்து சுகானந்த நல்க
மறவாதே தூதுசொல்லி வா.

## 4. கலம்பகம்

### குறம்

ஒன்று மூன்று நாமு ரைக்க
வந்து கேளு மரிவைமீர் !
உதய மான சுளகு நெல்லும்
ஒற்றை பட்ட தாதலால்
கன்று மானு மழுவு மாக
ஒருவர் வந்து தோன்றினர் :
கண்ட மட்டி லேக றுப்பர்
கைக்க பால ரவரையும்

சென்று நாடி லருணை மீது
காண லாகும் ; நாமமும்
தேவ ராயர் ; அவர லாது
தெய்வம் வேறு கண்டிலேம் !
நின்று வாடு மிவள்த ஞசை
இடர்த விர்ப்ப ராதலால்
நீறு கொண்டு மூன்றி ரேகை
நெற்றி மீதி லெழுதுமே.

திருவருணைக் கலம்பகம்] [சைவ எல்லப்ப நாவலர்

## 5. பிள்ளைத்தமிழ்

### முத்தப்பருவம்

**ம**ருவாய் வனசத் திறையவனைச்
சிறையுட் பிணித்த பருவத்தே
மகரக் கடலே முடுத்தபெரும்
புவனக் குருவாய் வருவார்க்கும்
குருவாய் அம்பொற் செவிதாழ்த்துக்
குடிலை யுரைக்கும் படியுரைத்த
கொற்றங் கேட்டெம் பெருமாட்டி
நித்தங் களிக்கும் குலவிளக்கே!
'அருவாய் மதனைப் பொருவார்க்கும்
அறியாப் பொருளை அறிவித்த
அமிர்தப் பவள மிதுவோ?' என்(று)
அருகே தனது முகம்நீட்டித்
திருவாய் முத்தந் தருவாட்குத்
திருவாய் முத்தந் தருவாயே!
செய்கைக் கரசே! மயிற்கரசே!
திருவாய் முத்தந் தருவாயே ! 1

சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்] [அந்தகக்கவி வீரராகவ முதலியார்

பொங்குங் கருணைப் புதுவெள்ளப்
புணரி யெழுந்து திரையெறிந்து
பொறிபோம் நெறியில் உளம்செலுத்தாப்
புனித அடியார் குழாமடுக்க
எங்கும் பரந்து பெருக்கேற
ஏனையாள் வாத வூரடிகள்
இயற்செந் தமிழின் அமுதருந்தும்
எங்கோன் செவிகள் குளிர் தூங்கக்
கொங்குந் திணர்கொள் பொங்கர்வனக்
குயில்நாண் பொருந்த மதர்நோக்கம்
கொள்ளா வதனம் கோட்டிநறுங்
குதலை ததும்பப் பேசுநறுந்
தங்குங் குமுத மலர்வாயால்
தாயே! முத்தம் தருகவே!
தானப் பொருப்பு வனந்தழையத்
தழைந்தாய்! முத்தந் தருகவே! 2

அகிலாண்டவம்மை பிள்ளைத்தமிழ் — மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

# VI. வருணனை

## 1. மலை

உலகில் எங்கணும் உயரிய வரைகளின் ஓங்கி
அலகி லாவளம் உடையதாய் அழகிதாய் அறவோர்
நிலவ நின்றதாய் நீடிய நெறியதாய் நிலையாய்
இலகு பற்பல வளத்ததாய் எழிலுறும் இமயம். 1

பொன்னின் கோட்டது; புனிதவெண் கோட்டது; புரைதீர்
மன்னு மானச வாவியும் உடையது; வரைப்பில்
துன்னும் ஆனினம் மானினம் முதலிய துலங்கப்
பன்னு சீரது; பேரது பனிவரை இமயம். 2

கங்கை யென்றுல கேத்திடு கடவுள்மா நதியும்
பொங்கு நான்முகன் புத்திரை எனும்பெயர்ப் புனலும்
மங்கி டாதுபாய் சிந்துவும் வளம்பல மலிய
எங்க ணும்பரந் திழிபுன லுடையதால் இமயம். 3

—கா. ரா. நமச்சிவாய முதலியார்

## 2. யாறு

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளித்து தண்ணென்(று)
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
விரியினை வீரர் கண்டார்.

—கம்ப நாடர்

## 3. நாடு

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதம்என்(று) இசையால் திசைபோய துண்டே.

—திருத்தக்க தேவர்

## 4. சூரியோதயம்

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ!
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈர்ம்பனி நனைந்ததம் இருஞ்சிற(கு) உதறி;
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி(று) உறவதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே!

—தொண்டரடிப்பொடியாழ்வார்

## 5. அந்தி மாலை

மஞ்சார் மலைவா ரணமொத் ததுவானி னோடும்
வெஞ்சா யையுடைக் கதிர்அங் கதன்மீது பாயும்
பஞ்சா னனமொத் ததுமற் றதுபாய வூறுஞ்
செஞ்சோ ரியெனப் பொலிவுற் றது செக்கர் வானம்.

—கம்ப நாடர்

# VII. தனிப்பாடல்கள்

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தா!நின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார். 1

—காளமேகப் புலவர்

வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாய்அன்னை யே!எனக் கேதுங் கொடுத்திலையே! 2

—பொற்களந்தை-படிக்காசுத் தம்பிரான்

ஒருபாதி மால்கொள மற்றொரு பாதி யுமையவள்கொண்(டு)
இருபாதி யாலு மிறந்தான் புராரி; இருநிதியோ
பெருவா ரிதியிற் பிறைவானிற் சர்ப்பம் பிலத்திற்கற்ப
தருவான போச! கொடையுன்கை ஓடென்கைத் தந்தனனே. 3

—பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

# குறிப்புரை

## I. இறை வணக்கம்

தாயுமானவர் திரிசிராப்பள்ளியில் அரசு செலுத்திய விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் அரசவையில் கணக்கராயிருந்த கேடிலியப்பப்பிள்ளை என்பவரின் புதல்வருள் இரண்டாமவர்; தந்தையாருக்குப் பிறகு தாம் அத்தொழிலில் அமர்ந்தார். ஆயினும், இவர் மனம் எப்போதும் ஞானத்தை நாடியிருந்தது; ஆதலால், திருமூலர் மரபில் தோன்றிய மௌனகுரு என்பவரிடம் உபதேசம் பெற்றார். இவர் தம் மனைவியாரான மட்டுவார் குழலியம்மையார் இறந்தவுடனே துறவறம் பூண்டார். இவர் ஞான யோகத்தில் ஈடுபட்டு இராமநாதபுரத்தைச் சேர்ந்த இலட்சுமி நகரத்தின் சோலையொன்றில் கி. பி. 1742ல் இறுதி எய்தினர். இவர் முத்தி பெற்ற ஆண்டு 1659 என்று சிலரும் 1759 என்று சிலரும் கூறுவர். இவர் பாடல்கள் பொதுமை வாய்ந்தவை.

அருள் - கருணை, ஆர் அமிர்தம் - பொருந்திய அமுதம், பூரணம் - முழுமுதல், புனிதம் - தூய்மை, கருதரிய - நினைத்தற்கு அரிய, மேவி - பொருந்தி, விரி - மிகுதியான, வினை - நல்வினை தீவினை, திரள் - கூட்டம், விழுப்பொருள் - மேலான பொருள்.

## II. தமிழ் மொழி வாழ்த்து

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கி. பி. 1855ல் ஆலப்புழையில் பிறந்தார். இவர் தந்தையார் பெருமாள் பிள்ளை என்பவர். சுந்தரம் பிள்ளை, M.A. பட்டம் பெற்றவர்; திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் தத்துவ நூற் பேராசிரியராய்த் தொண்டாற்றியவர்; தமிழில் வல்லவர்; ஆராய்ச்சித் திறம் படைத்தவர்; 1897ல் மறைந்தார். இச்செய்யுள் இவர் இயற்றிய பெரும்பாலும் ஆசிரியப்பாவால் அமைந்த மனோன்மணீயம் என்னும் நாடகத்தில் உள்ள தமிழ் வாழ்த்து.

நீர் ஆரும் - நீர் பொருந்திய, நிலமடந்தை - பூமி தேவி, எழில் - அழகு, சீர் ஆரும் - சிறப்புப் பொருந்திய, வதனம் - முகம், நுதல் - நெற்றி, திலகம் - பொட்டு, தெக்கணம் - தெற்கு, வாழ்த்துதும் - வாழ்த்துவோம்.

## III. அறவுரை

### 1. திருக்குறள்

திருக்குறள் என்பது கடைச்சங்கம் மருவிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் குறள் வெண்பாக்களால் இயன்றிருத்தலால், குறள் எனப் பெயர் பெற்றது. தமிழ் மறை, பொதுமறை, பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, உத்தர வேதம் முதலிய பெயர்கள் திருக்குறளுக்கு வழங்கி வருகின்றன.

திருவள்ளுவர் வாழ்க்கை பற்றிய உண்மைகள் தெரியவில்லை. ஆயினும், அவரைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவை நம்பத் தக்கவையல்ல. 'வள்ளுவர்' என்னும் பெயர் அவரது தொழில் பற்றி வழங்கிய பெயர் என்றும், அவர் சென்னை மயிலையிலும் மதுரையிலும் வாழ்ந்தார் என்றும் கொள்ளலாம். அவருக்கு நாயனுர், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், பெருநாவலர் முதலிய சிறப்புப் பெயர்கள் வழங்கி வருகின்றன.

1. அகரம் - 'அ' என்னும் எழுத்து, ஆதி பகவன் - ஆதியாகிய கடவுள், முதற்று - முதலாக உடையது.

2. 'கொல்' என்பது அசைநிலை. வாலறிவன் - மெய்யறிவினை உடையவன்.

3. அனைத்து அறம் - அவ்வளவினதே தருமம் என்பது, பிற - சொல்லும் வேடமும், ஆகுலம் - ஆரவாரம், நீர - தன்மையையுடையவை.

4. என்பும் - எலும்பும் (உடம்பும்).

5. நன்றி - நன்மை, நன்றல்லது - தீமை.

6. யா - யாவையும், சோகாப்பர் - துன்பப்படுவர், சொல்லிழுக்குப் பட்டு - சொற்குற்றத்திலே அகப்பட்டு.

7. மிகுதியால் - மனச் செருக்கினுல், மிக்கவை - தீயவைகளை, தம் தகுதியால் - தமது பொறுமையினுல்.

8. பாராட்டுவானை - (பல தரமும்) சொல்பவனை, மகன் எனல் - மனிதன் என்று சொல்லாதே, மக்கள் - மனிதருக்குள்ளே, பதடி - பதர், எனல் - என்று சொல்லக்கடவாய்; ('எனல்' என்பது உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வந்த வியங்கோள் வினைமுற்று.)

9. நல்லாறு - (மேல் உலகத்துக்குச் செல்லும்) நல்லவழி, எனினும் - என்பவர் உண்டாயினும், தீது - குற்றம்; ('கொளல் நல்லாறெனினும் தீது,' என்று மாற்றுக).

10. வலியார் முன் - (தன்னைக்காட்டிலும்) வலியவர் முன்னே, தன்னை - (அஞ்சி நிற்கும்) தனது நிலையை.

11. பொய்யற்க - பொய்யாது ஒழிக.

12. தான் காக்கின் - தான் காக்க நினைத்தானுகில், கொல்லும் - கெடுக்கக்கூடிய துன்பங்களை அடைவிக்கும்.

13. ஒறுத்தல் - தண்டித்தல், நன்னயம் - இனிய மகிழ்ச்சி, விடல் - மறத்தல்.

14. அப்பொருள் - அப்பொருளிலிருந்து.

15. கசடற - குற்றம் ஒழிய, கற்பவை - கற்கப்படும் நூல்களை, அதற்கு - அக்கல்விக்கு, தக - தகுதியாக, நிற்க - நிற்கக் கடவன்.

16. ஆகாறு - (ஆகு + ஆறு) வருகின்ற வழி, இட்டிது ஆயினும் - சிறியதாயிருந்தாலும், போகாறு - (போகு + ஆறு) போகின்ற வழியளவு, அகலாக்கடை - அதிகரியாத போது.

17. நாடி - ஆராய்ந்து, மிகை - மிகுந்தவைகளை, மிக்க - மிகுந்தவைகளாலே, கொளல் - அறிந்துகொள்ளக்கடவன்.

18. ஆக்கம் - பொருள், அதர் - வழி, வினாய் - கேட்டறிந்து, அசைவிலா - தளர்ச்சியில்லாத, உழை - இடத்தில்.

19. திருவினை - செல்வத்தை, ஆக்கும் - வளர்க்கும், முயற்றின்மை - முயற்சி இல்லாமை.

20. அற்றம் - அவமானத்தை, மறைக்கும் - மறைப்பர், பெருமை - பெருமை உடையவர், சிறுமை - சிறுமையுடையவர்.

## 2. நாலடியார்

**நாலடியார்** என்பது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆக்கப் பெற்றிருத்தலால், இந்நூல் இப்பெயர் பெற்றது. இது நானூறு வெண்பாக்களைப் பெற்றிருப்பதால் இதற்கு **நாலடி நானூறு** என்னும் பெயரும் வழங்குகிறது. 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி,' என்னும் பழமொழியால் இதன் பெருமை விளங்கும். நாலு - நாலடி, இரண்டு - குறள். சமணப் புலவர் பலரால் பாடப்பெற்ற வெண்பாக்களைப் **பதுமனார்** என்பவர் பால், இயல், அதிகாரங்களாக வகுத்துள்ளார்.

1. அமைவுடைய - தகுதியானவற்றை, குருகின் - அன்னப் பறவை போல, தெரிந்து - ஆராய்ந்து.

2. களர் நிலம் - உவர் நிலம், நெல்லின் - நெல்லைப்போல, விழுமிதா - சிறந்த பொருளாக, கடை நிலத்தோர் - இழிந்த வகுப்பினர், தலை நிலத்து - மேலான இடத்தில்.

3. நண்பொரீஇ - (நண்பு + ஒரீஇ) நட்பை நீக்கி, கேண்மை - நட்பு. கெழீஇக்கொளல் - தழுவிக்கொள்ளுதல்.

4. உறுபுனல் - வெள்ளநீர், அறுமிடத்து - நீர் இல்லாத போதும், ஊற்று உழி - ஊற்றுக்குழி, ஆறு - நதி, ஆற்றி - கொடுத்து, உலந்தக் கண்ணும் - வருந்திய போதும், செயற்பாலவை - செய்தற்குரியவற்றை.

5. ஒன்றோ - ஒன்றும் (எண்ணிடைச் சொல்), ஆள்வினை - முயற்சி.

## 3. திரிகடுகம்

'**திரிகடுகம்**' என்பது, காரணப்பெயர். **சுக்கு மிளகு திப்பிலி** என்னும் மருந்து வகை மூன்றுக்கும் 'திரிகடுகம்' என்பது பெயர். இந்நூலில் வரும் ஒவ்வொரு பாட்டிலும் மும்மூன்று நீதிகள் கூறப்படுகின்றன. திரிகடுகம் என்னும் மருந்து வகை மக்களின் உடற்பிணியை நீக்குவதுபோல, இந்நூல் மக்களின் அறியாமை என்னும் பிணியை நீக்க வல்லது என்பது தோன்ற, இப்பெயர் அமைந்துள்ளது.

இதன் ஆசிரியர் **நல்லாதனார்** என்பவர். அவரைப்பற்றிய வரலாறு ஒன்றும் தெரியவில்லை.

1. கணக்காயர் - உபாத்தியாயர், பிணக்கு - மனவேற்றுமை, அவைக்களம் - சபை, பாத்துண்ணும் - பகிர்ந்து உண்ணும், அயல் இருப்பு - அண்டையிற்குடியிருத்தல், பயத்தல் - உண்டாக்குதல்.

2. தாளாளன் - முயற்சியுள்ளவன், கோளாளன் - நூற்பொருளைக் கொள்பவன், கேள் - நட்பு.

3. வான் புகழ் - உயர்ந்த புகழ், நட்டான் - நிலை நாட்டியவன், மாசு இல் - குற்றமற்ற, கூவல் - கிணறு, தொட்டான் - தோண்டியவன்.

4. வெகுண்டு - கோபித்து, நோன்பிலி - விரதமில்லாதவன், காமுற்று - ஆசை கொண்டு, செவிக்குற்றம் - கேள்விக்குற்றம்.

5. நூற்கேலா - (நூலுக்கு + ஏலா) சாஸ்திரத்திற்குப் பொருந்தாத, வெண்மொழி - பயனற்ற சொல், சிற்றினம் - கீழ் மக்கள், கடன் - கடமை.

### 4. அறநெறிச்சாரம்

இந்நூலை இயற்றியவர் **முனைப்பாடியார்** என்பவர். இவர் வரலாறு தெரியவில்லை. இவர் தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடைப்-பட்ட திருமுனைப்பாடி நாட்டில் இருந்தவர் என்பது இவர் பெயரால் தெரிகிறது. இவரது சமயம் **சமணம்**; இவர் காலம் ஏறத்தாழ 500 ஆண்டுகட்கு முற்பட்டதாதல் வேண்டும். தரும வழிகளுள் சிறந்த-வற்றைத் திரட்டிக் கூறுவதால் இந்நூலுக்கு இப்பெயர் வழங்கப்பட்டது.

1. களை கட்டு - களையை நீக்கி, எரு அட்டி - எருவையிட்டு, பைங் கூழ் - பசுமையான பயிரை, சிறுகாலை - இளமையில்.

2. வைகலும் - தினந்தோறும், சால - மிகவும், கீழ்கள் - கீழ் மக்கள், வல்லென்னும் - கடினமாகும்.

3. பிரிவுண்மை - பிரிந்து போகும் உண்மை, உள்ளி - எண்ணி, செயிரும் சினமும் - பகையும் கோபமும், கடிந்து - நீக்கி.

3. ஏமாப்பு - பாதுகாப்பு.

5. அலர் கதிர் - விரிந்த கிரணங்கள், ஞாயிறு - சூரியன், கைக்குடை-சிறிய குடை, அச்சாணி - கடையாணி (இன்றியமையாதது.)

## IV. தொடர்நிலைச் செய்யுள்

### 1. நளவெண்பா

**நளவெண்பா** என்னும் நூல் 425 வெண்பாக்களால் இயன்றது. இது **சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம்** என்னும் மூன்று பிரிவுகளை உடையது. இதை இயற்றியவர் **புகழேந்திப் புலவர்**. இவர் தொண்டை மண்டலத்திலே பொன்விளைந்த களத்தூரிலே பிறந்தவர்; வேளாள மரபினர்; **சந்திரன் சுவர்க்கி** என்ற சிற்றரசனுல் ஆதரிக்கப்பட்டவர். இவர் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்-டென்பர்.

1. காமர் - அழகு, கயல் - கெண்டை மீன், காவி - குவளை மலர், முகை - அரும்பு, பூமடந்தை - இலக்குமி, தகைமைத்து - பெருமையுடையது, சாகரம் - கடல்.

2. சந்திரன் சுவர்க்கி - மள்ளுவநாட்டுச் சிற்றரசன், தாமரையாள் - இலக்குமி, வைகும் - தங்கும், காமரு - அழகிய, முரணை நகர் - மள்ளுவ நாட்டின் தலை நகர்.

3. சீதம் - குளிர்ச்சி, மதிக்குடை - சந்திர வட்டக்குடை, தாதவிழ் (தாது + அவிழ்) மகரந்தம் சிந்தும், தாரான் - மாலையுடையவன், அரு - கூட்டும் - அருகில் இருந்து (பால் சோற்றை) ஊட்டும், ஆடல் - வெற்றி.

4. வாங்கு - வளைந்த, வளை - சங்கவளையல், வதனமதி - முகமாகிய சந்திரன், பூத்த - தோன்றிய, பூங்குவளை - அழகிய குவளை மலர் போலும் கண்கள், தேங்குவளை - தேன் பொருந்திய குவளை மலர்.

5. நீணிறம் - (நீள் + நிறம்) மிகுந்த நிறம், பெயர - மாறுதலடைய, தாணிறம் - (தாள் + நிறம்) பாதத்தின் நிறம், பொய்கை - குளம், தலம் - இடம், மாணிறம் - (மாண் + நிறம்) மாட்சிமை பொருந்திய நிறம், அப்புள் - நீரினுள், முளரித்தலை - தாமரையில், வைகும் - தங்கும், அன்னப்புள் - அன்னப்பறவை.

6. ஆயிழையார் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையுடைய பெண்டிர், மலங்கிற்று - துன்புற்றது, வான் - பெருமை பொருந்திய, கிளை - சுற்றம்.

7. அஞ்சல் - அஞ்சாதே, அனமே - அன்னமே (இடைக்குறை விகாரம்), அணி - அழகிய, வஞ்சி - ஒரு கொடி, விஞ்சியது - சிறந்தது, மாண - மாட்சிமை பொருந்த, தார் - மாலை, மன் - அரசன்.

8. நாற்குணம் - (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும்) நான்கு பெண்மைக் குணங்கள், நாற்படை - (தேர், யானை, குதிரை, காலாள் என்னும்) நான்கு சேனைகள், ஐம்புலன் - (காட்சி, மோத்தல், கேட்டல், சுவைத்தல், தொட்டறிதல் என்னும்) ஐந்து உணர்வுகள், அமைச்சு - மந்திரி, ஆர்க்கும் - ஒலிக்கும்.

9. வாமம் - அழகு, சேமம் - பாதுகாப்பு, ஒடுங்கிடையாள் - மெல்லிய இடையை உடைய தமயந்தி.

10. நன்னுதல் - அழகிய நெற்றியை உடைய தமயந்தி (அன்மொழித் தொகை), என் நாடல் - என்ன விரும்புவது.

11. தண் அளி - குளிர்ந்த கருணை, மேனிலம் - தேவலோகம், நானிலம் - (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும்) நான்கு வகை நிலங்களை உடைய பூமி.

12. வாவி - குளம், ஆவி - உயிர், காவினிடை - சோலையில், பார் வேந்தன் பாவை - தமயந்தி.

13. வார் முரசம் - வார்களால் வரிந்து கட்டப்பெற்ற முரசம், அறைக - அடிக்க, பைங்கமுகு - பசுமையான பாக்கு மரம், வேந்தர்மேல் - வேந்தர்களிடம், தூதோட விட்டு - தூதனுப்பி.

14. புள் - பறவை, உறையும் - வசிக்கும், பூங்கமலம் - அழகிய தாமரை, வாவி - தடாகம், தெள் அரிக்கண் - தெளிவான செவ்வரிகளை யுடைய கண், பூமகள் - சரசுவதி, பொன் - இலக்குமி, பொருவேல் - போர் புரியும் வேலாயுதம் (வினைத்தொகை), கோமகள் - அரசன் மகள்.

15. கெட்ட சிறு மருங்குல் - சுருங்கிய சிறு இடை, கீழ் மகளிர் - மள்ளப் பெண்கள், நீள் வரம்பு - (கழனிகளின்) நீண்ட வரப்பு, இட்ட - எறிந்த, கட்டி - மண் கட்டிகள்.

16. மால் வரையை - உயர்ந்த மலையின் சிறகுகளை, வச்சிரம் - வச்சிராயுதம், ஈர்ந்தான் - அரிந்தவனாகிய இந்திரன், கோல்வளை - திரட்சியான வளையலையணிந்த தமயந்தி, விண்ணாடு - தேவலோகம், மண்ணாடு - பூலோகம்.

17. மங்கை வயம் - தமயந்தியின்மீது, மருவுகின்ற - பொருந்துகின்ற, காவலர் - அரசர், சயமரம் - சுயம்வரம்.

18. பொன்னின் - இலக்குமியை ஒத்த, புக்காள் - புகுந்தாள், மின்னிறத்து - மின்னலைப் போன்ற பிரகாசமுள்ள, செய்ய தாள் - சிவந்த கால், சிறை - சிறகு, பொய்கை வாய் - குளத்தினிடத்து.

19. இன்ன பரிசு என்று - இன்ன தன்மையன என்று, அணங்கு - தெய்வப் பெண் போன்ற தோழி, தனிக்கொடி - ஒப்பற்ற பூங்கொடி போன்ற தமயந்தி.

20. ஈரிருவர் - நால்வர், பூவரைந்த - பூக்கள் சூட்டப்பெற்ற, ஊசலாடுற்றாள் - தடுமாற்றமடைந்தாள்.

21. காசினி - பூமி, தோய்தலால் - படிதலால், வண்ணம் - அழகிய நிறம், தாமரை விரும்பும் நன்னுதல் - தாமரை மலரைத் தனக்கு இருக்கையாக விரும்பும் நல்ல நெற்றியையுடைய இலக்குமி.

22. வெள்கி - வெட்கமடைந்து, சுளிக்க - கோபிக்க, கண்ணகல் - இடம் அகன்ற, ஞாலம் - உலகத்தார் (இடவாகு பெயர்), களிகூர - மகிழ்ச்சி பொங்க, வன்மாலை - கொடிய மயக்கத்தை.

## 2. அரிச்சந்திர புராணம்—மயான காண்டம்

இந்நூலாசிரியர் ஆசுகவி வீர கவிராயர் என்பவர்; இராமநாத - புரத்தைச் சேர்ந்த நல்லூரில் பிறந்தவர்; விரைவாகக் கவிபாடும் திறமை பற்றி ஆசு கவி என வழங்கப்பட்டார். இவர் சைவர்; இப்புராணத்தைத் திருப்புல்லாணித் (தர்ப்பசயனம்) திருமால் கோவிலில் கி. பி. 1524ல் அரங்கேற்றினர். இவர் அவலச் சுவை ததும்பும் பாக்கள் இயற்றுவதில் தலை சிறந்தவர்.

அரிச்சந்திர புராணம் 10 காண்டங்களை உடையது.

1. கன்னி - சந்திரமதி, துன்னு - நெருங்கிய, புரிசை - மதில், இறுத்தான் - தங்கினன்.

2. உம்பர் கோன் - இந்திரன், கோதிலான் - குற்றமற்ற அரிச் சந்திரன், கௌசிகன் - விசுவாமித்திர முனிவன், ஊறனைத்தும் - இடையூறுகள் எல்லாம், இசைத்தான் - கூறினன்.

3. தாழும் - தொங்குகின்ற, வார்சடை மாமுனி - நீண்ட சடையை யுடைய வசிட்ட முனிவர், தும்புரு - தேவர்களுள் இசைவல்லவன், நாரதர் - முனிவர்களுள் இசை வல்லவர், வச்சிரபாணி - வச்சிராயுதம் தாங்கிய இந்திரன், ஏழு பாலர் - அட்டதிக்குப் பாலகரில் இந்திரன் நீங்கலான மற்றவர் (அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்), அந்தரத்தில் - ஆகாயத்தில்.

4. நோதகவு - துன்பம், எய்தலென் - அடைவது என்ன காரணம், உந்தநாடு - (உம் + தம் + நாடு) உமது நாடு, இவ்வுயிர்கள் - லோகிதாசன் உயிரும் சந்திரமதி உயிரும்.

5. அமரரும் - தேவரும், யாரை - யாருக்கு (உருபு மயக்கம்), ஏழைமை - கீழ்மை.

6. சேய்மை - தூரம், அண்மை - சமீபம், வாய்மை - சத்தியம், புறத்தை - உடலை, நோய்மை - துன்பம், செய்யினும் - அடையினும், நோன்பு - விரதம்.

7. புன் புலால் - அற்ப மாமிசம், யாக்கை - உடல், மருண்டு - மயக் குற்று, கழறுவது - கூறுவது.

8. இம்மை - இப்பிறப்பு, அம்மை - வருபிறப்பு, வீடு - மோட்சம், மறை - வேதம், புலம் கொள - அறிவிற்பதிய, இயம்பும் - சொல்லும், முரணி - மாறுபட்டு, எரிவாய் வெம்மை கூர் நரகு - கும்பி என்னும் நரகம்.

9. பதி - நாடு, கதி - நற்கதி, கட்டுரை - சொன்னசொல் (சத்தியம்), அருந்தவன் - விசுவாமித்திரன்.

10. வாசவன் - தேவேந்திரன், மாமுனிவனை - விசுவாமித்திரனை, கூய் - கூவி, அறைந்த - சொன்ன, முகிலிடம் - மேகம் பொருந்திய ஆகாயம்.

11. வாசத்தார் - மணம் பொருந்திய மாலை, பாசத்தால் - கயிற்றால்.

12. வழக்கின் - வழக்கத்தால், பரவி - வணங்கி.

13. நீத்தம் - தண்ணீர், புற்புதம் - நீர்க்குமிழி, சுடர் - பிரகாசம் பொருந்திய, வாட்படை - வாளாயுதம்.

14. பசுபதி - சிவபெருமான், இகல் - வெற்றி.

15. நிறை - கற்பு, இறுதியின்மை - இறப்பின்மை, பேதை - பெண் (சந்திரமதி), வடிவாள் - கூரிய வாள்.

### 3. திருவிளையாடற்புராணம்—விறகு விற்ற படலம்

திருவிளையாடற்புராணம் பரஞ்சோதி முனிவரால் இயற்றப் பட்டது. இதன் முதல் நூல் 'ஹாலாஸ்ய மஹாத்மியம்' என்னும் வடமொழிப் புராணம் என்பர். இது மதுரையில் எழுந்தருளியிருக்கும்

சோமசுந்தரக் கடவுள் புரிந்த 64 திருவிளையாடல்களைக் கூறுவது ; **மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம்** என்னும் மூன்று காண்டங்களை உடையது. இப்பாடப்பகுதி இரண்டாம் காண்டத்தில் உள்ளது. திருவிளையாடற்செய்திகளைக் கூறும் வேறு புராணங்களும் தமிழில் உண்டு. அவை திருவாலவாயுடையார் திருவிளையாடல், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம் என்பன.

பரஞ்சோதி முனிவர் வேளாள மரபினர் ; சைவ சமயத்தவர் ; சுமார் 300 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

1. ஓச்சி - செலுத்தி, பொன் தலம் காவலானில் - தேவேந்திரனைப் போல (பொன்தலம் - தேவலோகம்), விறல் - வெற்றி, விஞ்சை - வித்தை.

2. பூழியர் பெருமான் - பாண்டியன், கோயில் - அரண்மனை, வேத்தவை - அரச சபை, சூழி - முகபடாம், மால்-பெரிய, யானையான் - யானையையுடைய பாண்டியன், ஏழிசை - ச, ரி, க, ம, ப, த, நி (குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்றல் தமிழ் வழக்கு, மழலை - இனிய ஓசை, இடந்தழீஇ - இடக்கையால் பற்றி.

3. முகை - அரும்பு, உடைந்து - மலர்ந்து, அவிழ்ந்த - விரிந்த, துளக்கி - அசைத்து, தூசு - ஆடை, பகல் அவிர் - ஒளி வீசும், உணக்கருவி - உணவுப் பொருள்கள், இகல் - மனவேறுபாடு.

4. மீனவன் - பாண்டியன், செருக்கினும் - கருவத்தாலும், மானம் - பெருமை, தானம் - (ஏழு சுரங்கள் எழும்) இடம், தருக்கும் - கருவங்கொண்டுள்ள, கோன் - வரகுண பாண்டியன் என்னும் அரசன், உழையர்- அருகிருப்பவர், கொணர்திர் - கொண்டு வாருங்கள்.

5. உவரி - கடல், (உக்கிர குமார பாண்டியன் கடல் சுவற வேல் எய்தவன் ஆதலின், அவன் வழி வந்த வரகுண பாண்டியனும், 'உவரி வென்றோன்' எனப்பட்டான்), கௌரியன் - பாண்டியன், பாணி - தாளம், இசை வல்லான் - ஏமநாதன், பாணர் கோன் - பாணர் தலைவன் (பாண பத்திரன்).

6. தென்னவர் - பாண்டியர், திருவுளவலன் - திருவுள்ளத்தில் உள்ள அன்பின் வலியாலும், கூடல் - மதுரை, முன்னவன் - சோமசுந்தரக் கடவுள், வீறு - மேம்பாடு, வரைந்து - காலம் குறித்து.

7. இசை வல்லான் - பாணபத்திரன், அனையான் பாங்கர் - ஏமநாதன் பக்கத்தில் இருந்து, பாண் மக்கள் - இசை கற்கும் பாணர்கள், மல்லல் - வளம் பொருந்திய, ஆவணம் - கடை வீதி, கவலை - கவர் வழி (சந்திகள்), மன்றம்-பொதுவிடம், மறுகு - நீண்ட தெரு, வீறு - பெருமை.

8. இசை வல்லான் - ஏமநாதன், வவ்வு இசை - கற்றுக்கொள்ளும் இசை, கெட்டேன் - தோற்றேன், எற்றோ - எத்தன்மையதோ, எவன் - எப்படி, திவவுக்கோல் - வார்க்கட்டினை உடைய யாழ்.

9. மையணி - கருமை தங்கிய, மிடற்றினன் - கண்டத்தை உடையவன் (சிவபெருமான் - நீலகண்டன்), வேண்டுகொண்டு - வேண்டுதலைச்

செய்துகொண்டு, தோய்ந்த - படிந்த, பொய்யறு மனத்தான் - பாண பத்திரன்.

10. இரந்தவன் - யாசித்த பாணபத்திரன், மாற்ற - நீக்க, விருத்தன் - முதியவன், அறிவு - ஞானம், திருத்தனுர் - குறைபாடற்றவர் (சிவ-பெருமான்).

11. தறிந்த - தறிபட்ட, இந்தனம் - விறகு, பங்கி - (ஆண்) தலை முடி, பறிந்து - பறிக்கப்பட்டு (உதிர்ந்து), மறிந்த - மடங்கி வீழ்கின்ற, பங்கு - (இடப்) பக்கத்தில், உறைமங்கை - தங்கியுள்ள பார்வதி, எறிந்த - வெட்டிய.

12. கொள்ளுநர்க்கு - வாங்குபவர்க்கு, அருவிலை - பொருந்தாத விலை, மிடைந்த - நெருங்கிய, கவலை - சந்திகள், முடுக்கர் - முடுக்கு கள் (மூலைகள்), இசை வலான் - ஏமநாதன், கடைத்தலை - வீட்டு வாயில்.

13. முயல் கறை - சந்திரனில் தோன்றும் களங்கம், மங்குல் - முகில், ஓதி - கூந்தல், ஆரம் - முத்துமாலை, கொண்கன் - கணவன், பொருப்பன் மங்கை - பருவதராஜன் மகளாகிய பார்வதி.

14. எழீஇ - எழுப்பி, மடுத்து - சேர்த்து, இசை வல்லான் - ஏம நாதன்.

15. வண்டு அறை - வண்டுகள் ஒலிக்கின்ற, கொன்றையான் - சிவபெருமான், பண்டரு - (பண் + தரு) இசை உண்டாக்குகின்ற, விபஞ்சி - வீணை, முண்டக மலரோன் - தாமரை மலரில் வசிக்கும் பிரமன், புரந்தரன் - இந்திரன்.

16. கனி - கனிவாகிய, இசைக்கிழவன் - பாணபத்திரன், வினைஞன் - தொழில் செய்பவன், இசைக்கிழமை - இசை பாடும் தொழில் உரிமை.

17. ஓம்புகேன் - காப்பாற்றுவேன், நைவளம் - ஒரு பண், பாடும் - பாடுவான்.

18. விரை - மணம், சார் - பொருந்திய, விகிர்தன் - எல்லாம் வல்ல கடவுள், புரை - குற்றம்.

19. பைத்தலை - படத்தை உடைய தலை, பொறி - புள்ளி, மஞ்ஞை - மயில், நால்வாய் - தொங்குகின்ற வாயை உடைய, மத்தமான் - மதம் பொருந்திய யானை, அரிமான் - சிங்கம், புல்வாய் - மான், வல்லியம் - புலி, மருட்கை - வியப்பு, தலைத்தலை மயங்கி - இடந்தோறும் கூடி, மா - மிரு கம், பட்ட - பட்டன, அம்மா - வியப்பிடைச் சொல்.

20. வீழ் - விழுது, வான் சினை - பெரியகிளை, ஒன்றறி மரங்கள் - ஓர் அறிவினை உடைய மரங்கள், போது - அரும்பு, கண்ணீர் - (கள் + நீர்) தேனுகிய நீர், மாது, ஓ - அசைகள்.

21. கண் இறை நுதலோன் - நெற்றிக்கண்ணை உடைய சிவபெரு மான், சாமகண்டம் - சாமகீதம் பாடிய மிடறு, முல்லைப் பண் - சாதாரி என்னும் இசை, சராசரம் - (சர + அசரம்) அசையும் பொருளும் அசை யாப் பொருளும், இசை வல்லான் - ஏமநாதன்.

22. சிந்தை தோயும் - மனம் அமைதற்குரிய, ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி; புலன்கள் - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை.

23. இம்பருள் - இவ்வுலகத்தில்.

24. இழுக்கிவிட்ட - நீக்கிவிட்ட, வழுக்கில் - குற்றமற்ற, பத்திரன் - பாணபத்திரன், அழுக்கமுற்று - மனம் புழுங்கி, பண்டர் - பண்பாடுவோர், வழிக்கொண்டான் - நடந்திட்டான்.

25. ஆடல் - வெற்றி, ஏற்று அழகர் - இடபத்தையுடைய சிவபெருமான், பாண் செய்து - பண் பாடி, பத்திரம் - பாதுகாவல், செய்தும் - செய்தோம்.

## 4. வில்லி பாரதம்—கிருட்டிணன் தூது

'பாரதம்' என்பது பரத வமிசத்தவர் வரலாற்றைக் கூறும் நூல். இதனை முதன்முதல் வேத வியாச முனிவர் வடமொழியில் இயற்றினர்; பிறகு கடைச்சங்க காலத்தை அடுத்திருந்த பெருந்தேவனர் தமிழில் இயற்றினர். அந்நூலிற்சில செய்யுட்களே இக்காலத்தில் கிடைத்துள்ளன. பின்னர் எட்டாம் நூற்றுண்டில் நந்தி வர்மன் காலத்திருந்த பெருந்தேவனர் பாரதத்தை வெண்பாவால் இயற்றினர். அந்நூல் முழுவதும் கிடைத்திலது. பின்னர் அகஸ்திய பட்டர் செய்த பால பாரதம் என்பதை முதல் நூலாகக் கொண்டு **வில்லிபுத்தூராழ்வார்** பாரதத்தின் முதல் பத்துப் பருவங்களைத் தமிழ் விருத்தப்பாக்களால் இயற்றினர். அதன் பின்னர் **நல்லாப் பிள்ளை** என்பவர் வில்லிபுத்தூராழ்வாரின் நாலாயிரம் பாடல்களோடு தாம் சுமார் ஆறுயிரம் பாடல்கள் செய்து விரிவாகப் பாரதத்தை இயற்றினர். ஆயினும், வில்லி பாரதமே பெரிதும் பயிலப்படுகின்றது.

வில்லிபுத்தூராழ்வார், திருமுனைப்பாடி நாட்டில், **சனியூரில், வீரராகவர்** என்ற வைணவப் பிராமணரின் புதல்வராய்த் தோன்றினர். இவர் வடமொழியும் தமிழ் மொழியும் நன்கு பயின்றவர்; சுமார் 450 ஆண்டுகட்கு முன் **வக்கபாகை** என்னும் பதியில் ஆட்சி புரிந்து வந்த **வரபதியாட்கொண்டான்** என்ற கொங்கர் கோமான் விருப்பத்திற்கிணங்கிப் பாரதம் பாடினர்.

1. சஞ்சயமுனி - திருதராட்டிரன் பாண்டவர்பால் தூதாக அனுப்பிய புரோகிதர், முனி - புரோகிதர், பாண்டவரால் துரியோதனன்பால் அனுப்பப்பட்ட தூதர், எஞ்சினர் - காலம் தாழ்த்தியவர், சோதி - ஒளி மயமானவன்.

2. உகளும் - புரளுகின்ற, பைவராய் - துன்பமுடையவராய், உய்வர் ஆர் - பிழைப்பவர் யார், உருத்தெழுந்து - கோபித்தெழுந்து, பொர - போர் புரிய, அவனிபர் - அரசர், அமரர்கோமான் - கிருட்டிணன்.

3. செயிர் - துன்பம், வெகுளி - கோபம், கயிரவம் - அல்லி மலர், பழனம் - கழனி, சந்து பட - சமாதானம் உண்டாக, அறத்தின் உருவம் போல்வான் - தருமன்.

4. அரவு உயர்த்தோன் - பாம்புருவம் பொறித்த கொடியைத் தூக்கிய துரியோதனன், வெய்யோன் - கொடியவன், இருநிலம் - பெரிய பூமி, எம் பிரான் - கிருட்டிணன்.

5. குரவர் - ஆசிரியர், கிளைஞர் - சுற்றத்தார், துணைவர் - தம்பியர், அரவம் - ஒலி பொருந்திய, கடல் ஆடை அவனி - கடலை ஆடையாக உடைய உலகம், கரவு - வஞ்சகம், தாதை - தந்தையாகிய திருதராட்டிரன், முனி - உலூக முனிவர், பல மூல சாகம் - பழமும் கிழங்கும் இலையும், நுகர்ந்து - உண்டு.

6. கோதிலான் - குற்றமற்ற தருமன், மொய்த்த -நெருங்கிய, முடுகி - விரைந்து, ஏசாரோ - ஏளனம் செய்ய மாட்டார்களோ, வஞ்சினம் - சபதம்.

7. வெம்பணி - கொடுமை பொருந்திய பாம்பு, மூதூர் - பழைய ஊராகிய அத்தினபுரம், நந்து ஊரும் - சங்கு மேயும், இலம் - வீடு (இல்லம்), சிந்துரம் - யானை, மருப்பு - தந்தம், ஒசித்த - ஒடித்த.

8. மூத்தோன் - தருமன், நாத்தோமில் - நாவில் குற்றம் இல்லாத, பூந்தவிசில் பூவை - மலர் ஆசனத்து இலக்குமி, புணரும் - பொருந்திய, புன்மை - இழிவு.

9. கானுள - காட்டில் வாழும்படி, கண்ணிலா அருள் இலி - குருடனை இரக்கமற்ற திருதராட்டிரன், பெருந்துணைவன் - துரியோதனன் (இகழ்ச்சிக் குறிப்பு), வானவர் கோன்தன் பதம் - இந்திரபதவி.

10. பவனம் - வாயு, பவன குமாரன் - வாயு புத்திரனை பீமன், போர் ஏறே - போரில் சிங்கம் போன்றவனே, இருநிலம் - பெரிய பூமி.

11. மறத்தண்டு - பலம் பொருந்திய கதாயுதம், மகவான் மைந்தன் - இந்திரன் புதல்வனை அருச்சுனன், சிலை - வில், இருவர் - நகுல சகாதேவர், இவள் - திரௌபதி, நேரார் - எதிர் நிற்க முடியாதவர் (பகைவர்), அவன் குடை - அவனது ஆட்சி.

12. மைக்காலம் - கார் காலம், முகில் - மேகம், ஊர்தி - வாகனம், வானவர் கோன் - இந்திரன், மதலை - புதல்வனை அருச்சுனன், முதல்வன் - தருமன்.

13. திகிரி - சக்கரம், திகிரியினுன் - சக்கரம் ஏந்திய கண்ணபிரான், பொறை வேந்தன் - தருமன்.

14. கான் நெறி - காட்டு வழி, கரந்துறைந்து - மறைந்து வாழ்ந்து, கடவநாள் - கழிக்கக் கடவனவாகிய நாட்கள், ஈனமிலா - குற்றமில்லாத.

15. இயம்பியது - கூறியது, புகல்அரிய - சொல்லுதற்கரிய, உணர்வு - அறிவு, திறல் - வெற்றி.

16. முதல்வன் - துரியோதனன், கொந்துற்ற - பூங்கொத்துப் பொருந்திய, குழல் - கூந்தல், அந்தம் - முடிவு, ஆதி மூர்த்தி - கண்ணபிரான்.

17. இகலோர் - பலம் உடையவர், விரகு - தந்திரம், பைவண்ணம் - பசுமையான நிறம், பயிலா வண்ணம் - நடைபெருதபடி, உய்வண்ணம் - (அனைவரும்) பிழைத்திருக்கும் வகையை, உரம் - வலிமை.

18. நீறு ஆக்கி - சாம்பலாக்கி, புரிந்தாய் - விரும்பினுய், புயல் வண்ணன் - மேகநிறமுடைய கிருட்டிணன்.

19. இகல் - பகை, அணங்கு - திரௌபதி, கார் ஆர் - கருமை பொருந்திய, களைந்து - நீக்கி, தளை - விலங்கு.

21. தாய - தாவியளந்த.

22. நின் பார்வை - உனது கருணை.

23. ஒன்றும் - பொருந்தும், கதிர் முடியான் - பிரகாசம் பொருந்திய முடியையுடைய சகாதேவன், ஓம் என்று - ஆகட்டும் என்று சம்மதித்து, ஓதாது - கூருமல்.

## V. சிறு நூல்கள்

### 1. அந்தாதி

முதற்செய்யுளின் ஈற்றில் வரும் எழுத்தையோ, அசையையோ, சீரையோ, அடியையோ அடுத்த செய்யுளின் முதலாகத் தொடங்கி இயற்றப்படும் நூல் 'அந்தாதி' எனப்படும். (அந்தம் - ஈறு, ஆதி - முதல்)

1. தெய்வப் பெருமான் - தேவேந்திரன், மறை - வேதம், மூவர் - பிரமன் விஷ்ணு உருத்திரன், தானவர் - அசுரர், முனிவர் - ரிஷிகள், இதழ் வெளுத்த பூ வரும் மாது - வெண்மையான இதழ்களையுடைய தாமரையில் தங்கும் சரசுவதி, புரிதல் - செய்தல்.

2. ஊடே - உள்ளே, இருளை அரிகின்றது - அஞ்ஞானத்தை நீக்குகின்றது, எண் எண் கலை மான் - (8×8) அறுபத்து நான்கு கலைகளிலும் வல்ல மான் போன்ற கலைமகள்.

3. வேதத்தின் அந்தம் - உபநிடதம், அந்தத்தின் மெய்ப்பொருள் பேதம் - பிராமணங்கள், பிணக்கு - வேறுபாடு, போதம் - ஞானம், பொதிந்து - தங்கி, ஆர்க்கும் - ஒலிக்கும், வெண்டாமரை நாயகி - சரசுவதி.

### 2. நான்மணிமாலை

வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், ஆசிரியப்பாவும் ஒன்றை ஒன்று அடுத்து அந்தாதியாய் வர நாற்பது செய்யுட்கள் வருமாறு அமைப்பது நான்மணி மாலையின் இலக்கணமாம்.

'நால்வர் நான்மணி மாலை' என்னும் நூல், சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்டது. சிவப்பிரகாசர் காஞ்சீபுரத்தில் வேளாண் குலத்தில் குமாரசாமி தேசிகரின் புதல்வராய்த் தோன்றியவர். இவர் காலம் சுமார் 300 ஆண்டுகட்கு முன்னது.

1. பொய்கை - சீகாழியில் உள்ள தோணியப்பர் கோவிலில் உள்ள திருக்குளம், அமுதாய் வளர்த்த பிரான் - ஞான சம்பந்தர், தண்டை - காலணி, வெறி - மணம், கமலம் - (பாத) தாமரை.

2. சொல் வேந்த - திருநாவுக்கரச, பொது ஆட்டிற்கு வல்லவன் - அம்பலத்தில் தாண்டவத்திற்கு வல்ல நடராசப் பெருமான், ஒருவற்கு - ஞான சம்பந்தருக்கு, ஞான அமுது உதவி - ஞானப்பால் கொடுத்து, குடர் நோய் - சூலை நோய், எப்படியினும் - எல்லா வகையாலும்.

3. ஆரூர - சுந்தரமூர்த்தியடிகளே, தொடி - வளையல், மடமாதர் - சங்கிலியார் பரவையார் என்னும் இளம்பெண்டிர், மிடி - வறுமை.

4. விளங்கு இழை - பிரகாசம் பொருந்திய அணிகலன்கள் அணிந்த பெண்ணாகிய பார்வதி, பகிர்ந்த - பங்கிட்டுக்கொண்ட, மெய்யுடை - உடலை உடைய, முக்கண் காரணன் - சிவபெருமான், ஆரணமொழி - வேதம், வாதவூர் அண்ணல் - மாணிக்கவாசகர், வாசகத்தேனே - திருவாசகமென்னும் தேன் போன்ற நூலோ, உக - சிந்த, கேணியின் - கிணறு போல, பொடிப்ப - சிலிர்க்க, மன்பதை - மக்கட்பரப்பு.

## 3. தமிழ் விடு தூது

தமிழ் மொழியில் வழங்கும் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் தூது என்பதும் ஒன்று. அது தலைவன் தலைவியருள் ஒருவர் தமது வருத்தத்தை மற்றவர்க்குத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களை-யேனும் அஃறிணைப் பொருள்களையேனும் தூது அனுப்புவதாகப் பாவித்துப் பாடப்படுவது. தூதாகச் செல்லற்குரிய பொருள்கள், பாங்கி, விறலி, அன்னம், மயில், கிள்ளை, குயில், மேகம், தென்றல் முதலியன. பிற்காலத்தில் இவையன்றிப் பிற பொருள்களும் தூதுக்குரியனவாயின. ஈண்டுத் தமிழ், தூதுக்குரிய பொருளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நூலை இயற்றிய ஆசிரியர் இன்னார் என்பது தெரியவில்லை.

தென்பால் - எமதிசை, ஏடாக - நூலாக, ஆடரவு தாழ்பாயலாளரை - ஆடுகின்ற பாம்பைப் பாயாக உடைய திருமாலை, 'சூழ் பாயோடு உன்னைத் தொடர்ந்தார்' என்பது காஞ்சீபுரத்தில் கணிகண்ணனோடு திருமாலும் சென்ற கதையைக் குறிக்கும். 'உனை முருகர் சொன்னாரோ?' என்பது முருகக் கடவுளே தமிழ் மொழியை அகத்தியர்க்குத் கற்பித்ததாக விளங்கும் கதையைக் குறிக்கும். சுந்தரமீனவன் - சுந்தர பாண்டியன், நல்க - அளிக்க.

## 4. கலம்பகம்—குறம்

'கலம்பகம்' என்பது தமிழ் மொழியில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், குறம், மறம் முதலிய பதினெட்டு உறுப்புக்கள் வருமாறு பலவகைப் பாக்களால் கடவுள்மீதும், மக்கள்மீதும் பாடப்படும் பிரபந்தமே கலம்பகம் எனப்படும்.

திருவருணைக் கலம்பகத்தை இயற்றியவர், **சைவ எல்லப்ப நாவலர் என்பவர்.** இவர் சோழ நாட்டில் திருவெண்காட்டில் பிறந்தவர்; வேளாளர் குலத்தவர். இவர் காலம், 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

தலைவி ஒருத்தி குறத்தியைக் குறி கேட்க, அக்குறத்தி குறி கூறுவதாகச் செய்யுள் இயற்றுவது '**குறம்**' எனப்படும்.

அரிவைமீர் - பெண்களே, உதயமான - தோன்றிய, சுளகு - முறம், ஒற்றை பட்டது - ஒற்றை எண்ணாய் இருந்தது, மழு - சிவபெருமானது ஆயுதம், கண்டம் மட்டிலே - கழுத்து மட்டும், கைக்கபாலர் - கையில் மண்டையோட்டை ஏந்தியவர், அருணை - திருவண்ணாமலை, நீறு - விபூதி.

## 5. பிள்ளைத்தமிழ்

'**பிள்ளைத் தமிழ்**' என்பது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது **ஆண் பால் பிள்ளைத்தமிழ், பெண் பால் பிள்ளைத்தமிழ்** என இரு வகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறு பறை, சிறு தேர் ஆகிய பத்துப் பருவங்களைப் பெற்று வரும் ஆண் பால் பிள்ளைத்தமிழ். இவற்றுள் கடைசி மூன்று பருவங்களுக்குப் பதில் நீராடல், அம்மானை, ஊசல் என்னும் மூன்றும் பெண் பால் பிள்ளைத்தமிழில் இடம் பெறும்.

**அந்தகக் கவி வீரராகவ முதலியார்,** பிறவிக் குருடர்; பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருக்கழுக்குன்றப் புராணம் முதலிய நூல்களை இயற்றியவர். ஈழ நாட்டிற்குச் சென்று அந்நாட்டரசனால் நன்கு மதிக்கப்பெற்றுப் பரிசில் வழங்கப்பெற்றவர்.

மரு - வாசனை, வனசத்து இறையவன் - தாமரையில் வசிக்கும் பிரமன், மகரம் - சுறா மீன், புவனக்குரு - சிவபெருமான், குடிலை - பிரணவ மந்திரம், கொற்றம் - வெற்றி, அருவாய் - உருவமற்றவனாய், மதனை - மன்மதனை, பொருவார் - போர் செய்பவர், அமிர்தப் பவளம் - அமிர்தத்தையுடைய பவளம் போன்ற இதழ், செய்கை - சேயூர் (இக்காலத்தில் 'செய்யூர்' என வழங்குகிறது).

**மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை** திரிசிரபுரத்தில் சைவ வேளாளர் மரபில் சிதம்பரநாதப் பிள்ளைக்குப் புத்திரராய்த் தோன்றியவர்; பல அரிய நூல்கள் இயற்றியவர்; 1875ல் சிவபதமடைந்தார்.

புது வெள்ளம் - புது நீர், புணரி - கடல், திரை - அலை, எறிந்து - வீசி, வாதவூரடிகள் - மாணிக்கவாசகர், இயற்செந்தமிழ் - திருவாசகம், கொங்கு - தேன், கொங்கு + உந்து + இணர் - தேன் சொரியும் பூங்கொத்து, பொங்கர் - சோலை, வதனம் - முகம், கோட்டி - சுளித்து, நறா - தேன், குமுதமலர் - அல்லிப்பூ, தானப் பொருப்பு - திரிசிரா மலை.

# VI. வருணனை

## 1. மலை

திரு. கா. ரா. நமச்சிவாய முதலியார் காவேரிப்பாக்கத்தில் 1876-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் இராமசாமி முதலியார்; தாயார் பெயர் அகிலாண்டவல்லி அம்மையார். இவர் வேளாண் குலத்தவர்; சைவ மதத்தினர்; மாணவர்களுக்குப் பாட புத்தகங்களும் இனிய பாடல்களும் இயற்றியவர்; புலவர் பலரை ஆதரித்தவர்; பெருஞ்செல்வர்.

1. வரைகள் - மலைகள், அலகிலா - அளவில்லாத, அறவோர் - தவசிகள், நிலவ - விளங்க, இலகு - விளங்கும்.

2. கோட்டது-சிகரத்தை உடையது, புனிதம் - தூய்மை, புரை தீர் - குற்றமற்ற, மானசவாவி - மானசசரோவரம் என்னும் ஏரி, ஆனினம் - பசுக்கூட்டம்.

3. நான்முகன் புத்திரை - பிரமபுத்திரா நதி, புனல் - யாறு, இழி புனல் - இறங்கும் நீர்.

## 2. யாறு

புவி - பூமி, ஆன்ற - சிறந்த, புலம் - ஐம்புலன்கள், அவி அகத் துறைகள் - அழகிய அகப்பொருள் துறைகள், ஐந்திணை - (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும்) ஐந்து நிலங்கள், அளாவி- கலந்து, சவியுற - அழகு பொருந்த, வீரர் - இராம லக்குமணர்.

## 3. நாடு

திருத்தக்கதேவர் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவக- சிந்தாமணியை இயற்றியவர்.

காய் மாண்ட - காய்கள் நிரம்பிய, வருக்கை - பலா, தேமாங்கனி - இனிய மாங்கனி, ஏமாங்கதம் - சீவகனது நாடு, இசை - புகழ்.

## 4. சூரியோதயம்

கொழுமலர் - செழித்த மலர், அணவி - நெருங்கி, கூர்ந்தது - மிகுந்தது, குணதிசை - கீழ்த்திசை, மாருதம் - காற்று, ஈர்ம்பனி - குளிர்ந்த பனி, இருஞ்சிறகு - பெரிய சிறகு, பிலம்புரை - குகை போன்ற, பேழ்வாய்- பெரிய வாய், வெள் எயிறு - வெண்மையான பல், அனுங்கி - வருந்தி, அழுங்கிய - புலம்பிய, கெடுத்த - நீக்கிய.

## 5. அந்தி மாலை

மஞ்சு ஆர் - மேகங்கள் பொருந்திய, வாரணம் - யானை, அங்கதன்- (அங்கு + அதன்), பஞ்சானனம் - சிங்கம், செஞ்சோரி - சிவந்த இரத்தம், செக்கர் - சிவப்பு.

## VII. தனிப்பாடல்கள்

1. சங்கரற்கும் ஆறு தலை - சங்கரனாகிய சிவனுக்கும் கங்கையாறு தலையில், சண்முகற்கும் ஆறு தலை - முருகனுக்கும் ஆறு தலைகள், ஐங்கரற்கு மாறு தலை - ஐந்து கரங்களை உடைய விநாயகனுக்கு மாறுபட்ட தலை (யானைத் தலை), சங்கைப் பிடித்தார்க்கும் ஆறு தலை - சங்கைக் கையில் ஏந்திய திருமாலுக்கும் ஆறு (ஆற்றின் இடையில் உள்ள அரங்கம்) இருப்பிடம், பாதம் படித்தோர்க்கும் ஆறுதலை - தொண்டர்களுக்கும் ஆறுதல்.

2. அம்மியின் மீது கால் வைத்தல் - திருமணத்தில் அம்மி மிதித்தல், மணவாளன் - கணவன் (சிவன்), கவுணியன் - ஞானசம்பந்தர், மதவேள் - மன்மதன், மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர்.

3. 'ஒரு பாதி மால் கொள' என்பது திருமால் சிவபெருமானை நோக்கித் தவம் கிடந்து அவர் உடலிற்பாதி பெற்றதைக் குறிக்கும்; 'மற்றொரு பாதி உமையவள் கொண்டு' என்பது பார்வதி சிவனை நோக்கித் தவம் செய்து இடப்பாகம் பெற்ற புராண கதை. புராரி - (புர + அரி) முப்புரங்களைச் சாம்பராக்கிய சிவபெருமான், இருநதி - பெரிய கங்கை, வாரிதி - கடல், பிலம் - பாதலம், கற்பதரு - தேவலோகத்து மரம், ஓடு - பிச்சை எடுக்கும் திருவோடு.

# உரைநடைப் பகுதி

## 1. நல்லொழுக்கம்

[யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்]

பெரும்பான்மையும் எல்லாருக்கும் பொதுவாயுள்ள நல்லொழுக்கங்களை இயன்ற மட்டும் திரட்டிச் சொல்வாம் :

கடவுளும், புண்ணிய பாவமும், சுவர்க்க நரகமும், மறு பிறப்பும், முத்தியும் உண்டென்னும் உண்மையை ஒரு போதும் மறக்கலாகாது.

ஒருயிருக்கும் சிறிதாயினும் தீங்கு நினைக்கலாகாது. தனக்குத் துரோகஞ்செய்தவரிடத்தும் தான் துரோக சிந்தை இல்லாதவனாய் இருத்தல் வேண்டும். பிறவுயிர்களுக்குத் துன்பம் வந்த பொழுது தன்னை நெருப்பிலே தோய்த்தாற்போல மனந்தபித்து, அதை நீக்க முயலல் வேண்டும். பொறுத்தற்கரிய கோபமும் துன்பமும் வந்தால், சகித்துக்கொள்ளல் வேண்டும்.

பிறருடைய பொருளைக் காஞ்சிரங்காய் போல நினைத்தல் வேண்டும். தனக்குப் பிறர் இலாபம் கருதாமற்செய்த நன்றியை மறக்கலாகாது. வஞ்சனையை ஒழித்தல் வேண்டும். பகைவரும் சிநேகரும் அயலாருமாகிய மூன்று திறத்தாரிடத்தும் பக்ஷபாதமின்றிச் சமமாயிருத்தல் வேண்டும். பிறருடைய கல்வி செல்வம் முதலியவற்றைக் கண்டு பொறாமைப்படலாகாது. கல்வியும், அறிவும், நல்லொழுக்கமும், செல்வமும், அழகும் தனக்குப்பார்க்கிலும் பிறருக்கு மிகப் பெருகல் வேண்டுமென்று நினைத்தல் வேண்டும்.

காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசலாகாது. விளையாட்டுக்காயினும் பொய் பேசலாகாது ; எந்நாளும் சத்தியமே பேசல் வேண்டும். தன்னை வைதவனிடத்தும் கடுஞ்சொற்களைப் பேசாது, இன்சொற்களையே பேச வேண்டும். தனக்கும் பிறர்க்கும் பயன்படாத வீண் வார்த்தைகளைப் பேசலாகாது. கோள் மூட்டலாகாது.

பிறரிடத்தே குற்றம் உண்டாயின், அவரைத் தனித்த

இடத்திற்கண்டு, அதனையும் அதனால் வருங்கேட்டையும் அவருக்கு அறிவித்து, அவரை நல்வழிப்படுத்தல் வேண்டும். ஒன்று ஒருவருக்கு மிக அப்பிரியமாய் இருப்பினும், அது அவருடைய நன்மைக்குக் காரணமாய் இருக்குமாயின், அதை ஆவசியகமாகச் சொல்லல் வேண்டும். ஈசுரத்துரோகி, கொலைஞன், கள்வன், கள்ளுண்போன், பொய்யன், சூதாடு-வோன், தூர்த்தன், வஞ்சகன், பொறாமையுடையவன், புறங்கூறுவோன், பலரோடு பகை கொண்டவன், மிகச் செலவு செய்பவன், பைத்தியம் பிடித்தவன் என்பவர்களோடு கூடலாகாது.

தனக்கு மந்திரங்களையேனும் சாத்திரங்களையேனும் உபதேசிக்கும் குருவை அன்போடு வழிபடல் வேண்டும். குருவுக்கு வழிபாடு செய்யாது பெறும் வித்தை சித்தி பெறாது. கிரியை ஞானம் என்னும் இரண்டனுள்ளும் ஞானம் சிறந்ததுபோல, கிரியாகுரு ஞானகுரு என்னும் இருவருள்ளும் ஞானகுரு சிறந்தவர். அதிகமாகவேனும் அற்பமாகவேனும் ஆன்மா உய்யும் வழிக்கு உரியதை அறிவித்தவரையும் குருவென்றே நினைத்தல் வேண்டும். குருவின் ஆசனத்திலும் படுக்கையிலும் இருத்தலும் படுத்தலும் அவைகளைக் காலினாலே தீண்டலும் ஆகாவாம்.

தாய், தகப்பன், பெரிய தகப்பன், சிறிய தகப்பன், பெரிய தாய், சிறிய தாய், பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமையன் மனைவி, குரு, குரு பத்தினி, உபாத்-தியாயர் முதலிய பெரியோர் வந்தால், இருக்கைவிட்டெழுந்து வந்தனஞ்செய்தல் வேண்டும். பெரியோர்களை நாடோறும் வந்தனஞ்செய்பவனுக்கு ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் என்னும் நான்கும் அபிவிருத்தியாகும்.

தன்னின் உயர்ந்தாரையாயினும், தன்னை ஒத்தாரை-யாயினும் வணங்கும்போது, அவ்வணக்கம் அவருக்கென்று புத்தி பண்ணாமல், அவரிடத்தில் இருக்கும் கடவுளுக்கென்று புத்தி பண்ணி வணங்கல் வேண்டும். தன்னை யாராயினும் ஒருவர் வணங்கும் போது, ‘இவ்வணக்கம் ஆன்மாவாகிய நமக்கன்று; நம்மிடத்தில் இருக்கும் கடவுளுக்கேயாம்,’ என்று புத்தி பண்ணல் வேண்டும்.

தான் ஒருவருக்குச் செய்த நன்றியைச் சொல்லலாகாது. தனக்கு ஒருவர் இட்ட போசனத்தை இகழ்ந்து பேசலாகாது. தான் செய்த தருமத்தையும் விரதத்தையும் புகழ்ந்து பேசலாகாது.

அங்கவீனர், ஆறு விரலுள்ளவர்கள், வியாதியாளர், படியாதவர், கிழவர், குரூபிகள், தரித்திரர், ஈனசாதியார் என்பவர்களை அவர்களுடைய தோஷத்தைச் சொல்லிப் பரிகாசஞ் செய்யலாகாது.

ஒருவரை அடிக்கும்பொருட்டுத் தடி முதலிய ஆயுதங்களை உயரத் தூக்குதலும், அவைகளால் அடித்தலும் ஆகாவாம். கோபத்தினால் ஒருவர் தலை மயிரைப் பிடித்து இழுத்தலும், தலையில் அடித்தலும் ஆகாவாம். தன் வேலைக்காரர் தன்னிழலாயும், தன் மனைவியும் பிள்ளையும் தன் சரீரமாயும் இருத்தலால், அவர் செய்த பிழையை வருத்தமின்றிப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும்.

சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உண்டென்னுமளவில் எழுவது உத்தமம்; மூன்றே முக்கால்நாழிகை உண்டென்னு-மளவில் எழுவது மத்திமம்; உதயத்தில் எழுவது அதமம்; உதயத்தின் பின் எழுவது அதமாதமம். அவசிய கருமம் முதல் தந்த சுத்தி இறுதியாகிய கருமங்களைச் சூரியோதயத்-துக்கு முன்னே முடித்தல் வேண்டும்.

உதயகாலத்திலும் அஸ்தமனகாலத்திலும் சயனமும் போசனமும் அத்தியயனமும் செய்யலாகாது. சயனித்தால், மூதேவியுண்டாகும்; புசித்தால் வியாதி உண்டாகும்; அத்திய்யனஞ் செய்தால், ஆயுசு குறையும். தேவாலயம், ஆறு, குளம், கிணறு, பூந்தோட்டம், வீடு முதலியவற்றிற்குச் சமீபத்திலும், சனங்கள் சஞ்சரிக்கும் இடங்களிலும், பசு மேயும் இடங்களிலும், மரநிழலிலும், உழுதநிலத்திலும், பயிர் நடுவிலும், வழியிலும், சுடுகாட்டிலும், அறுகம்புற்பூமியிலும், புற்றிலும், மலையிலும், தண்ணீரிலும் சலமலம் கழிக்க-லாகாது.

மயிர், எலும்பு, முள்ளு, பலியிட்ட சாம்பர், உமி, குளித்த நீரால் நனைந்த பூமி, கோழை, எச்சில், மலம், மூத்திரம், உதிரம் என்னும் இவைகளை மிதியாமல் தூரத்தில்

விட்டு ஒதுங்கிப்போதல் வேண்டும். மல மூத்திரங்களைப் பார்க்கலாகாது.

ஆறு, தடாகம், ஓடை, மடு முதலியவைகளிலே ஸ்நானஞ் செய்தல் வேண்டும். இவைகள் இல்லையானால், கிணற்றினின்றும் தண்ணீரை எடுத்து ஸ்நானஞ்செய்தல் வேண்டும். ஒருவர் வெட்டின குளத்திலே ஸ்நானஞ்செய்யப் புகின், அந்தக் குளத்தில், ஐந்து கை மண்ணெடுத்து வெளியிற் போட்டுவிட்டு ஸ்நானஞ்செய்தல் வேண்டும்.

வஸ்திரந்தரித்துக்கொள்ளாமல், சயனம், ஸ்நானம், சந்தியாவந்தனம், பூசை, போசனம் முதலியவைகளைச் செய்யலாகாது. ஜலத்தைக் காலினால் உழக்கலாகாது. ஸ்நானம் செய்தவுடனே உடம்பை வஸ்திரத்தினாலே துடைத்தல் வேண்டும்; கையினாலே துடைக்கலாகாது. பிறர் மேலே நீர் தெறிக்கும்படி வஸ்திரத்தைத் தோய்த்தலும், மயிரை உதறலும் ஆகாவாம். நடக்கும் போது மயிரை உலர்த்தலாகாது. வஸ்திரத்தைத் தண்ணீரினுள்ளே பிழிதலாகாது. காலினாலே காலைத் தேய்த்துக் கழுவலாகாது. ஈர வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டிருக்கலாகாது. மயிர், கரி, சாம்பர், எலும்பு, முள், விஷம், எச்சில் இவைகளைச் சலத்திலே போடலாகாது. கோழையைச் சலத்திலே உமிழ்தலாகாது.

முகத்தையும், கைகால்களையும் கழுவாமற் புசிக்கலாகாது. தண்ணீரினாலே கால் கழுவி, அந்த ஈரம் இருக்கும் போதே புசித்தல் வேண்டும். படுக்கையில் இருந்துகொண்டும், மூலைக்கெதிராக இருந்துகொண்டும், இடக்கையில் அன்னத்தை வைத்துக்கொண்டும், உள்ளங்கையில் அன்னத்தை வைத்துக்கொண்டும், ஆசனத்தின்மீது இலை போட்டுக்கொண்டும், நின்றுகொண்டும், நடந்துகொண்டும் புசிக்கலாகாது.

அசுத்தமாகிய இடங்களிலும், நாநா வித சனங்கள் சேர்ந்த சங்கத்திலும், சந்தியாகாலங்களிலும் புசிக்கலாகாது. கனி, கிழங்கு, வற்றல், வடகம், பணியாரம் என்பவையொழிந்த மற்றைப் பழைய உணவுகளை உண்ணலாகாது.

வயிற்றிலே பாதிப்பங்கை அன்னத்தினாலும், காற்பங்-

கைச் சலத்திஞலும் நிறைத்து, காற்பங்கை வாயு சஞ்சரிக்க விடல் வேண்டும். இரவில் எட்டு நாழிகையினுள்ளே புசித்தல் உத்தமமும், பதிஞெரு நாழிகையளவேல் மத்திமமும், பதிஞன்கு நாழிகையளவேல் அதமமுமாம். அதன்மேற் புசிக்கலாகாது. இராத்திரியிலோ, மிகப் புசிக்கலாகாது. மத்தியானத்திலே அதிக போசனஞ்செய்தால், இரவிலே புசிக்கலாகாது. இரவிலே தயிரையேனும் மோரையேனும் உட்கொள்ளலாகாது.

வெண்கலப்பாத்திரத்தில் விடப்பட்ட இளநீரும் தாமிரப்பாத்திரத்தில் விடப்பட்ட பாலும் கள்ளுக்குச் சமமாகும். ஆதலால், அவைகளை உட்கொள்ளலாகாது.

எண்ணெய் தேய்த்துக்கொள்ளற்கு ஆடவர்களுக்குப் புதன்கிழமையும் சனிக்கிழமையும் நல்லனவாம். பெண்களுக்குச் செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நல்லனவாம். தலையிலே வாக்கி வடிந்த எண்ணெயை உடம்பிலே தேய்க்கலாகாது. சலமோசனம் எண்ணெய் தேய்க்குமுன்னே செய்துகொள்ள வேண்டும். ஸ்நானஞ் செய்த பின்பு எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாகாது.

தெய்வ விம்பத்தினிழலையும், மாதா, பிதா, குரு, உபாத்தியாயர், அரசன் முதலிய பெரியோருடைய நிழலையும், மிதித்தலும் தாண்டலும் ஆகாவாம். எருக்கு, கள்ளி, தான்றி, ஆமணக்கு இவைகளின் நிழலிலே பகற்காலத்தில் இருக்கலாகாது. விளா நிழலிலும் அரசநிழலிலும் இராக்காலத்தில் இருக்கலாகாது.

இரண்டு தெய்வ விம்பத்துக்கு நடுவிலும், பெரியோர் பலருக்கு நடுவிலும் ஊடறுத்துப் போகலாகாது. ஒருவருக்கும் விளக்குக்கும் நடுவே போகலாகாது. கழுதைகளுக்கு நடுவிலும் ஆடுகளுக்கு நடுவிலும் போகலாகாது.

பெரியோர் நித்திரை செய்யும் போது அவரை எழுப்பலாகாது. பசுவானது தண்ணீர் குடிக்கும் போதும், புல்லுத் தின்னும் போதும், கன்று பால் குடிக்கும் போதும் தடை செய்யலாகாது. பசுக்கன்றையேனும் அது கட்டுங் கயிற்றையேனும் தாண்டலாகாது.

பிறர் எழுந்து போகத் தொடங்கும் போது அவரைப்

பின்னே நின்று அழைத்தலும், தும்முதலும், 'எங்கே போகின்றீர்?' என்று கேட்டலும் ஆகாவாம். அவருக்கு யாதாயினும் சொல்ல வேண்டுமாயின், விரைந்து சென்று, அவர் பக்கத்திலே நின்று சொல்லல் வேண்டும்; அவர் முன்னே போய் எதிர்முகமாக நின்று ஒன்றையுஞ் சொல்லலாகாது. பிறரைப் பார்த்து, 'உம்முடைய உடம்பு நன்றாக இருக்கின்றது!' என்று சொல்லலாகாது. அவர் புசித்த போசனங்களைக் கேட்டலாகாது.

பெரியோர்களும், வயோதிகர்களும், சுமை சுமப்போர்களும், வியாதியாளர்களும், பிள்ளைகளும், பசுக்களும், பெண்களும் எதிர்ப்பட்டால், அவர்களுக்கு வழி கொடுத்து விலகிப்போதல் வேண்டும். பிறர் இரகசியம் பேசும் போது அதனைக் கேட்கலாகாது. இருவர் இருந்து பேசும் இடத்திலே அவரனுமதியின்றிப் போகலாகாது. பிறர் பேசும் பொழுது கதவு முதலியவைகளின் பக்கத்திலே மறைந்து நிற்றலாகாது. பிறருடைய வீட்டின்கண்ணே புறக்கடை வாயிலாலே போகலாகாது.

பற்கடித்தலும், நகங்களைக் கடித்தலும், மீசையைக் கடித்தலும், நகத்தினாலே பல்லைக் கிளைத்தலும், உதட்டைக் கசக்கிக்கொண்டிருத்தலும், மூக்கைத் தூக்கியிழுத்தலும், கண்மயிரைப் பிடுங்கலும், நகம் மயிர் இவைகளைத் தானாகச் சேதித்தலும் ஆகாவாம்.

வாயை மூடிக்கொள்ளாமற் கொட்டாவி விடுதலும், பெருமூச்செறிதலும், இருமுதலும் ஆகாவாம். இரைச்சலிட்டுச் சிரித்தலும், காரணமின்றிச் சிரித்தலும் ஆகாவாம்.

காரணமின்றி மட்கட்டியை உடைத்தலும், துரும்பு கிள்ளுதலும், நிலத்தைக் கீறலும், கையையும் தலையையும் உதறலும், கையினாலே உடம்பில் அடிக்கடி புடைத்தலும் ஆகாவாம்.

நெருப்பை வாயினல் ஊதலாகாது. நெருப்பை ஆடையினாலேனும், முறத்தினாலேனும், கையினாலேனும் வீசி மூட்டலாகாது. நெருப்பை இருவருக்கு நடுவே கொண்டு போகலாகாது. கொண்டு போக வேண்டின், கீழே வைத்து எடுத்துக்கொண்டு போதல் வேண்டும். அக்கினியைத்

தாண்டலும், அக்கினிக்கெதிரே காலை நீட்டலும், அக்கினியை அரையின் கீழே தாங்கலும், அக்கினியிலே காலைக் காய்ச்சலும், அசுத்தமாகிய பொருளை அக்கினியிலே போடுதலும், அடுக்களையில் அக்கினியைச் சலம் விட்டவித்தலும் ஆகாவாம். விளக்கை வாயினால் ஊதி அவித்தலும் ஆகாதாம்; கையினால் தூண்டலும் ஆகாதாம். தான் உயரமாகப் படுத்துக்கொண்டு அக்கினியைக் கீழே வைக்கலாகாது.

துஷ்ட வாகனத்தின்மேல் ஏறலும், தண்ணீர் அலம்பி இடித்த ஆற்றங்கரை முதலியவைகளைச் சேர்தலும், தீப்பட்ட வீட்டிலே பிரவேசித்தலும், மரத்தினுனியில் ஏறலும், மழை பெய்யும்போது காலைப்பரப்பி ஓடலும், ஜலப்பிரவாகத்துக்கு எதிராக நீந்தலும், ஒருவனை ஓடமேறிக்கடத்தலும், மந்தையினுள்ளே கோலின்றிப் போதலும், சர்ப்பம் மதயானை முதலியவற்றிற்கு எதிரே நிற்றலும், அவைகளைத் தொடர்தலும், குடியில்லாத வீட்டிலே தனித்துத் தூங்கலும், பாழ்ங்காட்டுக்குத் தனித்துப் போகலும், பாழ்வீட்டிலே தனித்திருத்தலும் ஆகாவாம்.

துணையின்றித் தனித்தாயினும், இன்னானென்று அறியப்படாதவனோடாயினும் வழி நடக்கலாகாது. இரவிலே தனித்து ஊர்ப்புறத்திலே போகலாகாது. போக வேண்டின், ஒருவரைக் கூட்டிக்கொண்டு போகல் வேண்டும். இருட்டிலே வெளிச்சமின்றிப் போகலாகாது. மழையிலும், வெயிலிலும், இரவிலும், காடுகளிலும், குடை பாதரக்ஷை தடி இவைகளைத் தரித்தவனாகித் தேகத்துக்குத் தீங்கு வராதபடி சஞ்சரித்தல் வேண்டும். சஞ்சரிக்கும் போது மேற்பார்வையும், பக்கத்துப் பார்வையும், தூரப் பார்வையும் விட்டு, நுகத்தடியளவு, வழியை நன்றாகப் பார்த்துப் போதல் வேண்டும்.

மிக விழித்திருத்தல், மிகத் தூங்கல், மிக இருத்தல், மிகநிற்றல், மிகநடத்தல், மிகப்படுத்திருத்தல், மிகவருந்தல், மிகப்பேசல் இவையெல்லாம் நன்மையல்ல. பகலிலே ஒரு போதும் நித்திரை செய்யலாகாது. வடக்குத் திக்கிலே தலை வைத்துச் சயனிக்கலாகாது. காலீரம் புலருமுன் சயனிக்கலாகாது.

## 2. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா, சிக்கனக்காரனா?

[திரு. கா. ரா. நமச்சிவாய முதலியார்]

பாண்டி வளநாட்டில் பண்டைக்காலத்தே மணி முடி தாங்கிய மன்னனொருவன் செங்கோல் செலுத்திச் சிறப்புற விளங்கியிருந்தான். அவன், கல்வியறிவு பெரிதும் உடையவன்; எதனையும் ஆராய்ந்து பார்ப்பவன்; உய்த்துணர்ந்து அதன் உண்மையைத் தேர்பவன்; கற்றோரைத் தன் கண்ணே போலக் கருதிக் காக்க வல்ல நல்லியல்பு வாய்ந்தவன். அதனால், நல்லிசைப்புலவர் அனைவரும் அவன் அவைக்கண் குழுமி, அன்புற்று வாழ்வாராயினர். அரசன், தன் மனத்தில் தோன்றும் ஐயப்பாடுகளை அவர்கள் முன்னிலையில் வெளியிட்டுத் தீர்த்துக்கொள்ளும் இயல்புடையவன். அவன் பெயர் **பாண்டியன் மாகீர்த்தி** என்பது. மாகீர்த்திக்கு மைந்தர் இருவர் இருந்தனர். அவ்விருவர்க்கும் மனப்பான்மை வேறுபட்டிருந்தது. ஒருவன், தன் தந்தை தனக்கு வழங்கும் பொருளனைத்தையும் செலவு செய்து மகிழ்ச்சியடைவான். மற்றவனோ, தனக்குக் கிடைக்கும் பொருளனைத்தையும் சிதற விடாமல் சேர்த்து வைத்து, அதனைக் கண்டு கண்டு மனம் பூரிப்பான். அவ்விருவர் செயல்களையும் கண்ணாரக் கண்ட காவலன், 'என்னே! இவர்தம் இயல்பு ஒன்றற்கொன்று மாறான வழியையுடையதாய் உளதே! தன் நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா, சிக்கனக்காரனா? இவற்றின் உண்மை நன்கு புலப்பட அறிதல் வேண்டும்,' என்று ஆராய்வானானான். அவனுக்கு ஏதும் புலப்படவில்லை. அதனால், அவன் தன் அவைக்கண் சிறந்து விளங்கிய புலவர்களுள் இருவரை நோக்கி, ஒரு நாள் வினாவுவானாயினன்:

'இன்னிசைப் புலவீர், என் மனத்துள் ஓர் ஐயப்பாடு உளது. அதனை நீவிர் ஆராய்ந்து தீர்த்தல் வேண்டும். இவ்வுலகில் மானிடர்க்கு மனப்பான்மை மாறுபடுகின்றது. அதனை மனத்தின் இயல்பு என்கின்றனர். ஒருவன்,

பெருஞ்செலவாளியாய் இருக்கின்றான்; மற்றொருவன், மிக்க சிக்கனக்காரனாய் இருக்கின்றான். இவ்விரண்டு இயல்புகளும் ஏறுமாறானவை. இவற்றை அவனவனுக்கு உற்ற மனப்பான்மை என்னலாம். இவ்விருவரின் மனப்பான்மையையும் மாற்ற இயலாது. ஆயினும், இவ்விருவருள் தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் யாவன் என்னும் செய்தியே என் மனத்துக்கண் எழுந்த ஐயப்பாடு. அதனை நீவிர் இருவீரும் ஆராய்ந்து சொற்போரின் மூலமாக எனக்குத் தெளிவித்தல் வேண்டும்,' என்றான்.

கீரர், நக்கீரர் என்னும் புலவர் இருவரும் அவ்வையப்பாட்டைத் தீர்த்தற்பொருட்டுச் சொற்போர் புரிவாராயினர்:

கீரர், 'பாண்டி வேந்தரே, மானிடனொருவன் பெறத் தக்க பேறுகள் நான்காகும். அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள், அறமும் பொருளும் இன்பமுமே இம்மையில் அடையக் கூடியவை. அம்மூன்றனுள்ளும் முந்துறச் சிறந்து நிற்பது பொருளேயாகும். ஒருவன் அறஞ்செய்தற்கும், இன்பம் துய்த்தற்கும் பொருளொன்றே ஆதாரமாயுளது.

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு."

என்றார் **வள்ளுவனார்.**

அஃதாவது, பொருளைப் பெரிதும் தேடினவர்க்கு மற்றை அறமும் இன்பமும் ஒருசேர எளிதில் வந்தடையும் என்பதாம். ஆதலின், அத்தகைய பொருளை வீணிற்செலவு செய்யாது, எவ்வாற்றானும் அதனைக் காத்து வாழ்வதே பேரறமாம். 'பொருடனைப் போற்றி வாழ்,' என்னும் மூதுரையும் உலகில் வழங்குகின்றதே! பெருஞ்செலவாளியைக் காட்டிலும் பெருஞ்சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நற்பயன் விளைப்பவன் என்பது என் கருத்து. ஆதலின், அதற்கான நியாயங்களை எடுத்துக் காட்டுகின்றேன்:

'முதலாவது—சிக்கனக்காரன், பொருள் பல வகையினாலும் சிதறுண்டு போகாமல், ஓரிடத்திலேயே முதற்பொருளாகச் சேர்ந்திருக்கச் செய்து வருவதனால், அவன் நாட்டின் செல்வம், அவன் நாட்டிலேயே நிலைத்திருக்கும். அதனால்,

பொருள் நூலின் கொள்கைப்படி, சிக்கனக்காரன் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவனாகின்றான். பிற நாடுகளுக்கு நம் நாட்டுப் பொருள்கள் பற்பல வகையில் செல்லுமாயின், நம் நாடு நாளடைவில் நலங்குன்றி வறுமையடையும். ஆதலின், சிக்கனக்காரன் செய்கை பொருள் நூலின் முறைக்குப் பொருந்தியிருக்கின்றது. பிற நாட்டு வேந்தர் நம் நாட்டின்மீது படையெடுத்து வருங்காலத்தும், பஞ்சம் முதலிய இடுக்கண்கள் நேருங்காலத்தும் பொருள் பெரிதும் வேண்டப்படும். ஆதலின், சேமித்து வைக்கப்படும் பொருளே நாட்டிற்கு நலம் பயப்பதாகும்.

'இரண்டாவது—பெருஞ்செலவாளியின் செய்கை அறநூல் முறைக்கு மாறானது.

"ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்பவாதலால், பெருஞ்செலவாளியின் செய்கை அறிவுடையோரால் வெறுத்து ஒதுக்கத் தக்கதேயாகும்.

'மூன்றாவது—பொருளினிடத்துப் பற்றில்லாத ஒருவன், அதனைப் பற்பல வகையில் செலவழிக்கத் துணிவான். பொருள் தீச்செயலுக்கேபெரும்பாலும்காரணமாயிருத்தலின், செலவாளி அதனைத் தீச்செயலில் செலவிடப் பின்னிடான். 'நற்செயலுக்கும் பொருள் காரணமாகுமன்றோ? பெருஞ்செலவாளி அப்பொருளை நற்செயலிற்செலவு செய்யானோ?' எனின், செய்தலுங்கூடும். ஆயினும், தீச்செயலில் தன் பொருளைச் செலவிடாதிருக்க அவனைத் தடுப்பது ஏதும் இல்லையே! சிக்கனக்காரன் நற்செயலில் தன் பொருளைச் செலவிட்டுப் புகழைத் தேடிக்கொள்ளாவிடினும், தீச்செயலில் அதனைச் செலவு செய்து இகழ்வைத் தேடிக்கொள்ள இடந்தர மாட்டான்.

'நான்காவது—செலவாளி, சிக்கனக்காரன் ஆகிய இவர் இருவரும் நேர் மாறாய் இருந்து, தம் நாட்டுக்குச் சில வழிகளில் நன்மையையும், சில வழிகளில் தீமையையும் புரிந்து

வருகின்றனராயினும், மிக்க செலவாளியைவிட மிக்க சிக்கனக்காரன் தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் ஆகின்றான். 'அஃது எப்படி?' எனின், தேனீக்கள் காலமறிந்து மலர்தோறும் சென்று வருந்தியுழைத்து, தேனைத் திரட்டிக் கொண்டு போய்க் கூட்டில் சேர்த்து வைப்பது போல, சிக்கனக்காரனும் ஒல்லும் வகையால் செல்வம் தேடித் தன் பேழையில் சேர்த்து வைக்கின்றான். ஈக்கள் தேடி வைத்த தேன், பின்னர்ப் பலருக்குப் பயன்படுவது போல, சிக்கனக்காரன் ஈட்டி வைத்த பொருள், அவனுக்குப் பின்னர்ப் பலருக்கும் பயன்படுவதாகும். ஆகவே, சிக்கனக்காரன், தன் வாழ்நாள் முழுவதும் தான் தேடிய பொருளினால் ஒரு பயனும் அடையாமற்போயினும், பின்னர் அதனால் பலர் பயனடைகின்றனர். பெருஞ்செலவாளியோ எனின், பொருளினாலாகிய பயனைத் தானிருக்குமளவும் துய்க்கின்றானில்லை; சிறிது காலமே அதன் இன்பத்தை அனுபவிக்கின்றான்.

'ஐந்தாவது—சிக்கனக்காரன் ஒரு வகையில் இன்பமும் அடைகின்றான்; தன் பொருளைப் பார்த்துப் பார்த்து இன்புறுகின்றான். செலவாளியோ, இவ்வகையான இன்பம் எய்தல் அரிது. ஏனெனின், பெருஞ்செலவினால் தன் கைப்பொருள் அனைத்தையும் செலவிட்ட பின் மேன்மேலும் வருவாயில்லாத காலத்தில் துன்புறுவான். பலருக்கும் வழங்கிய காரணத்தால் அவன் அடைந்த மகிழ்ச்சியினும், பொருளற்ற காலத்தில் அடையும் வருத்தமே மிகப் பெரிதாகக் காணும். இம்மட்டோ! பொருள் மிக்கிருந்த காலத்துத் தான் மேற்கொண்டிருந்த பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையும், வருவாய் குன்றியவிடத்து விடக்கூடாமையின், மிக்க துன்பமே அடைவான்; தான் உலகத்தில் இருந்து என்ன பயன் என்றும் எண்ணுவர்ன். எப்பொழுதும் வறிய நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருப்பவனது நிலைமையைக்காட்டிலும், முதலில் செல்வனாயிருந்து பின்னர் வறுமையடைபவனது நிலைமை, அம்மம்ம! கொடிது கொடிது! சிக்கனக்காரன் செல்வம் இருந்தும் வறிய நிலையிலேயே வாழ்ந்து வந்தவனாதலால், அவனுக்கு எவ்விதத் துன்பமும் இல்லை.

'மேற்போந்த நியாயங்களால், சிக்கனக்காரனே தன்

நாட்டுக்கு நலம் பயப்பவன் என்பது என் கொள்கை,' என்று கூறினர்.

கீரர் கூறிய கட்டுரையைக் கேட்ட நக்கீரர் எழுந்து, தம் உட்கோளை எடுத்துரைப்பாரானர் :

'மன்னர் மன்னரே, கீரர் கூறிய உரையின்படி இவ்வுலகில் ஒருவன் அடையத் தக்க பெரும்பேறுகளுள் பொருளே முதன்மையானது என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

" வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள்
நடுவணை தெய்த இருதலையும் எய்தும்."

என்பது உண்மையுரையே. அத்தகைய பொருளை எவ்வகையிலும் இம்மியும் செலவு செய்யாமல் சேர்த்து வைத்துச் சிக்கனக்காரனை வரையாது வழங்கும் வள்ளலைக்காட்டிலும் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவன் எனக் கீரர் கூறியது எனக்குச் சிறிதும் உடன்பாடன்று.

'முதலாவது—பொருள் நூலின் கொள்கையின்படி ஒரு நாட்டின் பொருள் நாற்புறமும் பரவச் செய்வதே அந்நாட்டின் நலத்திற்கு அடுத்ததென்பதைக் கீரர் மறந்தனர் போலும்! ஒரு நாட்டில் சிலர் பெருஞ்செல்வராய் இருக்கப் பலர் மிக்க வறியராயிருப்பது அந்நாட்டிற்கு நலம் விளைப்பதன்று. எந்நாட்டில் மக்களனைவரும் ஒரே நிலையில் இருக்கின்றுர்களோ, அந்நாடே சிறந்த நாடாகும். சிக்கனக்காரன், பொருளையெல்லாம் பிறரிடத்துப் பரவாதபடி தன்னிடத்திலேயே சேர்த்து வைத்துக்கொண்டிருப்பானயின், அப்பொருளினலாகிய பயனை அந்நாடு முற்றும் இழந்துவிடும். இவ்வுண்மையை உணர்ந்தே, நம் பெரியோர், தக்க ஏற்பாடுகள் பலவற்றைச் செய்திருக்கின்றனர்.

'திருமணம் முதலிய சிறந்த செயல்களை நடத்துங்காலத்தில் செல்வர்கள் இயம், இன்னிசை, நாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களை அழைத்துப் பொருள் தந்து, சிறப்புற நடாத்துஞ்செயலை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரிய வருகின்றது. பெருஞ்செல்வனை ஒருவன், சேமித்து வைத்திருப்பானயின், அது மற்றையோர்க்குப் பயன்படாமற்போகுமன்றே ? அன்றியும், அரிது முயன்று

கற்று இன்னிசையாளர் முதலியோர் பிழைப்பின்றி, பெரிதும் வறுமையுற்றுத் துன்பம் எய்துவர்.

'இரண்டாவது—செலவாளியின் செய்கை அறநூலுக்கு முரண்பாடாகும் என்று கீரர் கூறியது வியப்பாகும். அவர், தம் கொள்கையை நிலை நிறுத்த 'ஆன முதலில்' என்னும் செய்யுளை எடுத்துக் கூறினார். அவ்வறநூலே எனக்கும் துணை செய்யாமற்போகவில்லை.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே அனுபவிப்பார்
பாவிகாள்! அந்தப் பணம்?"

என்னுஞ் செய்யுளைக் கீரர் கேட்பாராயின், யாது விடை கூறுவரோ, அறியேம்! பொருளைச் சேர்த்து வைக்குஞ் சிக்கனக்காரன் செய்கை, அருவருக்கத் தக்கதென்பது இச்செய்யுளால் தெளிவாமன்றே?

'மூன்றாவது-பெருஞ்செலவாளி, தீமைக்குக் காரணமான பற்பல கொடிய செயல்களைச் செய்யவும் பின்னிடான் என்று கீரர் கூறியது சிறுவர் வாயினும் சிரிப்பை விளைக்கும்; அவன் தீச்செயல்களுக்கே தன் பொருளைச் செலவிடுவான் என்பது பொருந்தாதன்றே? குமணன் என்னும் அரசன், தன் நாட்டைத் துறந்து காட்டில் வதிந்த காலத்தும், வறுமையால் வாடித் தன்னைத் தேடியடைந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவருக்குத் தன் தலையையும் கொடுக்க உடம்பட்டானன்றே? அதனால், வள்ளலாவான் தன் உயிரையும் வழங்கப் பின்னிடான் என்பது வெளியாகும்.

'நான்காவது—சிக்கனக்காரன் தேனீக்களைப் போல மெய் வருந்திப் பொருளைத் தேடி அதனைச் செலவு செய்யாமல் சேர்த்து வைப்பதனால், அப்பொருள் அவன் இறந்த பின்னர்ப் பலருக்குப் பயன்படுவதாகும் என்று கீரர் கூறியது ஒரு நியாயமாமோ? வள்ளலாகிய செலவாளி, தான் வாழும் பொழுதே பலருக்கும் வழங்கித் தானும் துய்த்து அப்பொருளைப் பயன்படுத்துவது சிறந்த செயலன்றோ?

"உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே

வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ!
இழந்தானென் றெண்ணப் படும்."

என்னுஞ் செய்யுளுக்கு இசைய, சிக்கனக்காரன், சேர்த்து வைத்த பொருளை உடையனுயினும் அதனை இழந்தவனே ஆவானன்ருே?

'ஐந்தாவது—பொருட்பேய் பிடித்த பேராசையுள்ள ஒருவன் அப்பொருளைச் சேர்ப்பதற்கு எவ்வகைப்பட்ட தீச்-செயலையும் செய்யப் பின்னிடான்; கொலை முதலிய குற்றங்-களைச் செய்யவும் அஞ்சான். சிக்கனக்காரன் தான் இறக்கு-மளவும் தன் பொருளைப் பார்த்துக்கொண்டே இன்பமடை-கின்ருன் என்று கீரர் கூறினுர். வள்ளலோ, தன் வாழ்-நாளில் தான் ஈட்டிய பொருள்களைப் பலருக்கும் வழங்கி, 'ஈத்துவக்கும் இன்பம்' அடைகின்ருன்.

'ஆருவது—அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருள் காரணமாகும். அதுவே வீட்டிற்கும் ஒருவாறு காரண-மாகும். ஆதலின், பொருளை நல்வழியிற் செலவழிப்-பவனே அறம், இன்பம், வீடு ஆகிய இவற்றையடையப்-பெறுவான். சிக்கனக்காரன் இவற்றுள் ஒன்றையேனும் பெருன். அதனுல், செலவாளியின் செயல் இவ்வுலகத்திற்கு உபகாரமாகவும், அவனுக்கே பெரும்பயனை விளைப்பதாகவும் இருத்தலின், சிக்கனக்காரனைவிடச் செலவாளியே சிறந்தவ-னுவான் என்பது என் சித்தாந்தம்,' என்ருர்.

இவ்விருவரும் கூறிய பேருரைகளைக் கேட்டு முடிவு தேரானுகி மன்னன் மனந்தடுமாறி நிற்கையில், கீரங்-கொற்றனுர் என்னும் புலவர், ஆராய்ந்து முடிவு கூறுவா-ராயினர்:

'மன்னர் மன்னரே, இன்னிசைப் புலவராகிய இருவரும் நேர் மாருன கருத்தையே கூறினர். கீரர், பொருளைச் சேர்த்துவைக்குஞ் சிக்கனக்காரனே சிறந்தவனென்று கருத்-துக்கொண்டார். நக்கீரர், வரையாது கொடுக்கும் வள்ளலே சிறந்தவனென்று வாதித்தனர். அவரவர் தத்தம் கூற்றுக்-கேற்ப மேற்கோளும் காட்டினர்.

'செல்வம் உலக இன்பத்திற்கு முக்கிய காரணமாகும். அதனைச் செலவு செய்யாது வறிதே வைத்திருப்பதனுல்

பயனின்று. செலவாளி தன் வருவாய்க்குத் தக்க செலவு செய்தல் வேண்டும். வருவாய் சுருக்கமாகவும் செல்வு பெருக்கமாகவும் இருப்பின், அச்செலவாளி இன்னலுறு-வான். அதனுல், தன் வருவாயை நோக்கி ஒருவன் செலவு செய்தல் வேண்டும். தேடிய பொருள் அனைத்தையும் புதைத்து வைப்பவன் பூதம் போல்பவன் ஆவான்.'

இவ்வாறு கீரங்கொற்றனுர் கூறிய முடிவுரையைக் கேட்ட முடி மன்னன், உண்மை தேர்ந்து, உவப்புற்ருன். அதனுல், அவன், 'செலவாளியே இவ்வுலகத்திற்கு மிகச் சிறந்த துணைவனுவான்,' என்பதை அனைவர்க்கும் விளங்கக் கூறினுன்: 'செலவாளி, தன் செயலினுலே தான் ஒருவன் துன்புற்ருலும், பலருக்கும் பயன்பட்டு, அவரனைவரையும் இன்புறச் செய்வதனுல், அவனே சிக்கனக்காரனைவிடத் தன் நாட்டிற்கு மிக்க நலம் புரிபவனுகின்ருன் என்பது தேற்றம்,' என்ருன்.

# 3. பெரிய புராணத்திற்காணப்படும் நாகரிகப் பண்பாடு

[டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A., L.T., M.O.L., Ph. D.]

**முகவுரை :**

**பெரிய புராணம்** என்பது அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகளைப் பற்றிப் பேசுவது. அந்நாயன்மார் காலம் ஏறத்தாழக் கி. பி. 300—900 என்னலாம். அவர்களைப் பற்றிக் கூறும் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் காலம் கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியாகும். இவ்வாறு பாட்டுடைத் தலைவர்கள் காலத்திற்கும் சேக்கிழார்க்கும் இடையில் ஏறக்குறைய 300 ஆண்டுகள் வேறுபாடு இருப்பினும், நடுவுநிலை கொண்டு ஆராயின், அநபாய சோழனுக்கு முதல் அமைச்சரான சேக்கிழார், இயன்ற வரை நாயன்மார் காலச் செய்திகளையும் நாகரிகக் குறிப்புகளையுமே தமது நூலிற் குறித்துள்ளார் என்பது வெளியாகிறது. ஆதலின், பெரிய புராணத்திற் காணப்படும் நாகரிகப் பண்பாட்டுக் குறிப்புகள், நாயன்மார் வாழ்ந்த பரந்துபட்ட காலமான பல்லவர் காலச் செய்திகளே என்று கோடலில் தவறில்லை. அஃதாவது, பெரிய புராணத்தைக்கொண்டு தமிழகத்தில் கி. பி. 300 முதல் 900 வரை நிலவியிருந்த நாகரிகப் பண்பாடு இத்தகையது என ஐயத்திற்கு இடனின்றிக் கூறலாம்.

## 1. சமூக அமைப்பு

அக்காலத் தமிழ்ச் சமூகத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பலவகைத் தொழிலாளர் என்ற பாகுபாடுகள் இருந்தன. ஆனல், அவை சமய-சமூகத் துறைகளில் மிக்க ஒருமைப்பாடு உடையனவாகக் காணப்பட்டன.

**மறையவர் :**

வேதங்களில் வல்ல மறையவர் தமிழ் அரசரால் சிறப்பிக்கப் பெற்றனர் ; '**பிரமதேயம்**' என்ற பெயரால் பல சிற்-

றூர்களைப் பெற்றனர். அவர்கள் வாழ்ந்த இடங்கள் '**பிரமபுரி, அகரம்** அல்லது **அக்கிரகாரம், பிரமதேசம், சதுர்வேதிமங்கலம், புதூர்** அல்லது **புத்தூர், மங்கலம்**' எனப் பல பெயர்களாற் குறிக்கப் பெற்றன. அவர்கள் தாங்கள் இருந்த இடங்களில் ஊராட்சியை நன்கு கவனித்து வந்தார்கள். **திருவெண்ணெய் நல்லூர், தில்லை** (சிதம்பரம்), **சேய்ஞலூர்** என்ற ஊர்களில் இத்தகைய மறையவர் ஊராட்சி மன்றங்கள் இருந்தன. அவை ஊர் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கின. வடமொழியிற்புலமை பெற்றிருந்தாற்போலவே **திருஞானசம்பந்தர்** போன்ற மறையவர் தமிழிற்கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

**அரசர் :**

தமிழகத்தில் வடநாட்டு முறை பற்றிய **க்ஷத்திரியர்** என்ற வகுப்பு இல்லை. இங்குச் **சேர சோழ பாண்டியர், பல்லவர்** என்ற பேரரசரும், **குறும்பர், கள்ளர், மலைவாணர்** முதலிய சிற்றரச மரபினரும் இருந்தனர். இவர் அனைவரும் அமைச்சு முதலிய அரசவுறுப்புகள் அனைத்தும் வாய்க்கப் பெற்றிருந்தனர்.

**வணிகர் :**

நாயன்மார் காலத்தில் **காரைக்கால், நாகப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், மயிலாப்பூர்** என்பன கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கின. இந்த நகரங்களில் பெருஞ்செல்வர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் **இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள்** முதலிய கடல் கடந்த நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தார்கள். உள் நாட்டு வாணிகமும் சிறப்புற நடை பெற்றது. வணிகர் பண்டப் பொதிகளைக் கள்வரிடமிருந்து காக்கப் போர்ப் பயிற்சியும் பெற்றிருந்தனர்; போர் வீரர்க்குரிய எல்லாப் போர்க்கருவிகளையும் வைத்திருந்தனர்.

**வேளாளர் :**

பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர் வேளாளர் ; நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர் ; அரசர்க்குப் பெண் கொடுக்கும் உரிமை பெற்றவர். **திருநாவுக்கரசர்** வேளாளர். அவர் ஏறத்தாழ 15 வருட காலம் சமணராய் இருந்து, பல கலை நூல்களைப் படித்துத் '**தருமசேனர்**' என்ற பட்டம் பெற்றவர். அவர் தமக்கையார் **திலகவதியார்**, அவரை மீட்டுச் சைவராக்கச் சக்தி பெற்றிருந்தார் எனின், அவ்வம்மையாரின் கல்வி கேள்வி ஒழுக்கங்களைப்பற்றிக் கூற வேண்டுவதில்லை அல்லவா ? நாயன்மார் அறுபத்து மூவருள் பதின்மூவர் பிராமணர்; அவர்கட்கு இணையாக வேளாளருள்ளும் பதின்மூவர் நாயன்மாராய் விளங்கினர் எனின், அவர்களுடைய கல்வி கேள்வி ஒழுக்க நிலையின் உயர்வினை நன்குணரலாம் அல்லவா ?

**பிற வகுப்பார் :**

பல தொழில் செய்து வந்தவரும் கல்வி கேள்விகளில் வல்லவராய் இருந்தனர். **நந்தனார்** என்பவர் பறையர் மரபினர். அவர் காலத்தில் தீண்டாமை தமிழ் நாட்டில் இருந்தது என்பது அவர் வரலாற்ருல் தெரிகிறது ; ஆயினும், கல்வி ஒழுக்கங்களில் சிறந்தார் சமூகத்தில் ஏற்றம் பெற்றனர் என்பதற்கு அவர் வரலாறே சான்ருய் நிற்கிறது. பண்ணில் வல்ல **பாணர்** மரபினர் அக்காலத்தில் ஓரளவு இழிந்தவராகக் கருதப்பட்டனர் போலும் ! எனினும், **சம்பந்தர்** திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர் மனைவியாரையும் பெருஞ்சிறப்புடன் நடத்தியதைக் காண, சமயத்துறையில் சாதி வேறுபாடு பெரிதளவு கவனிக்கப்படவில்லை என்பது தெரிகிறது.

## 2. மகளிரும் மணமும்

**மகளிர் :**

நாயன்மார் காலத்துப் பெண்கள் சமூகம் ஆடவர்க்குச் சமமாகக் கருதப்பட்டது. நாயன்மார் பூசை, அடியாரை உபசரித்தல், கோவிலில் வழிபாடு செய்தல், சமயத் தொண்டு

புரிதல் முதலிய வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலும் ஆடவர்க்குச் சமமாகவே பெண்டிரும் நடத்தப்பட்டனர். அம்மாதரசிகள் சிறந்த கல்வி ஒழுக்கங்களிற் சிறந்திருந்தமையாற்றான் இத்தகைய உரிமைகளைப் பெற்றிருந்தார்கள் என்னல் தவருகாது. வணிகப் பெண்மணியாகிய **காரைக்கால் அம்மையார்**, திருமுறைகளில் சேர்க்கத்தக்க பத்திச்சுவை பொருந்திய பாடல்களைப்பாட வல்லவராய் இருந்தார்; சிறந்த பல்கலைப் புலவரான **அப்பரைச்** சமணத்திலிருந்து சைவராக்கும் ஆற்றல் அவர் தமக்கையார் பெற்றிருந்தார்; தம் கணவரைச் சமணத்திலிருந்து சைவராக்க **மங்கையர்க்கரசியார்** முனைந்தனர்; யாழ்ப்பாணராகிய **திருநீலகண்டருடன்** அவர் மனவியாரும் பாடிக்கொண்டே ஞானசம்பந்தருடன் தல யாத்திரை செய்தார். இவை அனைத்தும் அக்காலப் பெண்மணிகளின் உயர்நிலையைக் குறிக்கின்றன அல்லவா? இத்தகைய பெண்மணிகள் தங்கள் கணவருடன் ஒத்துழைத்தமையாற்றான் அக்காலச் சைவ சமயம் வீறு கொண்டு வளர்ந்தது.

சமய வளர்ச்சிக்காகச் சில பெண்கள் துறவுநிலை பூண்டு கன்னி மாடத்தில் இருந்தார்கள். அக்கன்னி மாடப் பெண்கள் விரும்பினுல், மணவாழ்வை மேற்கொள்ள உரிமை பெற்றிருந்தார்கள்.

உடன் கட்டை ஏறுதல் அக்கால வழக்கம். திருநாவுக்கரசர் தகப்பனுர் இறந்தவுடன் தாயார் உடன் கட்டை ஏறினர். மனைவிமார் கணவரது தவருன ஒழுக்கத்தை வெறுத்தனர்; அக்கணவரைத் தொடவும் அருவருத்தனர்.

**திருமணமுறைகள் :**

மணமகனே ஒரு பெண்ணை விரும்பிப் பெரியோரைப் பெண் வீட்டாரிடம் அனுப்புதல் உண்டு. மணமகன் தந்தை முதலியோர் நேரே பெண் வீட்டாரிடம் சென்று மகள் பேசலும் உண்டு. இரு திறத்தார் இசைவும் தெளிந்த பின்னரே மண நாள் குறிக்கப்படும். மணத்திற்கு மணமகனுடைய 'குணமே' சிறப்பாகக் கருதப்பட்டது. இவ்வளவு நுட்பமாகக் கவனித்தும் காரைக்கால் அம்மையார் கணவன்

அவருக்கு ஏற்றபடி நடக்கத் தவறி, அவரது இல்வாழ்க்கையைக் கெடுத்தான். சம்பந்தர் திருமணம் வைதிகமுறைப்படி நடந்தது. சுந்தரர் (குருக்கள்) திருமணம் காதல் திருமணம்; கோவிலில் நடந்தது. பெண் தனக்கு மணமுடிவு செய்த பிறகு கணவன் இறந்துபடின், மறுமணம் செய்துகொள்ளும் வழக்கம் இல்லை. அவள் உடனே இறத்தல் அல்லது கைம்மை நோன்பு மேற்கொள்ளல் என்ற இரண்டில் ஒன்றனை மேற்கொண்டாள். குருக்கள் மரபினரான சுந்தரர் கணிகைப் பெண்ணையும் வேளாளர் மகளையும் மணந்தார்; கோட்புலியார் என்ற வேளாளர், தம் பெண்களை மணக்குமாறு சுந்தரரை வேண்டினர், சிவநேசச் செட்டியார் தம் மகளை மணக்கும்படி சம்பந்தரை வேண்டினர். இவற்றை நோக்க, சைவர்க்குள் மணத்தொடர்பாகச் சாதி வேறுபாடுகள் கவனிக்கப்பட்டில என்பது தெரிகிறது.

## 3. அரசியல் கழகங்கள்

**அரசர் :**

தமிழகத்தில் அரசர் என்ற தனிமரபு இல்லை என்று முன் சொன்னோம். தமிழகத்துப் பேரரசராயினும் சிற்றரசராயினும், அவர்க்குப் பின் அவர் மக்களே பட்டத்தை அடைந்து வந்தார்கள். அரச மரபினர் இல்லாத பொழுது அமைச்சரும் குடிமக்களும் பட்டத்து யானையை ஏவிவிடுவார்கள். அது தன் துதிக்கையில் மாலை ஒன்றைத் தாங்கி வெளிச்சென்று ஒருவர்க்கு அதனை அணிவித்துத் தன்மீது சுமந்து வரும். அவர் அரசராக முடி சூட்டப்பெறுவர். இங்ஙனம் வணிக மரபினரான மூர்த்தி நாயனர் பாண்டி நாட்டுக்கு அரசராக்கப்பட்டார்.

அரசன் குடிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்தான்; தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், விலங்குகளாலும் உண்டாகக்கூடிய துன்பங்களைப் போக்கினன்; அரசன் தன் சமயத்தையே சிறப்பாகக் கவனித்தான்; அதனை எதிர்த்தவரைத் தண்டித்தான்; ஆனல், பிறசமயத்தில் பற்று ஏற்பட்டதும் பழைய சமயத்தி-

னிடம் பகைமை காட்டலும் இயல்பாய் இருந்தது. இவற்றைக் **குணபரன் நெடுமாறன்** என்பவன் செயல்களிலிருந்து அறியலாம். பொதுவாக அரசன் தன் சமய விதிகட்குக் கட்டுப்பட்டு நடந்தான்; அவ்விதிகளை மீறினர் யாவராயினும் அவர்களைக் கடுமையாகத் தண்டித்தான். அரசன் இறந்தால், உடன் இறக்கும் வேலைக்காரப் படை அக்காலத்தில் இருந்தது.

**பொது நல அமைப்புகள் :**

பெரியபுராணம் கொண்டு ஆராயும்பொழுது நாயன்மார் காலத்தில் **திருப்பாதிரிப்புலியூர்** சிறந்த கலைப்பீடமாய் விளங்கியது என்பது தெரிகிறது. அது சமணசமய மடம் இருந்த பதியாகும். **அப்பர்** அம்மடத்திற்றான் பல கலைகளைக் கற்றுத் **தருமசேனர்** என்ற பட்டம் பெற்றார். இங்ஙனம் சமணர் குடியிருந்த **திருவாரூர், திருவோத்தூர், திருமயிலாப்பூர்** முதலிய இடங்கள் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தன. அங்ஙனமே பௌத்தர்கள் வாழ்ந்த **போதி மங்கை** பௌத்தர்க்குச் சிறந்த கலைப்பீடமாய் விளங்கியது. **காஞ்சி,** சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய நான்கிற்கும் தாயகமாய் விளங்கியது. 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்று அப்பர் பாராட்டுவதிலிருந்து இந்த உண்மையை உணரலாம். **பாலி, வடமொழி, தமிழ்க்கல்வி** அக்காலத்திற் சிறப்புற்றிருந்தது. இதனைப் **புத்ததத்தர், ஹியூன் சுவாங்** போன்றவர் கூற்றுகளைக் கொண்டும் மெய்ப்பிக்கலாம்.

சமயக் கல்வியைப் புகட்டக் கோவில்களை அடுத்து மடங்கள் இருந்தன. அம்மடங்களில் மாணவர் பொதுக் கல்வியும் சமயக்கல்வியும் பெற்றனர். அப்பர், சம்பந்தர் போன்ற சமய ஆசிரியர் தங்குவதற்கும் அவை பயன்பட்டன. **திருவீழி மிழலை, திருமருகல், திருமறைக் காடு, திருப்புகலூர்** முதலிய பல இடங்களில் இத்தகைய மடங்கள் இருந்தன.

ஊராட்சி மன்றங்கள் இருந்தன என்பதை முன்னரே குறித்தோம் அல்லவா? அவற்றில் கல்வி, கேள்வி, ஒழுக்கம், அனுபவம் ஆகிய இவைகளே உறுப்பினர்க்கு இலக்கண-

மாகக் கருதப்பட்டன. கிராமசபையில் அவ்வூர்த் தொடர்பான எல்லாப் பத்திரங்களும் ஓர் அறையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. அது **'அரண் தரு காப்பு'** எனப்பட்டது. கிராமசபைக் கணக்கன் ஒருவன் இருந்தான். வழக்குகளில் ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி ஆகிய மூன்றையும் கவனித்தே தீர்ப்பளிக்கப்பட்டது. சிறுவர் குற்றங்கட்குப் பெற்ஞேர்கள் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டார்கள். இங்ஙனம் நீதி முறைச்சட்டங்கள் இருந்தாற்போலவே, இன்னின்ன விலங்குகளைத்தான் வேட்டையாட வேண்டும் என்று காட்டிலாக்காச்சட்டமும் இருந்ததென்று ஊகிக்க இடமுண்டு.

## 4. சமயம்

நாயன்மார் காலத்தில் சமணம், சைவம், வைணவம், பௌத்தம் என்ற சமயங்கள் தமிழ் நாட்டில் இருந்தன. சமணத்தில் **திகம்பரசமணமே** மிகுதியாகப் பரவியிருந்தது. அதன் செல்வாக்கினுல் சைவம் தலை தூக்க முடியாதிருந்தது. பின்னர் அப்பர் தொண்டை நாட்டைச் சைவநாடாக்கிஞர்; சம்பந்தர் பாண்டி நாட்டைச் சைவநாடாக்கிஞர்; சமணரையும் பௌத்தரையும் வாதங்களில் வென்ருர். சமயப் போராட்டத்தில் தோற்றவர் கழுவேறுதல் அல்லது ஏற்றப்படுதல் அக்கால வழக்கம் போலும்!

சைவருள் **காபாலிகர், பாசுபதர், காளாமுகர்** எனப் பல வகையினர் இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் வடநாட்டிலிருந்து இங்கு வந்தவர்கள்; தங்கள் சமயப்பழக்க வழக்கங்களை இந்நாட்டிற் பரப்பிஞர்கள். அவர்கட்கென்று சில ஊர்களில் மடங்கள் இருந்தன.

தமிழ் நாட்டில் சுமார் 300 சிவன் கோயில்கள் இருந்தன. அவற்றில் விழாக்கள் நடைபெற்றன. **சிதம்பரம், திருவாரூர்க்** கோவில்கள் மிகச் சிறந்தவையெனக் கருதப்பட்டன.

## 5. பிற குறிப்புகள்

சிதம்பரம், காஞ்சி முதலியவை சிறந்த பெரிய நகரங்களாய் இருந்தன. திருவெண்ணெய் நல்லூர் முதலியன

கிராமங்கள். இவையன்றி, **வேடர் சேரி, வலைஞர் பாடி** முதலிய வாழிடங்களும் இருந்தன. நகர அமைப்பு, கிராம அமைப்பு என்பனவற்றை இன்றைய காஞ்சி, சிதம்பரம் முதலிய நகரங்களைக்கொண்டும், பாடல் பெற்ற எந்தக் கோவிலையுடைய கிராமத்தைக்கொண்டும் எளிதில் அறியலாம். காஞ்சி நகர அமைப்பு மிகச் சிறந்த விற்பன்னரால் அமைக்கப்பட்டது என்பதைக் **கெட்டிஸ் துரை** அறிக்கையைக்கொண்டு நன்கறியலாம்.

உடை, நகை, போர்க்கருவிகள், இசை, நடனம் பற்றிய பல விவரங்கள் பெரிய புராணத்திற்கூறப்பட்டுள. அவ்விவரங்கள் சரி என்பதைச் **சித்தன்ன வாசல்** ஓவியங்களைக்கொண்டும் **கயிலாசநாதர்** கோவில் **வைகுந்தப் பெருமாள்** கோவிற்சிற்பங்களைக்கொண்டும் நன்குணரலாம்.

**முடிவுரை :** பல்லவர் காலத் தமிழர் நாகரிக வாழ்க்கையைக் கூறிய தமிழ் நூல்கள் **திருமுறைகள், நாலாயிரப் பிரபந்தம், பெரிய புராணம்** ஆகிய மூன்றுமே என்னலாம். இவற்றுள் மிக்க பயனைத் தருவது பெரிய புராணமே. அது வரலாற்றுக்கும் அக்காலச் சமுதாய வாழ்வினை அறிதற்கும் பெருந்துணை புரிவதாகும். அத்தகைய பெருநூலை அளித்தருளிய **சேக்கிழார் பெருமானுக்கு** நமது வணக்கம் உரியதாகுக !

# 4. கோயிற்கலையின் மறுமலர்ச்சி

[டாக்டர் பா. நடராசனுர், M.A., D. Litt.]
சென்னை அரசாங்கப் பொருளாதார அறிவுரை அறிஞர்

கலை உயர்வுக்கும் கற்பனைப் பெருக்குக்கும் அழியாத வைப்பாய் இருப்பவை தென்னுட்டுக் கோயில்களே. இந்தப் பெருமை வடநாட்டுக்கு இல்லை. இந்துக் கோயில்கள் மகமதி-யப் பள்ளியாகி, மகமதியப் பள்ளிகள் இந்துக் கோயில்களாகி மாறுபட்டு வயங்கவே தனிப் பெருமை ஏதும் இல்லாத முறையிலேயே வடநாட்டுக் கோயில்கள் அமைந்துள்ளன. வேற்று நாட்டினர் படையெடுப்பாலும், மத வெறியாலும் வடக்கே நிலையான—தொன்மையான—கோயிற்கலை வளர முடியவில்லை. தென்னுட்டுக் கோயில்களோ, சிற்பக் கலையின் சிகரமாய்ப் பொலிகின்றன ; ஹாவால், பர்கூன் போன்ற மேலை நாட்டு ஆசிரியர்களையும் பிரமிக்கச் செய்யும் நுட்பம் கொண்டன.

கோயிலை மையமாகக்கொண்டது தமிழன் கலை; ‘கோயி-லில்லா ஊரில் குடியிருக்க வேண்டா,’ என்பது தமிழன் கண்ட கொள்கை. கலை வளர்ச்சிக்கும், சமூக நேயத்துக்கும், ஆன்ம விரிவுக்கும், அறவாழ்வுக்கும் உறைவிடமாய் இருந்தது கோயில் ; ஏன், பொருளாதார வளர்ச்சிக்குங்கூடப் பயன் படுவதாயிற்று. பஞ்சங்கள் நிகழ்ந்த காலத்துப் பெருவாரி-யான மக்கள் வேலையில்லாது வருந்தியபடியால், அரசர்கள் ஆலயங்களை அமைத்தார்கள். கோயில்களைக் கட்டும் பணி-யினுலேயே எண்ணிறந்த ஏழை மக்கள் வயிறு வளர்த்தார்கள். சிற்பியர்க்கும், ஓவியர்க்கும், கலைஞர்க்கும், கவிஞர்க்கும் கோயிலே தாயகமாயிற்று. அன்றொரு நாள் ஆலயங்கள் கல்வி நிலையங்களாயிருந்தன ; கலைக்களஞ்சியங்களாயிருந்தன ; முத்தமிழ் தழைவிக்கும் வித்தகக் கழகங்களாயிருந்தன ; அனுதை இல்லங்களாய் விளங்கின ; அறங்கூறும் அவை-களாய் இருந்தன; அற்றூர்க்கும், அலந்தார்க்கும், கற்றூர்க்கும், கல்லார்க்கும், ஊர் நடுவமைந்த பயனுடைய பழமரங்கள் போன்று உதவின. இதற்குக் கல்வெட்டுக்கள் இன்றும் சான்று பகர்கின்றன.

பல்லாயிர ஆண்டுகளாகப் பற்பல அரச வமிசங்கள் இந்நாட்டை ஆண்டு வந்தன. முடி சூடிய மன்னராகிய சேர சோழ பாண்டியரதும், பல்லவர் விஜய நகர மன்னர் முதலியோரதும் ஆகிய ஆட்சியெல்லாம் இந்நாட்டிலே நிலவின. ஆயினும், எல்லா மன்னர்களும் ஆலயங்களை ஆக்குவதிலும் அவற்றைப் புதுக்குவதிலும் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். எனவே, தென்னாட்டுக் கலையின் சிகரமாய் விளங்கும் கோயிற்கோபுரத்தைச் சென்னை அரசினர் சின்னமாகக் கொண்டிருப்பது மிகப் பொருத்தமானதாகும்.

அறநெறிக்கு வைப்பாய்ச் சமூக நலத்துக்கு உறைவிடமாய் இருந்த கோயில்கள் இடைக்காலத்திலே இழிந்த நிலை அடையலாயின. அரிய கலைகளாகிய ஆடலும் பாடலும் நிகழ்ந்த ஆலயங்கள், அவற்ருலேயே மாசுறலாயின. அறம் வளர்த்த அவையங்கள், பாழ் மண்டபங்களாய் மாறின. விரிவுரைகள் நிகழ்ந்த இடங்கள், வெற்றுரைக்கு இடமாயின. ஆன்மநேய அறிவுரைகள் முழங்கிய இடங்கள், வம்புக்கும் வழக்குக்கும் இடந்தந்தன. பொது மக்கட்கு இருப்பிடமாய கோயில்கள், மடமைக்கும், மடிமைக்கும், அழுக்குக்கும், அநாகரிகப் பழக்க வழக்கங்கட்கும் நாற்றங்காலாயின. எனவே, இந்நிலையில் ஆலயங்கள் இருந்த நிலையை எண்ணி மக்களிற்பலர் அதனை இழித்தும் பழித்தும் பேசுவதிலும் வியப்பில்லை. ஆலயங்களை இடிக்க வேண்டுமெனக் கூறுவார், ஆங்கு நிகழும் மடமை, அடிமை, அழுக்கு, சுரண்டல் முதலியவற்றை இடிக்க வேண்டுமெனக் கூறுகின்றனரெனக் கருத வேண்டுமேயன்றி, நம் நாட்டுத் தொன்மைக் கலையையும் நாகரிகத்தையும் இடிக்குமாறு கூறுகிருர் என எண்ண மனந்துணியவில்லை.

அறத்தின் நிலைக்களம் ஆலயம். அறத்தை நிலைபெறுத்துவது அரசியல். 'அறம் வேறு; அரசியல் வேறு,' என மருண்டு கூறுகின்றனர். அறமிலா அரசியல் நிலைபெருதென்று ஆதியிலேயே கண்டவர் தமிழர். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்ருவதூஉம்' என்பது இளங்கோவடிகள் உள்ளம். 'உண்மைச் சமயமும் அரசியலும்

ஒன்றே; இரண்டென்பவர் இரண்டையும் அறியாதவர்,' என்ருர் **காந்தியடிகளும்**. எனவே, அறம் பிறழ்ந்த காலத்து அரசு தலையிடுவதும், அரசு பிறழ்ந்த காலத்து அறநெறியாளர் தலையிடுவதும் முறையேயாகும்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்நாட்டிலே ஆட்சி நிலை நாட்டிய காலத்து, அறம் வளர்க்க வந்த ஆலயங்களுக்கு நல்லோரால் கொடுக்கப்பட்டிருந்த நிலங்களும், பொருள்களும் தீய வழிகளிலே பாழாக்கப்படுவதையும், கோயில் நிலத்து உழவர்களைத் தருமகர்த்தாக்கள் நசுக்குவதையும் கண்டனர். இதனுல், பொது மக்களிடமிருந்து முறையீடுகள் கம்பெனியாருக்கு வந்தன. நிலவரியை அரசியற்பொருளாதாரத்துக்கு அடிப்படையாகக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனியார், உழவர் வாழ்வில் கவலைகொண்டு, ஆலயப் பரிபாலனத்தில் நுழைந்து பல சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டனர்.

அந்நாளில் **ஜாகிர்** என்று வழங்கப்பட்ட செங்கற்பட்டு மாவட்டத்திற்கு **லயனல் பிளேஸ்** என்பவர் கலெக்டராய் இருந்தார். 1795ல் காஞ்சிக் கோயில் பரிபாலனம் தாறுமாருய் இருந்தது. கலை வளர்ச்சிக்கும் ஆன்ம விலாசத்துக்கும் உரிய பொருள் எல்லாம் ஒரு சிலரால் உறிஞ்சப்படலாயிற்று. அந்நிலையில், தாம் அயல் நாட்டார் என்பதையும் கவனியாது, புறச் சமயத்தார் என்பதையும் பொருட்படுத்தாது, மக்கள் நன்மையை எது எது பாதிக்குமோ, அதிலெல்லாம்—அரசியலோ, சமூகமோ, பொருளாதாரமோ, எதிலும்—அரசாங்கம் தலையிட வேண்டிய கடப்பாடுடையது என முடிவு செய்து, கோயிற்பரிபாலனத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார்; அன்றியும், நாள்தோறும் நடைபெற வேண்டிய நித்திய நைமித்திகங்களையும், திருவிழாக்களையும் ஒழுங்குற நிகழச் செய்தார். இங்ஙனம் 1795-ஆம் ஆண்டில் தொடங்கிய ஆலயச் சீர்திருத்தப்பணி, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்குள், அதாவது 1849க்குள்ளாக, அன்றைய 21 ஜில்லாக்களிலுள்ள 8,292 கோயில்களிலும் நடைமுறையில் வந்தது. தருமம் தவறிய தருமகர்த்தாக்கள் மாற்றப்பட்டுப் புதியவர் நியமிக்கப்பட்டனர். அடைத்துக் கிடந்த ஆல-

யங்கள் திறக்கப்பட்டன. முடங்கிக் கிடந்த பூசையும் விழாவும் முறையே நடைபெறலாயின. இதனால், நாட்டு மக்களுக்கும் கம்பெனியின் கலெக்டர்களுக்கும் இடையே நேசமும் நம்பிக்கையும் நிலவலாயின. ஆலயச் சீர்திருத்தத்தோடு நிலவரிச் சீர்திருத்தமும் ஏற்பட்டது. உழவு மக்களுக்கும் தனக்கும் இடையே நின்ற தரகர்களை அகற்றி, அரசாங்கமே நேரடியாக நிலவரியையும் வாங்கத் தொடங்கியது. அதோடன்றி, வெள்ளைக் கலெக்டர்கள் தாங்களே பல திருப்பணிகளைச் செய்யலானார்கள். மேலே குறித்த செங்கற்பட்டுக் கலெக்டர் லயனல் பிளேஸ், ஏகம்பநாதர் ஆலயத்திற்கு ஆபரணங்கள் செய்து வழங்கினார். அவை இன்றும் உள்ளனவெனக் கேள்விப்படுகிறோம். மதுரையில் 1812ல் கலெக்டராய் இருந்த **பீட்டர் ரவுஸ்** என்பார், குதிரைச் சேவகராகிய சொக்கநாதருக்குத் தங்கத்தால் சேணம் செய்தளித்தார். நெல்லைக் கலெக்டர் நாற்பதினாயிரம் ரூபாய் செலவு செய்து கும்பாபிஷேகம் செய்தார். இங்ஙனம் செய்த வெள்ளைய அதிகாரிகளை அன்றைய கிறித்தவமதத் தலைவர் கண்டித்தனர் ; 'மெய்க்கடவுளை மறந்து, பொய்க்கடவுளைப் போற்றுகின்றார்கள் கம்பெனியின் கலெக்டர்கள்,' எனத் தூற்றினர். '**கல்கத்தா ரெவியூ**' என்ற பத்திரிகையில் பக்கம் பக்கமாக ஆட்சேபணைகள் பிறந்தன.

கம்பெனியார் கையிலிருந்து ஆங்கில அரசாங்கத்தாரிடம் இந்திய ஆட்சி சென்றதற்குப் பின்னர்க் கொள்கை மாறியது. 1857ல் நடந்த சிப்பாய் கலகத்தை நினைத்து, 'இந்தியர் வழக்கத்தில் நாம் தலையிடாமலிருப்பதே நாம் இந்தியாவில் இருத்தற்கு வழி. அவர்கள் எப்படியாவது தொலைந்து போகிறார்கள்,' என்ற மனப்பான்மையைப் புது வெள்ளைய அரசாங்கம் மேற்கொண்டது. இதை 1857-ஆம் ஆண்டில் விக்டோரியா **மகாராணியார்** வெளியிட்ட வாக்குறுதியும் வற்புறுத்திற்று. வற்புறுத்திய இந்த வாக்குறுதி, வரட்டுக் கொள்கையினருக்கு வேதவாக்காயிற்று. அவர் சுகாதாரச் சட்டம், தேவதாசி சட்டம் போன்றவற்றை அறிஞரும் சீர்திருத்தவாதிகளும் கொண்டு வந்த போது மகாராணியார் வாக்குறுதியைக் காட்டி அவற்றை

எதிர்க்கலாயினர். எனினும், அவை சட்டங்களாய்ப் பலரால் பாராட்டப்பட்டதை நாம் காண்கின்றோம். இரட்டையாட்சி இம்மாகாணத்தில் நிலவிய காலத்து, பனகல் அரசர் பெருமுயற்சியால், இந்து மதபரிபாலன சபை அமைக்கப்பட்டது. காலத்துக்கும் மக்கள் நலத்துக்கும் ஏற்ற வழியிலே சமயமும் சமயக் கோயில்களும் இருக்க வேண்டுமென எண்ணினர் அரசர்.

மக்கள் வாழ்வுக்கும், ஆன்மிக வளர்ச்சிக்கும், நாகரிக முதிர்ச்சிக்கும், கலை உயர்வுக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் ஏற்ற முறையில் ஆலயப் பரிபாலனச் சீர்திருத்தங்களை அவ்வப்போது அரசாங்கம் செய்துகொண்டே போவது அதன் கடமை என்பது மீண்டும் நிலைநாட்டப் பெற்றது.

அருளமைந்த ஆட்சியே ஆட்சி; அதுவே, நல்வாழ்வுச் சமூக அரண். இதனை எண்ணியே வடலூர் வள்ளலார், 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக! அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க!' என வேண்டினர். ஆலயங்கள் உயிருள்ளனவாய், கலைக் களஞ்சியங்களாய்த் திகழ வேண்டும்; ஆலயப் பொருள், அஞ்ஞான இருள் அகற்றி மெய்ஞ்ஞானம் மிளிரச் செய்யும் நற்பொருள் ஆக வேண்டும்; கலைஞர் கூடும் அவைக்களமாய் ஆலயம் ஆதல் வேண்டும்; அங்கே உடல் நோய் நீக்கும் மருத்துவ நிலையங்களும், உளநோய் ஒழிக்கும் ஆன்மிக நிலையங்களும் ஓங்க வேண்டும். அற்றாரை ஆதரிக்கும் அறுதை இல்லமாய் அவை திகழவேண்டும்; சாதி சமய வேறுபாடற்ற சமரச ஞானம் மிளிரும் இருப்பிடமாதல் வேண்டும்; 'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்,' என்ற உயர்கொள்கை ஓங்க உதவ வேண்டும். நடமாடும் கோயில்களுக்கு வாழ்வளிப்பதே நம்பனிருக்கும் கோயில் திருப்பணியாகும்.

# 5. பாரதியாரும் பெண்மையும்

[திருவாட்டி ர. இராசாமணியம்மையார், B.A. (Hons.) L.T.]

புலவர்கள் தாங்களியற்றிய காவியங்களில் பூமி, நதிகள், விண்மீன்கள், எண்வகைச் செல்வம் முதலிய அனைத்தையும் பெண்களாக வர்ணித்துள்ளனர். சமணர்களோ, இன்னும் ஒருபடி அதிகமாகவே சென்றுவிட்டார்கள். ஏனென்றில், அவர்கள், வீட்டுலகையும் பெண்ணாகவே பாவித்து, **'கைவல்ய மடந்தை'** என வழங்குகின்றார்கள். அவ்வாறே **அமரகவி பாரதியார்**, கண்ணனைக் **'கண்ணம்மா'** என்கிறார்; மேலும், **கொற்றவை, நாமகள், பூமகள்** முதலிய பெண் தெய்வங்கட்கு வணக்கஞ்செலுத்தியிருப்பதுடன், புதுமைப் பெண்ணைப்பற்றியும் கூறியுள்ளார். மற்றப் புலவர்கள் பெண்களை வருணித்திருப்பது வெறுங்கற்பனை. ஆனால், பாரதியாரோ, பெண்களின் பழங்கால நிலை, இடைக்கால நிலை, அவர்களிடமுள்ள குணங்கள், அன்னார் செய்யக்கூடிய காரியங்கள் முதலியவற்றைப் பற்றி விளக்கிக் கூறுகின்றார்; 'ஔவையார் பிறந்த நாட்டிலா அறிவிற்குப் பஞ்சம்!' என அங்கலாய்க்கிறார். அவர் ஔவையாரை உதாரணமாகக் கூறியதற்குக் காரணம், அவரிடமுள்ள அரசியல் வன்மை, புலமை, வீரம் முதலிய சிறந்த பண்புகளாகும்.

கல்விக்குத் தெய்வம் கலை மகளாயிருக்க, பெண்கள் ஏட்டைத் தொடுவது கூடாது என்று வீட்டுக்குள்ளேயே அவர்களைப் பூட்டி வைப்பதன் பொருளென்ன? 'பிச்சை புகினுங் கற்கை நன்றே. எண்ணெழுத் திகழேல்,' என்னும் அறிவுரைகள் பெண்களை விலக்கிக் கூறப்பட்டவையல்லவே! இடைக்காலத்தில் எழுந்தது, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்னும் எதுகை மோனை நயத்துடன் கூடிய பழமொழி. அதைப் பல பெற்றோர் ஆமோதித்து, பெண்டிர் படிப்பதற்கு அருகதையற்றவர் என்றும், இசை, நடனம் முதலிய கலைகள் பொது மகளிருக்கே உரியன என்றும் கூறி, அவர்களது அறிவு வளர்ச்சியைத் தடுத்தனர். அதனால், கலை வளர்ச்சியும் தடைபட்டது. 'பெண்-

கள் வெயிலில் வரலாகாது; தங்கள் எண்ணங்களை வெளியிடவும் அவர்களுக்கு உரிமையில்லை. ஆணுக்குப் பெண் அடிமை. இல்லத்திலுள்ள ஏனையோருக்கும் அவள் அடிமை. பணங்கொடுத்து வாங்கி வந்த மாட்டைத் தொழுவத்தில் கட்டியது போல அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். எப்போதும் அவர்கள் மாடு போல உழைத்தும் அடிபட்டும் வந்தார்கள். அந்த நாள் மலையேறிவிட்டது. ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை. இருவரும் சமம். 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்,' என்று கூறுகின்றார் கவிஞர்.

நாயினிடம் யோசனை கேளாமலே யார் அதிகவிலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அதை விற்பதைப்போல, பெண்களையும் பிள்ளை வீட்டாரிடம் பணம் பெற்றுக்கொண்டு விற்கிறார்கள். சில ஜாதிகளில் பிள்ளை வீட்டாரும் மற்றும் சில ஜாதிகளில் பெண் வீட்டாரும் பணம் கொடுக்கும் வழக்கம் இருந்து வருகிறது. பெண்களை நாய்போலக் கேவலமாக மதித்து அவர்களைக் கொல்ல மனமின்றி விற்பனை செய்கின்றனர் பெற்றோர். இதனை,

"நல்ல விலைகொண்டு நாயைவிற் பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டிவைத்தார்"

என்னும் அடிகளால் குறிப்பிடுகின்றார் பாரதியார்.

அடுத்தபடியாகப் 'பெண்களை வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்!' என்கிறார். அக்காலத்தில் சுயம்வரம் இருந்து வந்தது. வில்லை வளைக்கும் வீரனையோ, அம்பையெய்யும் அதிசூரனையோ, ஏறுதழுவும் இளைஞனையோ ஒரு கன்னி கணவனாக ஏற்றுக்கொள்வாள். தனக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புப் பெண்ணைச் சேர்ந்தது. போட்டியில் வெற்றி பெறும் வீரனே வாழ்க்கைப் படியில் அடி வைப்பதற்கு அருகதையுள்ளவன். ஆனால், இடைக்காலத்தில், 'மண விஷயத்தில் பெண் குறுக்கிடலாகாது. உனது நன்மையைக் கோருபவர்களன்றோ நாங்கள்?' என்று பெற்றோர்

கூறி, கல்வியறிவற்றவனுக்கும், பிணியாளனுக்கும், ஒழுக்கந்தவறியவனுக்கும் மணஞ்செய்து கொடுத்தனர். ஏனெனில், பணந்தான் அவர்களுக்குப் பிரதானம். நிலையற்ற செல்வத்தை நம்பிச் செய்த காரியத்துக்காகப் பின்னால் அவர்கள் வருந்தவும் நேரிடும். பழந்தமிழ் இலக்கியத்தை நோக்குமிடத்து, குணம், குலம், கல்வி போன்ற பத்து அமிசங்களில் ஒத்திருப்பவனுக்கே பெண் கொடுத்தனர் என்பது நன்கு விளங்கும்.

பாரதியார் படைத்துள்ள புதுமைப் பெண் எப்படிப்பட்டவளென்பதைப் பார்ப்போம் :

“ நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும்அஞ் சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.”
“ ஞான நல்லறம் வீர சுதந்தரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம் ”

இந்த நற்குணங்களால் அவர்கள் தீய வழியில் செல்லுவதில்லை. அச்சம் குடி கொண்டால், பொந்திலேதான் வாழ வேண்டும் ; முன்னணிக்கு வர இயலாது.

பிறகு, அன்னார் செய்யக்கூடிய காரியங்கள் என்னென்ன என்பதைக் கூறுகின்றார். சில வகுப்பினர், தாங்கள் படிக்கும் வழக்கமில்லையென்றும், வெளியிற்செல்லுதல் கூடாது என்றும், அவ்வாறு வழக்கத்துக்கு விரோதமான காரியம் செய்தால் உறவினர் பழிப்பர் என்றும், தெய்வ கோபம் உண்டாகும் என்றும் கூறுவர். அத்தகைய கெட்ட வழக்கங்களை ஒழிக்க வேண்டும் என்பதனை,

“ மூத்த பொய்ம்மைகள் யாவு மழிப்போம்
மூடக் கட்டுகள் யாவுந் தளர்ப்போம் ”

என்னும் அடிகளால் விளக்குகிறார்.

பாரதியாரின் புதுமைப் பெண்ணானவள் பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதுமாகிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிறார். சரித்திரத்தை நோக்குமிடத்து, **இராணி மங்கம்மாள்** பாண்டி நாட்டைத் திறமையுடன் ஆண்டது தெரிகிறது. இன்னும் அவள், அசோகர் செய்-

தைப்போலச் சத்திரம் சாவடி கட்டி, குளங்கள் வெட்டி, சாலை ஓரங்களில் நிழலுக்காக மரங்கள் வைத்துப் பயிரிட்டு, கல்விச்சாலைகள் ஏற்படுத்தியதை நாம் அனைவரும் புத்தக வாயிலாக அறிந்துள்ளோம். காலஞ்சென்ற கவியரசி திரு. சரோஜினி நாயுடு, மேனாட்டு மொழியில் சிறந்த கவிதைகள் இயற்றியதுடன் அமையாது, உத்தரபிரதேசத்தையும் ஆட்சி புரிந்ததை நம் காலத்தில் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இப்பொழுது அகில இந்திய மாதர் சங்கமானது உலக முன்னேற்றத்திற்கான வழிகளை ஆராய்ந்து செய்வதில் ஈடுபட்டிருக்கிறது. இதினின்றும், 'தொட்டிலையாட்டுங்கை தொல்லுலகை யாளுங்கை,' என்னும் பழமொழி எவ்வளவு உண்மையானது என்பது புலனாகின்றது.

அடுத்தபடியாகப் பெண்கள் வேதம் படிக்கவும் நீதிகள் செய்யவும் வந்ததாகப் பாரதியார் கூறுகிறார். வேதம், பெண்களும் ஒரு ஜாதியினரும் ஓதலாகாது என்று மறைத்து வைக்கப்பட்ட காரணத்தினால், மறையென்னும் பெயர் பெற்றது. ஆனால், மைத்திரேயி முதலியோர் வேதத்தைக் கற்கவில்லையா? நீதியையெடுத்துக்கொண்டாலும் பெண்கள் இணையற்று விளங்கி வந்திருக்கிறார்கள். சகோதரன் செய்த தவற்றுக்காக அவனை மலையினின்றும் உருட்டும்படி கட்டளை இட்டாள், இராணி மங்கம்மாள். எனினும், மனுநீதி கண்ட சோழன், பொற்கைப் பாண்டியன் முதலியோரைப் போல அவள் பிற்காலத்தில் எழுந்த காவியங்களில் இடம் பெறவில்லை. கிரேக்க நாட்டில் நீதிக்குரிய தெய்வம் பெண் தெய்வமென்று கருதப்பட்டது. அதன் கண்களைக் கட்டிக் கையில் ஒரு தராசு வைத்திருப்பதுபோல அமைத்திருந்தனர். இதிலிருந்து எந்நாட்டிலும், எக்காலத்திலும் சிறந்த முறையில் நீதி வழங்கப்பட்டதென்பதும், பெண்களும் ஆண்களுக்குச் சமமாக நீதி செலுத்தக்கூடும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

சாதம் படைப்பது மாத்திரமன்றிப் பெண்களால் தேவசாதி படைக்கவும் கூடும். மக்களாய்ப் பிறந்தவர் நற்குண நற்செய்கைகள் காரணமாக, தேவராக மாறலாம். தாய்மாரின் குணாதிசயமே குழந்தைகளுக்கும் படிகிறது. சிறந்த அறிவு

வாய்ந்தவரைக் 'கருவில் திருவுடையோர்' என்கின்றனர். சிவாஜியின் தாயும் நெப்போலியன் தாயும் தம் குழந்தைகள் வயிற்றிலிருக்கும்போது வீர காவியங்களைப் பிறர் வாயிலாகக் கேட்டும் கற்றும் வந்தது, அன்னூர் புதல்வர் சிறந்த வீரராய்த் திகழ்ந்ததற்கு ஒரு காரணமெனக் கருதப்படுகிறது. அதனாலன்றோ 'சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்,' என்கிறார் பாரதியார்? குழந்தையானது நாள் முழுவதும் தன் தாயினிடமே இருக்கிறது. அது மொழி கற்றுக்கொள்ளுவதும் தாயினிடந்தான். அதனாலேதான் அதன் மொழி தாய்மொழியெனப்பட்டது. எதிர்காலப் பிரஜைகளாகவிருக்கும் இளங்குழந்தைகளை உருவாக்கும் சிற்பியாய் விளங்குபவள் தாய். இறுதியாகப் பாரதியார்,

"காத லொருவனைக் கைப்பிடித் தேயவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழைமையைக் காட்டிலும்
மாட்சிபெ றச்செய்து வாழ்ந்திடுவோம்."

என்று பாடினார். 'பெண்ணானவள் கணவனை அடைந்து, அவன் இன்ப துன்பங்களில் பங்கு பெற்று, பண்டைக் காலத்தில் மாதர் செய்து வந்த பலவகைத் தானதருமங்களைச் செய்து, சீரிய முறையில் வாழ்க்கை நடத்த வேண்டும்,' என்கிறார் கவிஞர். பாரதியார் கூறிய புதுமைப் பெண்ணைப் போலவே எல்லாப் பெண்களும் நடப்பார்களானால், அவர்கள் உலக முன்னேற்றத்துக்குச் சிறந்த தொண்டு புரிந்தவர்களாவார்கள்.

# 6. கலிங்கம் எறிந்த கருணாகரன்

[திரு. S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.]

**வரலாற்றுச் செய்திகள் :**

**கருணாகரன்** என்பது இராமபிரானுக்கு வழங்கிய நாமங்களில் ஒன்று. அத்திருப்பெயரேகொண்ட தொண்டை- மானான தமிழ் நாட்டுத் தலைவன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இலங்கை எறிந்த கருணாகரனைப் போலவே, கலிங்கம் எறிந்தவன் இக்கருணாகரன். இவனது வீரச்சிறப்பையும் வெற்றிப் புகழையும் **சயங்கொண்டார்** என்ற புலவர் வாக்கால் நாம் அறிகின்றோம். வரலாற்றுத் தொடர்புள்ள இவனது சரிதம் நம்மனோர் தெரிந்து இன்புறுதற்கு உரிய- தாகும்.

சோழர் பேரரசை உயர்நிலையில் நிறுவிய பிற்காலச் சோழ வேந்தருள் **முதற்குலோத்துங்கன்** ஒருவனாவன். இவனுக்கு **அபயன்** என்னும் பெயரும் வழங்கியது. இவன் கி. பி. 1070 முதல் 1118 வரை நாற்பத்தெட்டு ஆண்டுகள் கொண்ட நீண்ட காலம் சோழர் பேரரசைத் தாங்கி ஆட்சி புரிந்தவன் என்று வரலாற்று நூலோர் கூறுவர். இக்காலத்தில் இவனடைந்த அளவற்ற புகழுக்கு முக்கிய காரணமான- வர்கள் இவனிடம் தானைத்தலைமை பூண்டிருந்த வீரர்களே ஆவார்கள். இவர்கள் எல்லோரும் சோழர் பேரரசின்கீழ்ச் சிற்றரசர்களாய் இருந்தவர்கள்; அபயன் ஆணையை நிறைவேற்றுவதில் ஈடற்றவர்கள்; எட்டுத் திசைகளிலும் படை கொண்டு சென்று வெற்றியே பெற்று அபயனுக்கு வாகை மாலை சூட்டியவர்கள். இவர்களுள் முதலிடம் பெற்றவன் **கருணாகரத் தொண்டைமான்** என்பவன்.

கருணாகரன் குலோத்துங்கனது பெரும்படையைத் தானே நடத்திச் சென்று, கலிங்கரோடு கடும்போர் விளைத்துத் தன் தலைவனுக்கு வெற்றியை அளித்ததோடு, அக்கலிங்க வேந்தனையும் சிறை பிடித்து வந்து அபயன் முன்னே நிறுத்தினான்; இந்த அருஞ்செயலால் அபயனது அவைக்களப் புலவரான **சயங்கொண்டார்** பாடிய

**கலிங்கத்துப்பரணி**யில் பலவிடத்தும் சிறப்பித்துப் பாடும் பேறு பெற்ருன்.

" இலங்கை யெறிந்த கருணு கரன்றன்
இகல்வெஞ் சிலேயின் வலிகேட்பீர் !
கலிங்கம் எறிந்த கருணு கரன்தன்
களப்போர் பாடத் திறமினே. "

என இராமபிரானது வெற்றியையும், இவனது வெற்றியிலே-யும் நிகராக்கிச் சயங்கொண்டார் பாடுதல் காண்க. இவனது வரலாற்றிலேக் கலிங்கத்துப்பரணி, வரலாற்று நூல், கல்வெட்டு ஆகியவற்றில் காணப்படும் செய்திகளேக்கொண்டு கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கருணுகரன் **வண்டை நகரை** ஆண்டு வந்த தலேவன்.

" சுடர்க்கதிர்வாள் அபயனடி அருளி னேடும்
சூடினன் வண்டைநகர்த் தொண்டை மானே. "

என்னும் சயங்கொண்டார் வாக்கால் இதனே அறியலாம். இவன் பல்லவ வமிசத்தில் தோன்றியவன் என்பதும், **தொண்டைமான்** என்னும் சிறப்புப் பெயர் அடைந்தவன் என்பதும், '**பல்லவர் தோன்றலேப் பாடீரே**' (520), '**வண்டைமன், தொண்டைமான்**' (314) என்று பரணியில்வரும் தொடர்களால் அறியப்படும் செய்திகளாகும். பிற்காலச் சோழரின் ஆட்சி தமிழகத்தில் ஓங்கி வளர்ந்த காலத்தில் பல்லவ அரசர்கள் வலிகுன்றி, அச்சோழ வேந்தர் ஆட்சிக்குட்பட்ட குறுநிலத் தலேவர்களாகி வாழ நேர்ந்-தது. தொண்டை நாட்டிற்கு உரியவராயிருந்த அப்-பல்லவ மன்னர், தம் நாட்டிலும் சோழ நாட்டிலுமுள்ள பற்பல ஊர்களுக்குத் தலேவராகி ஆட்சி நடத்தினர். அத்தகைய பல்லவ வேந்தருள் ஒருவனே கருணுகரத் தொண்டைமான். இவன் சோழ நாட்டிலுள்ள **வண்டா-ழுஞ்சேரி** என்னும் ஊருக்குத் தலேமை பூண்டவன். இவ்வூர் **திருநறையூர் நாட்டை**ச் சார்ந்தது என்றும், **வண்டை** என இலக்கிய வழக்குப் பெற்றது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இவன் மனேவியின் பெயர் **அழகிய மணவாளனி மண்டையாழ்வார்** என்பது.

இத்தலைவனுக்குப் **பல்லவர்க்கரசு** என்னும் பெயருள்ள தனயன் ஒருவன் இருந்தனன் என்றும், அவன் அபயனது துணைத் தானைத் தலைவருள் ஒருவனாய் இருந்தவன் என்றும் சயங்கொண்டார் கூறுகின்றார். இவன் அபயனது அரசியல் அதிகாரியாகவும் விளங்கினான்.

**கலிங்கப் போர் :**

கருணாகரத் தொண்டைமான் அபயன் ஆணையைச் சிரமேற்கொண்டு கலிங்கப் போரை நடத்தி வெற்றியுடன் மீண்ட வரலாற்றைச் சுருக்கிக் கூறுவோம் :

சோழ நாட்டின் தலை நகரமாய் விளங்கியவற்றுள் **கங்கை கொண்ட சோழபுரம்** என்பதும் ஒன்று. முதல் **இராசேந்திரன்** பெண் வயிற்றுப் பேரனும், சாளுக்கிய **இராசராசன்** மகனுமான **விசயதரன்** என்பவன், சோழ வமிசத்திற்கு நேரான சந்ததி இல்லாததால், அந்த வமிசத்துக்கு உரியவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கங்கை கொண்ட சோழன் தேவியான தன் பாட்டியால் வளர்க்கப்பட்டு வந்தான். இவனுக்குத் தாய் மாமனாகிய **வீரராசேந்திரன்** தலைமையில் சோணாட்டின் ஆட்சி நடைபெற்று வந்தது. விசயதரன் தக்க வயதடைந்து கல்வி கேள்விகளிலும் போர்ப் பயிற்சியிலும் வல்லவனாகி, உத்தம அரசர்க்குரிய அருங்குணச் செயல்கள் யாவும் பொருந்தியவனாய் விளங்கினான். இக்காலத்தில் வடநாட்டரசனான **சக்கரக் கோட்டத்துத் தாராவர்ஷன்** என்பவன்மேல் படை எடுக்க நேர்ந்தது. இந்த அரச காரியத்தை வாலிபப் பருவம் எய்தியிருந்த விசயதரன் தானே மேற்கொண்டு வடநாடு சென்றான். சென்றவன், போர் வென்று வாகை சூடிய சமயத்தில் கங்கைகொண்ட சோழபுரத்தில் இவனுக்குத் தாய் மாமனான வீரராசேந்திரன் இறந்தான். இவன் தலை நகரில் இல்லாதிருப்பதை ஏற்ற வாய்ப்பாகக்கொண்டு, சோழ வமிசத்தைச் சேர்ந்த வேறு சிலர் அரசுரிமையை அடையும்பொருட்டுக் கலகம் விளைத்தனர். நாட்டில் குழப்பம் உண்டாயிற்று.

வடநாட்டிலிருந்த விசயதரனுக்கு இச்செய்தி எட்டியது. உடனே இவன் விரைந்து வந்து தலை நகரை அடைந்து, கல-

கத்தையடக்கி, குழப்பத்திற்குக் காரணமானவரை ஒறுத்து, அமைதியை நிலைநாட்டிச் சிங்காதனம் ஏறினான். இவனுக்கு **இராசேந்திரன், குலோத்துங்கன், அபயன்** என்னும் வேறு பெயர்களும் வழங்கலாயின. நீதி தவறாத இவன் ஆட்சியில் சோழ நாடு வளங்கொழித்தது. இவனது வல்லமையைக் கண்ட பகையரசர், அடங்கி ஒடுங்கி வாழ்ந்ததுடன், இவனுக்குத் திறையளந்தும் வந்தனர்.

இக்காலத்தில், அபயன் வேட்டையில் விருப்புற்று வெளியேறிப் பல இடங்களை அடைந்து, காஞ்சியை எய்தினான். அந்நகரின் தென்மேற்கு மூலையில் விளங்கிய பொன் மயமான சித்திர மண்டபத்தில் இவன் வீற்றிருந்ததாகச் சயங்கொண்டார் கூறுகின்றார்.

" அம்பொன் மேரு வதுகொல் இதுகொலென்
றும்பர் ரங்கதிர் மெய்யவ னையுறுஞ்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினிற்
செய்த சித்திர மண்டபந் தன்னிலே "

வீற்றிருந்த போது, இவனைச் **சூதர், மாகதர்** முதலியோர் புகழ்ந்து பாடலாயினர். அரசர்க்குரிய சிறப்புக்களுடன் இவன் அரியாசனத்தில் விளங்க, சிற்றரசர்கள் வந்து பணிந்து திறை செலுத்தினார்கள். அரசன் ஆணைப்படி அவன் கட்டளைகளை எழுதி அவைகளை நிறைவேற்றுபவனான **திருமந்திரவோலையாள்** அங்கு அபயன் முன்னிருந்து, அப்பொழுது திறையளந்த அரசர் இன்னாரென்றும், அவர் செலுத்திய திறைப்பொருள்கள் இன்னவென்றும் கணக்கிட்டு வந்தான். இதன் பின் " இதுகாறும் திறை செலுத்தாத அரசரும் உளரோ ?" என்று அபயன் வினவ, " வடகலிங்க நாட்டரசன் இரண்டு முறை திறை செலுத்தத் தவறினான்," எனத் திருமந்திர ஓலையாள் விண்ணப்பஞ் செய்தான். இதுகேட்ட அபயன் முகத்தில் கோபக்குறி சிறிதும் காணப்படவில்லை. அவன் சிறிது புன்னகை புரிந்தான்; தன் அவையை அலங்கரித்திருந்த தானைத்தலைவரை நோக்கி,

" எளிய னென்றிடினும் வலிய குன்றரணம்
இடிய நம்படைஞர் கடிதுசென்(று)

அளிய லம்புமத மலைகள் கொண்டணைமின்
அவனை யுங்கொணர்மின்.........''

என்று ஆணையிட்டான். அதனைக் கேட்டதும் எழுந்தனன் கருணாகரத் தொண்டைமான்.

'' இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
எறிவ னென்றுகழல் தொழுதனன்
மறைமொ ழிந்தமதி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே.''

என்று சயங்கொண்டார் பாடுகின்றார். கருணாகரன் தலைமையில் படைகள் திரண்டெழுந்தன. பல்லவர்க்கரசு, **வாணகோவரையன், முடி கொண்ட சோழன்** ஆகியோர் தானைகளை நடத்த, பல்லவர் கோனும் வண்டை நகர்த் தலைவனுமான கருணாகரன் இரை வேட்ட பெரும்புலி போல இகல்வேட்டுக் களிற்றின்மீது ஏறிச் சென்றான். அப்பெரும்படை, **பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி, பெண்ணை, வயலாறு, பேராறு, கோதாவிரி, கம்பை, சந்தநதி, கோதமையாறு** என்னும் யாறுகளைக் கடந்து கலிங்கநாட்டிற்புக்குச் சூறையாடியும் தீயிட்டும் வழியிலுள்ள ஊர்களைப் பாழ்படுத்திய வண்ணம் தலை நகரை நோக்கிச் சென்றது. படையின் கொடுமைக்காற்றாத குடி மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அலறியோடித் தங்கள் அரசனான **அனந்த பதுமன்** என்பவனை அத்தாணி மண்டபத்திற்கண்டு முறையிட்டார்கள். அவர்களது அலங்கோல மான நிலையைச் சயங்கொண்டார் உருக்கமாகச் சித்திரிக்கின்றார் :

'' உரையிற் குழறியும் உடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன் முறையிட்டே
அரையிற் றுகில்விழ வடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே.''

குடிகளின் முறையீட்டைக் கேட்ட வேந்தன் வெகுண்டெழுந்தான்; வெய்துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து நோக்கினான்; தன் வீரத்தைப் பாராட்டிப் பேசினான்; வந்துள்ள படையின் வலியை ஆராயாது சீற்றங்கொண்டு போருக்கெழலானான். அப்பொழுது அவனருகிலிருந்த அமைச்சனான **எங்கராயன்** எழுந்து பணிந்து,

"அரசர் சீறுவ ரேனும டியவர்
உரைசெ யாதொழி யார்க ளுறுதியே"

என்றுரைத்து, '**பஞ்சபாண்டியர், சேரர், வத்தவமன்னன், ஆரும் விக்கிரமாதித்தன்** முதலான பெருவேந்தரை நிலைகுலைந்து ஓடச்செய்தது இப்பொழுது இங்கு வந்துள்ள படைதான். இதுவே, சேரரின் கடற்றுறையைக் கைப்பற்றி **விழிஞம்** என்னும் ஊரை அழித்தது; **காந்தளூர்ச்சாலை** என்னுமிடத்தில் சேரரின் மரக்கலங்களை அழித்துச் சேரமன்னன் கடற்படை வன்மையைச் சிதைத்தது. இவைகளை நோக்கும் போது நாம் இப்படைக்கு எம்மாத்திரம்? ஆதலின், மாற்ருன்வலியும் தன்வலியும் நோக்கிப் போருக்கெழுதலே சீரிது. நீ இப்பொழுது கொண்ட சீற்றந்தவிர்ந்து, அபயனுக்கு இடுதற்குரிய திறையை ஈந்துவிடுதலே ஏற்றது,'' என அறிவுரை கூறினுன்.

"அறிகொன் றறியா னெனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்."

என்ற பொய்யாமொழிக்கிணங்க அமைச்சன் அறிவுறுத்தினுனயினும், அனந்தபதுமன் சீற்றந்தணியாது, வீரம் தூண்டப் போருக்கெழுந்தனன்.

கலிங்கர் படையும் சோழவேந்தனது பெரும்படையும் கை கலந்தன. பெரும்போர் மூண்டது. கருணுகரன் களிற்றின்மீது இவர்ந்து பொருகளத்தில் நுழைந்தனன். சோழர் படைஞர் ஊக்கத்துடன் போரிட்டுக் கலிங்கர் சேனையைச் சிதறவடித்தனர். அபயன் படையின் தாக்குதலுக்கு ஆற்ருத பகைப்படை, நிலை குலைந்து தோற்ருேடியது. தோற்ற வீரர் பலர் உயிர் தப்பும்பொருட்டு மாறு வேடம் பூண்டு மறைந்து நீங்கினர். கருணுகரன் கலிங்கருடைய களிறு, குதிரை, தேர், ஒட்டகம், நிதிக்குவை முதலான செல்வமெல்லாம் கைப்பற்றினன். கலிங்க வேந்தன் உயிர் தப்பியோடி ஒளிந்தனன். இவ்வாறு பெருவெற்றி பெற்ற வண்டையர்கோன், ஒற்றர் வாயிலாகக் கலிங்க அரசன் ஒளிந்திருந்த இடத்தையறிந்து, அவனைச் சிறை பிடித்து வரச்செய்தான். அபயன் ஆணையை அணுவளவும் குறைவின்றி நிறைவேற்றிய கருணுகரன் வாகை சூடித் திரும்பலாயினன்.

"கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னேடும்
சூடினுன் வண்டையர்கோன் தொண்டை மானே."

என்று இவனது கலிங்கப்போர் வெற்றியைச் சயங்கொண்டார் கொண்டாடலானுர்.

கருணுகரனைப்பற்றி இங்கே கூறிய செய்திகள், கவிஞராகிய சயங்கொண்டார் புவியைச் சயங்கொண்டவனுன முதற்குலோத்துங்கனது கலிங்கப் போரைப்பற்றிப் பாடியுள்ள **கலிங்கத்துப்பரணி**யாலும், ஆராய்ச்சியாளர் உணர்த்தியுள்ள முடிவுகளாலும் அறியப்பட்டவை. வீரச்செயல்களை விரித்துரைக்கும் இப்பரணி, சோழவேந்தன் தண்டநாயகனுன கருணுகரனுக்கு அளித்துள்ள பெருமை பாராட்டத்தக்கது.

# 7. பள்ளிப் பயணங்கள்

[திருவாட்டி இராசாம்பாள் கோவிந்தராசனர், M.A., L.T., Praveen, தலைமை ஆசிரியை, லேடி M.Ct. முத்தைய செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை.]

**தோற்றுவாய் :**

ஓர் இடத்தின் வனப்பைக் கண்டவர் சொல்வதைக் கேட்டும், எழுதியதைப் படித்தும் நாம் இன்பமெய்துகின்றோம். ஆனல், அவ்விடத்தை நாமே நேரிற்கண்டு மகிழ்வதற்கும் அதைப்பற்றிக் கேட்டும் படித்தும் மகிழ்வதற்கும் எத்துணையோ வேறுபாடுண்டு. நேரிற்கண்டு துய்க்கும் இன்பத்திற்கு ஈடுண்டோ ? நேரிற்கண்டு உவகையடைவதிற்கூட, தான் மட்டும் தனியே கண்டு எய்தும் உவகையைக்காட்டிலும் நண்பர் பலர் சேர்ந்து கண்டு எய்தும் உவகை சாலச் சிறந்ததன்றோ ?

இக்காரணத்தாற்றான் மாணவ மாணவியர், ஆசிரியர் ஆசிரியைகளால் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்கள். இத்தகைய செலவுகளே '**பள்ளிப் பயணங்கள்**' எனப்படும். இவை **உல்லாசப் பயணங்கள், பாசறைப் பயணங்கள், சிறு பயணங்கள்** என மூவகையவாம்.

**உல்லாசப் பயணங்கள்** (Excursions) :

உல்லாசப் பயணங்கள் '**இன்பச் செலவுகள்**' எனவும் பெயர் பெறும். இவற்றின் தலையாய நோக்கங்கள் சரித்திர பூகோளத் தொடர்புள்ள இடங்களை நேரிற்கண்டறிவதும், அவ்விடங்களில், வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை அறிவதுமேயாம்.

இத்தகைய இன்பச் செலவுகளால் ஏற்படும் நன்மைகள் பல. வருடமுழுவதும் வகுப்பறைகளிலும் இயற்கைக்கு முரணான பட்டணங்களிலும் உழன்றுகொண்டிருக்கும் மாணவ மாணவியர், சில நாட்களேனும் தூய காற்றைத் துய்த்தும் சூரிய ஒளியை நுகர்ந்தும் இயற்கையோடு ஒன்றி வாழும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். அன்றியும், பட்ட-

ணங்களிற் காண்டற்கரிய மலையாறும், ஏரியும், குளமும், நன்செயும், புன்செயும், தோப்பும், துரவும் நல்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பினையும் பெறுகின்றனர்; அன்றியும், கிராம மக்களின் வாழ்க்கை நிலையையும் அதற்கு அடிப்படையாய் அமைந்துள்ள பயிர்த்தொழில் கைத்தொழில் முதலியவற்றையும் நேரிற்கண்டு தம் சமூக அறிவை வளமுறச் செய்துகொள்ளும் வசதியையும் பெறுகின்றனர்.

**பாசறைப் பயணங்கள்** (Camping) :

இவற்றை **'முகாம் செய்தல்'** என்றும், **'பாடி வாழ்க்கை'** என்றும் கூறலாம். இத்தகைய பயணங்கள் பெரும்பாலும் மாணவர்களுக்கே உரியவை. இவற்றின் முக்கிய நோக்கம், மாணவர்கட்குப் போர்வீரன் மேற்கொள்வது போன்ற கட்டுப்பாடான வாழ்க்கையிற் பயிற்சி அளிப்பதாகும். நம் பள்ளிகளில் இன்று பயிலுகின்றவர்களுள் பலர் எதிர்காலத்தில் தரைப்படை, கடற்படை, விமானப்படை முதலியவற்றிற்சேர்ந்து பணியாற்ற நேரும். அவர்கள் பள்ளியிற்பயிலும்போதே படைவீரர்க்குரிய கட்டுப்பாடான வாழ்க்கை முறைகளில் ஒரு சிறிதேனும் பயிற்சி பெறுவது இன்றியமையாததாகும்.

முகாம் வாழ்க்கை என்பது மாணவர்கள் சிறு படைக் குழுக்களாகப் பிரிந்து, குழுத்தலைவர்களின் ஆணைக்கும், முகாம் அதிகாரிகளின் ஆணைக்கும் உட்பட்டு, எவ்வகையான கட்டடங்களிலும் தங்காமல், வெளியிடங்களில் தங்களால் அமைக்கப்பெறும் கூடாரங்களில் தங்கி இருப்பதாம். இப்பாசறை வாழ்க்கையில் உண்டி உறையுள் வசதிகளை மாணவர்களே செய்துகொள்ள வேண்டுவது அவசியமாகும். அன்றியும், இவ்வாழ்க்கையில் மாணவர்கள் காலையில் படுக்கையினின்று எழுவது முதல், இரவு படுக்கைக்குச் செல்லும் வரை நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள் எல்லாம் குறிப்பிட்ட காலங்களிற் செய்யப் பழகுவது இன்றியமையாததாம். மேலும், பாசறை வாழ்க்கையில் பாசறை அதிகாரிகளால் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கடந்து செல்லாமல், பாசறைக்-

குரிய எல்லைகளுக்குள்ளேயே தங்கி இருத்தல் அத்தியாவசியமாகும்.

இத்தகைய வாழ்க்கை, கட்டுப்பாடுகள் நிறைந்ததாகக் காணப்பெற்றும், மாணவர்கள் முகாம் செய்யும்போது இக்கட்டுப்பாடுகளை மகிழ்ச்சியுடன் வரவேற்று, இவற்றின்படி தாங்களும் ஒழுகிப் பிறரையும் ஒழுகச் செய்து இன்புறுகின்றார்கள் என்பது ஒருதலை. முகாம் செய்கின்றவர்கள், தங்களை மாணவர்கள் எனக் கருதாமல், படை வீரர்களாகவே கருதவேண்டுமென்றும், வீரர்கட்குரிய முறைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தி, மாணவர்களின் மனோபாவத்தை மாற்றி, வீரவுணர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டுவது முகாம் அதிகாரிகளின் முக்கியக் கடமையாகும்.

பாடி வாழ்க்கையால் உண்டாகும் நன்மைகள் பல. அவற்றுள் தலையாயது, மாணவர், தம் தலைவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டுக் கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கை நடத்துவது. தங்கள் பாடி வாழ்க்கை சம்பந்தப் பட்ட வரையில் பிறர் உதவியை நாடாமல், சுயமுயற்சியால் எல்லாக் காரியங்களையும் செய்யப் பயிற்சி பெறுவது மற்றொரு நன்மையாகும். மேலும், ஒரு பள்ளியின் பல்வேறு வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள், ஒருவரோடொருவர் மனவேறுபாடின்றிப் பழகியும், அளவளாவியும், கடமைகளைச் செய்வதில் ஒற்றுமையுற்றும் தங்கள் தலைவனாக நியமிக்கப்படுபவன் வேறு வகுப்பைச் சேர்ந்தவனாகவும் அறிமுகமற்றவனாகவும் இருந்தாலும், அகமகிழ்ச்சியுடன் அவன் ஆணைவழி நிற்கவும் பெறுகின்ற பயிற்சிகள் மதிப்பிடற்கரியன அல்லவா ?

**சிறு பயணங்கள்** (Outings) :

இவை பள்ளியின் சுற்றுப்புறங்களைக் கண்டறியச் செல்லும் பயணங்கள். சுற்றுப்புறங்களை ஆய்தல் சமூகக் கலைக்கும், குடிமைப் பயிற்சிக்கும் இன்றியமையாதது. கோட்டைகள் கோயில்கள் போன்ற பண்டைச்சின்னங்களைக் காண்பதால் வரலாற்றுத் தொடர்புள்ள செய்திகளையும், நமது

நாட்டுப் பண்டைக் கலைகளைப் பற்றிய செய்திகளையும் மாணவ மாணவியர் கற்கின்றனர். துறைமுகம், புகைவண்டி நிலையம், மோட்டார் பஸ் நிலையம், படகுத் துறை போன்ற இடங்களுக்குச் செல்வதால் போக்கு வரவு சாதனங்களைப் பற்றிய அறிவு விரிவடையும். அங்காடிகள், சந்தைகள், சரக்கறைகள் முதலியவற்றைக் காண்பதால், வாணிகச் செய்திகளை அறியலாம். கையாலும் இயந்திரத்தாலும் கொட்டை நூற்றல், நூல் நூற்றல், துணி நெய்தல் முதலியவற்றையும் இரும்புத் தொழிற்சாலை, மரத் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, தீக்குச்சித் தொழிற்சாலை முதலியவற்றையும் காண்பது நம் நாட்டுக் கைத்தொழில்களைப் பற்றிய திட்டமான அறிவைப் பெறத் துணை புரியும். அஞ்சல் நிலையம், கிராமப் பஞ்சாயத்துச் சபை, ஜில்லாச் சபை, நகரசபை, நீதி மன்றம், சட்டசபை முதலியவற்றின் நடைமுறைகளை நேரிற்காண்பதால், ஆட்சி முறை அறிவு விரிவடையும்.

**பயன்கள் :**

'மாணவ மாணவியர்கள் தங்கள் பள்ளிகளின் மூலந்தான் இத்தகைய பயணங்கள் போக வேண்டுமா? தாமே இவ்விடங்கட்குச் சென்று காண மாட்டார்களா? பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகட்கு இவ்விடங்களைக் காட்ட மாட்டார்களா?' என்னும் இன்ன பிற வினக்கள் எழலாம்.

மாணவ மாணவியர்கள் தாங்களே சென்று காண்பதாலும், பெற்றோருடன் சென்று காண்பதாலும் அடையும் பயனுக்கும் பள்ளிப் பயணங்களிற் கலந்துகொள்வதன் மூலம்அடையும் பயனுக்கும்எத்துணையோவேறுபாடு உண்டு. முன்னரே கூறியாங்கு, பள்ளிப் பயணங்களால் ஏற்படும் நன்மைகள் தனிச்சிறப்பின. மாணவர்கள் ஒன்று சேர்ந்து பயணங்களை மேற்கொள்ளும்போது ஜாதி மத வேறுபாடின்றிக் கூடிப் பழகுகின்றார்கள். இத்தருணங்களில் தனவந்தர்களென்றும், ஏழைகளென்றும், ஜாதியில் உயர்ந்தவர் தாழ்ந்தவரென்றும் அவர்கள் மனத்தில் தோன்றுவதில்லை. 'எல்லோரும் ஒரு குலம்; எல்லோரும் ஓர் இனம்,' என்னும்

எண்ணம் ஒன்றே அவர்கள் மனத்தில் நிலவுகின்றது. அன்றியும், ஆசிரியர்களும் மாணவர்களும் வேற்றுமையின்றி உண்டும் உரையாடியும் பழகுகின்றார்கள். எனவே, ஆசிரியர் மாணவரையும், மாணவர் ஆசிரியரையும் நன்கு அறிந்துகொள்ளுகின்றனர். இவை மாத்திரமன்றி, மாணவர்கள் தங்கள் தலைவன் ஆணை வழி நடக்கவும், கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தவும் கற்றுக்கொள்வதுடன், தங்கள் கடமைகளை நன்கறிந்து அவற்றைச் சிறந்த முறையில் புரிந்து, மற்றையோர் புகழுக்குரியவர்களாக வேண்டுமென்ற உயர் உணர்ச்சியையும் பெறுகின்றார்கள். இவ்வுணர்ச்சி அவர்கள் மனத்தில் தன்னம்பிக்கையையும், தன் முயற்சியையும் வளர்க்க ஒரு சாதனமாகின்றது.

இவ்விதப் பயிற்சி, மாணவ மாணவிகள் ஒன்று கூடிப் பயணங்கள் செல்வதனால் ஏற்படுமேயன்றி, வீட்டினரோடு செல்லும்போது உண்டாகாது. கூட்டமாகச் செல்லும்போது எல்லா வகையான இன்ப துன்பங்களையும் இனிய முகத்துடன் ஏற்றுக்கொள்கின்றார்கள். இதனால், துன்பத்தைக் கண்டு அஞ்சாமல் அதனைத் தாங்கிக்கொள்ளும் சகிப்புத் தன்மை உண்டாவதுமன்றி, துன்பங்களைத் தங்கள் நண்பர்களோடு சேர்ந்து அனுபவிப்பதால் அவற்றைச் சுகமென்றே கருதும் மனப்பான்மையும் வளர்ச்சியுறுகின்றது.

பயணங்களைத் தொடங்குமுன் ஆசிரியர்கள் அவற்றிற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிக்க வேண்டும். செல்லும் இடங்களைப்பற்றியும் அங்குப் பார்த்தறியத் தக்கவை பற்றியும் நன்கறிந்து, போகுமுன்பே மாணவர்கள் எவற்றைப்பற்றி அறிய வேண்டும், யார் யார் என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டும் என்பவற்றையும் நன்கு விளக்க வேண்டும். அவற்றின்படி அவர்கள் நடந்துகொள்கின்றார்களா என்று கவனித்தல் வேண்டும். பயணத்தின் போது பாட சம்பந்தமாகத் தாங்கள் காணும் எல்லாக் காட்சிகளையும் விளக்குதல் வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இளமையிலேயே மாணவ மாணவிகள் பள்ளியிற்பெறுவார்களாயின், அவர்கள் எதிர் காலத்தில் நற்குடிகளாகத் திகழ்வார்கள் என்பது ஒருதலை.

# 8. ரூஸ்ஸோ

[திரு. பி. கோதண்டராமர், M.A.,
துணையாசிரியர், சுதேசமித்திரன்]

பிரான்ஸில் 1789-ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சி, உலக சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். அந்நாட்டில் பல்லாண்டுகளாகக் கொடுங்கோலாட்சி மேன்மேலும் ஓங்கி, வகுப்புக்கொரு நீதியும், ஒருதலைப்பட்சமான சட்ட திட்டங்களும், தாங்க முடியாத வரிச் சுமைகளும், அடக்கு முறைகளும் அதிகரித்து வந்தன. பல காலமாக அநீதங்களைச் சகித்துக்கொண்டு கூடிய வரையில் கீழ்ப்படிந்து ஒழுகி வந்த மக்களின் உள்ளத்தில் மெல்ல மெல்ல எதிர்ப்பு முளை விட ஆரம்பித்தது. விடுதலை ஆர்வமும் சுதந்தரக் கருத்துக்களும் மக்களிடையே பரவின. அந்த நிலையிலும், அரசாங்கத்தினரும் உயர்வகுப்பினரும் தீவிர மாறுதல்களுக்கு இணங்க மறுத்தனர். மக்கள் இறுதியில் புரட்சி செய்தார்கள். முதலில், அப்புரட்சி உள் நாட்டுப் போரிலும், குழப்பத்திலும், அராஜகத்திலும் கொண்டு வந்து விட்டது. பழைய சம்பிரதாயங்கள், சமூக சமய ஸ்தாபனங்கள் ஆகிய யாவும் தவிடு பொடியாயின. தீவிர இலட்சியவாதிகள் கை ஓங்கியது. அவர்களின் போக்கை எதிர்த்த மித வாதிகளின் தலைகள் உருண்டன. நாடெங்கும் இரத்த ஆறு ஓடிற்று. சில ஆண்டுகளுக்குப் பிறகே, இக்குழப்பத்தினின்று ஒருவித ஒழுங்கு நிலை ஏற்பட்டது; ஒரு புதிய அரசியல் நிர்மாணமாயிற்று; ஒரு புதிய சமுதாயம் ஜனித்தது. பிரெஞ்சு நாட்டில் எழுந்த இப்புரட்சி, பிற நாடுகளிலும் எதிரொலி செய்தது. உலகெங்கும் விடுதலை வேட்கையும் புரட்சிக் கொள்கைகளும் பரவின.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு வேகமும் ஓர் உருவும் தந்தவர்கள் **வால்தேர், மொந்தெஸ்கியோ, திதெரோ, ரூஸ்ஸோ** போன்ற அறிஞர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. அவர்கள் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கருத்துக்களை மக்களிடையே பரப்பிப் புரட்சிக்குத் தூபம் போட்டார்கள்.

அவர்களே மக்களை அழுத்திய மன்னனையும், மக்கள்பால் தங்கள் கடமையை உணராது தங்கள் விசேஷ உரிமைகளையே பெரிதும் பாராட்டின சீமான்கள், குருமார்கள் ஆகியோர்களையும் தாக்கி, அவர்களின் சுகபோக வாழ்க்கையையும் ஒழுங்கீனங்களையும் பரிகசித்து, அவர்களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து, மக்களிடையே எழுச்சியையும் எதிர்க்கும் சக்தியையும் வளர்த்தார்கள். அவர்களுடைய முயற்சியால் சிந்தனு சக்தியும் பகுத்தறிவும் பெற்ற மக்கள், சாத்திரம், சமயம், சம்பிரதாயம் என்னும் பெயர்களால் தங்களை இதுகாறும் சிந்திக்கவொட்டாமல் செய்து மூட நம்பிக்கைகளை வளர்த்த சமயத் தலைவர்களின் அதிகாரத்தையும் விசேஷ உரிமைகளையும் மறுக்க ஆரம்பித்தார்கள். சமய நம்பிக்கை ஆட்டங் கொடுத்தது. சுதந்தரமும், பிரஜா உரிமையும் தங்கள் பிறப்புரிமையென உணர ஆரம்பித்த குடிமக்கள், அவற்றை மறுப்பதற்கு அரசியலார்க்கு என்ன உரிமை உண்டெனத் தைரியமாகக் கேட்டார்கள். தங்கள் விடுதலையின்பொருட்டு எத்தகைய தியாகத்தையும் செய்ய அவர்கள் உறுதி கொண்டார்கள். அரசியலார் அடக்குமுறைகளைப் பலமாகக் கையாண்ட போதிலும் மக்களின் சுதந்தர ஆர்வமும், எதிர்க்கும் சக்தியும் மேன்மேலும் அதிகரித்தனவே ஒழிய, குறையவில்லை. மக்களின் இந்த எதிர்ப்புக்கும், இவ்வெதிர்ப்புக்குரிய மனோதைரியத்திற்கும் பெரிதும் காரணமாயிருந்தவர்கள் அச்சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களுமேயாவார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வறிஞருள், **ரூஸ்ஸோ** தனிச்சிறப்பு வாய்ந்தவர். வால்தேர் போன்ற அறிஞர்கள் அக்கால ஆட்சியையும் சமய நிலையையும் பலமாகத் தாக்கி மக்களிடையே குழப்பத்தையும், அவநம்பிக்கையையும், பொதுவாகப் புரட்சி மனப்பான்மையையும் உண்டு பண்ணினார்கள். அவர்கள் பெரும்பாலும் அழித்தல் வேலையையே செய்தார்கள். தம் கண் முன்னே சிதைந்துவந்த சமய, சமூக, அரசியல் ஸ்தாபனங்களைப் புதுக்கி அமைப்பதற்கான உருவான யோசனைகள் அல்லது திட்டங்களில் அவர்களின் கவனம் செல்லவில்லை. ஆனால், ரூஸ்ஸோவோ, புரட்சி நெருங்கி வருவதைத்

தம் நீண்ட விழிகளால் கண்டு, மக்களை அப்புரட்சிக்கு எங்ஙனம் தயார் செய்யலாம் என்பதைப் பற்றியும், புரட்சி-யின் போது சிதையும் ஸ்தாபனங்களுக்குப் பதிலாகப் புதியனவாக அமைக்கப்பட வேண்டிய ஸ்தாபனங்களைப் பற்றியும் சிந்தனை செய்தார். அவர் எழுதிய நூல்கள் யாவும் இச்சிந்தனையின் விளைவேயாம். அந்நூல்கள், சமூகத்தின் இழிநிலை, இன்னல்கள் இவைகளுக்கெல்லாம் இயற்கை நிலையினின்று வழுவிய நாகரிகமே காரணமென்றும், மேனிலை அடைவதற்குச் சமுதாய அமைப்பை இயற்கை வழியில் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் எடுத்துக் காட்டி, அங்ஙனம் திருத்தி அமைப்பதற்கு உரிய வழி முறைகளையும் கூறின. ரூஸ்ஸோ பகுத்தறிவாளர் அல்லர். அவர் இயற்கை உணர்ச்சிகளின் வழி நின்றே யாவற்றையும் நோக்கினவர். இயற்கை நிலையில் மனிதன் நல்லியல்புகள் வாய்ந்தவனாய் இருந்தானென்றும், அந்நிலை கெட்டுச் சமூகமும் நாகரிகமும் ஏற்பட்ட பிறகே அவன் இழிநிலையடைந்தான் என்றும், இயற்கையோடு ஒட்டிய எளிய வாழ்க்கையே, அன்பு, இன்பம், தூய்மை, அறம், பிறர் நலன் மீது நாட்டம் ஆகிய நல்லுணர்ச்சிகளையும் மனவமைதியையும் வளர்க்கின்றது என்றும் அவர் நம்பினார். அவர் மானிடத்தன்மையைப் பெருமைப்படுத்தி, மக்கள் சுதந்தரம், சமத்துவம், சகோ-தரத்துவம் ஆகிய யாவற்றிற்கும் உரியவர்கள் என்றும், அவர்களின் அனுமதியானது மாமன்னர்களின் சேனையை-விடப் பேராற்றல் வாய்ந்ததென்றும் பறையறைந்தார் ; இந்-நம்பிக்கைகளையும், கருத்துக்களையும், உணர்ச்சியும் ஆவே-சமும் வாய்ந்த சொற்களால் மக்கள் உள்ளத்தில் பாய்ச்சினார். அவருடைய எழுத்துக்கள் மக்களை ஒரு குலுக்குக் குலுக்கி-விட்டன. அவருடைய செல்வாக்கு, அக்கால இலக்கிய வரலாற்றில் மிக ஆழமாகவும் நிரந்தரமாகவும் பதிந்தது. அச்செல்வாக்கு இலக்கியத்தில் மட்டுமன்றிச் சமூகம், அரசி-யல், கலை, கல்வி முதலிய மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், அனேகமாக ஒவ்வொரு நாட்டிலும் பிரதி-பலித்தது. ரூஸ்ஸோ, தம் பிரசித்தி பெற்ற நூலாகிய '**சமுதாய ஒப்பந்தம்**' என்னும் நூலை 1762ல் எழுதினார்.

1776ல் அமெரிக்கா பிரகடனம் செய்த சுதந்தர அறிக்கையில் ‘சமுதாய ஒப்பந்த’த்தின் வாசகங்கள் பல காண்கின்றன். ரூஸ்ஸோ சொன்னதாவது, ‘மனிதன் பிறக்கிற போது சுதந்தரமுள்ளவனுகவே பிறக்கின்ருன். தந்தையாகட்டும், பிள்ளையாகட்டும், மன்னனுகட்டும், மக்களாகட்டும்—அனைவரும் சுதந்தரமாகவும் ஒரே மாதிரியாகவும் பிறக்கிருர்கள்,’ என்பது.

அமெரிக்க சாசனம் கூறுவதாவது, ‘மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வின்றிச் சரி சமமாகவே படைக்கப்படுகின்றனர். ஆண்டவன் அவர்களுக்கு என்றும் பறிபோகக் கூடாத நிரந்தர உரிமைகளை அளிக்கிருன்,’ என்பது.

1789-ஆம் ஆண்டு ஆகஷ்டு மாதம் பிரெஞ்சு தேசீய நிர்மாண சபைப் பிரகடனம் செய்ததும், பின்னர் 1791ல் முன்னுரையாகச் சேர்க்கப்பட்டதுமான **‘மானிட உரிமைகள்’** அல்லது **‘பிரஜா உரிமைக’**ளின் சாசனத்திலும் ‘சமுதாய ஒப்பந்தத்தின்’ கருத்துக்களும் வசனங்களும் இங்ஙனம் காணப்படுகின்றன: ‘‘மக்கள் சுதந்தரமாகவும் சம உரிமைகளுடனும் பிறக்கின்ருர்கள்......மனிதனின் இயற்கையானவையும் பறிபடாதவையுமான உரிமைகளைப் பாதுகாப்பதே அரசியல் சபைகள் அனைத்தினுடைய நோக்கமாகும். சுதந்தரம், சொத்துரிமை, பாதுகாப்பு, அடக்குமுறைகளை எதிர்த்தல், இவையே அவ்வுரிமைகள்.’’

ரூஸ்ஸோவின் கருத்துக்கள் புரட்சி முறைக்கு ஓர் உருவம் தந்தன. சுதந்தரம், சமத்துவம், அரசியலில் மக்களின் மேலான அதிகாரம் ஆகிய தத்துவங்கள் பிரெஞ்சுப் புரட்சியின் மூன்று மூலாதாரக் கோட்பாடுகளாய் விளங்கின. இப்போது அவை உலக ஜனநாயகத்திற்கே உரியனவாகிவிட்டன. மேலை நாட்டினர் தம் சமூக அரசியல் சீர்திருத்தங்களில், ரூஸ்ஸோவின் சிந்தனைகள் சென்ற சுவட்டையே பின் பற்றினர். பல்லாண்டுகளாகப் பெருகி வந்த அநீதங்களைப் போக்குவதற்குரிய ஆற்றல் மக்களிடம் இருக்கிறதென ரூஸ்ஸோ சமுதாய ஒப்பந்தத்தின் மூலமாக நம்பிக்கையூட்டியதன் பயனுக, சுதந்தர மக்கள் ஒரு சமுதாயமாய் ஒன்றி, ஒரு பொது ஆணையை உருப்படுத்திக்கொள்வதே

தம் இலட்சியமெனக் கொண்டனர். அதுவே மெல்ல மெல்ல ஆக்கம் பெற்றுப் பழைய அதிகாரவர்க்கங்களைப் பலவீனப்படுத்தியும் சிதைத்தும் வருகின்றது.

ரூஸ்ஸோவின் செல்வாக்கு எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பதையும், உலகம் அவருக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டுள்ளது என்பதையும் ஒரு சிறிது கண்டோம். அத்தகைய பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை ஒரு சிறிது ஆராய்வோம் :

ரூஸ்ஸோ ஸ்விட்ஸர்லாந்தில் புகழ் பெற்ற குடியரசாய் விளங்கிய **ஜினிவா நகரில் 1712-ஆம்** வருஷம், ஜுன் மாதம், 27-ஆந் தேதியன்று **புரொதஸ்தாந்து கிறிஸ்தவ சமயப்** பிரிவைச் சார்ந்த குடும்பம் ஒன்றில் பிறந்தார். அக்குடும்பத்தின் முன்னோர்கள் ஆதியில் தங்கள் சமய நம்பிக்கை காரணமாக, பிரான்ஸிலிருந்து துரத்தப்பட்டு, ஜினிவாவில் அடைக்கலம் புகுந்தவர்கள். தந்தையார் கடிகாரத் தொழிலில் கை தேர்ந்தவர் ; ஆனால், தொழிலில் சிரத்தை கொள்ளாமல் சதாகாலமும் கற்பனை நவீனங்களைப் படிப்பதிலேயே பொழுது போக்கினார் ; படிக்காத நேரங்களில் கருத்தின்றி ஊர் சுற்றுவார். தந்தையாரின் இவ்வியல்புகள் மகனாரையும் பற்றிக்கொண்டன. பாலிய ரூஸ்ஸோ, தந்தையாருடன் உணர்ச்சிப் பெருக்கும் கற்பனை விசித்திரங்களும் மலிந்த நவீனங்களை இரவெல்லாம் படித்தார். இசை ஞானமும் இனிய குரலும் படைத்த அவர் அத்தையார், பல பாட்டுக்கள் பாடி அவருக்கு இசையில் சுவையுண்டாக்கிவிட்டார். பிற்கால வாழ்க்கையில் இது அவருக்குப் பெரிதும் பயன்பட்டது. பத்தாம் வயதில் மாமன் பாதுகாப்பில் விடப்பட்ட அவர், இரண்டு ஆண்டுகள் பள்ளிக்கூடம் சென்றார். பின்னர் ஏதேனுமொரு தொழில் கற்பதன்பொருட்டுப் பலவிடங்களில் விடப்பட்டார். அவர் எங்கும் நிலைக்கவில்லை ; இயற்கையில் தனித்தமர்ந்து கனவு காண்பதிலேயே சுவை கண்டார் ; மனவுறுதியை அறவே இழந்தார். அவருக்கு ஞாபகசத்தி இல்லை. கட்டுப்பாடோ, ஒழுங்கோ சிறிதுமில்லை. கடைசியாக, கடிகாரங்களில் சித்திரம் செதுக்கும் ஒருவனிடம் விடப்பட்டார்.

அவன் அவரைக் கடுமையாக நடத்தினன். ஒரு நாள் நகரத்திற்கு வெளியே உலாவச் சென்று தாமதமாகத் திரும்பி வந்தபோது, நகர வாயில்கள் மூடப்பட்டிருந்தன. அதனுல், அவர் இரவை வெளியிலேயே கழித்தார்; எஜமானின் கொடுமைக்கு அஞ்சிக் காலையில் ஊர் திரும்பிச் செல்ல மனமில்லாமல், ஜினிவாவை அடியோடு துறந்து, நாடோடியாய்த் திரிந்தார். அப்போது அவருக்கு வயது பதினறு.

நல்ல காலமாக, விதி அவரை **அசென்ஸி** என்னுமிடத்தில் இருந்த **வாரன்ஸ் சீமாட்டி**யிடம் கொண்டு வந்து விட்டது. உணர்ச்சிப் பெருக்கும் அன்புள்ளமும் படைத்த அவள், அவரைக் **கத்தோலிக்க** சமயத்தைத் தழுவச் செய்து ஆதரித்தாள். ரூஸ்ஸோவைப் போலவே அவளும் மென்மையான சுபாவமுடையவள்; புலனுணர்ச்சி இன்பங்களில் ஆசை மிகுந்தவள்; கற்பனையுலகில் அமிதமாகச் சஞ்சரிப்பவள். ஆனல், தன்மீது அன்பு செலுத்துபவரிடம் அசட்டையாயிருப்பவள்; கண்ணிலிருந்து மறைந்தால் அடியோடு மறந்துவிடுவாள். தாயில்லாத ரூஸ்ஸோ அவளைத் தாயென மதித்து அன்பு கொண்டார். அவள் **ஷார்மெத்து** என்னுமிடத்தில் வசித்த போது, ரூஸ்ஸோ அவளுடன் 1738 முதல் 1740 வரையில் இன்புடன் காலங் கழித்தார். அக்காலத்தில் அவர் இசை பயின்றும், பிறருக்கு அதைப் போதித்தும், கவிதை, சரித்திரம், தத்துவம், கணிதம், வானசாஸ்திரம் சம்பந்தமாகக் கையிலகப்பட்ட நூல்கள் யாவற்றையும் படித்தும் தம் அறிவை விரிவாக்கிக்கொண்டு வந்தார்; இடையிடையே, ஆங்காங்குக் கால் நடையாகச் சென்று சுற்றியலைந்த காலத்தில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவித்தார். அதனுல், இயற்கையின்மீது காதலும் சுயேச்சையின்பால் ஆர்வமும் ஏற்பட்டன. இங்ஙனமாக மொத்தம் பன்னிரண்டு ஆண்டுகள் அவர் வாரன்ஸ் சீமாட்டியின் பாதுகாப்பில் இருந்தார்; 1741ல் இறுதியாக அவளிடமிருந்து பிரிந்து சென்றார்; 1744ல் **பாரிஸ்** நகரை அடைந்து, அங்கே வறுமையுடன் போராடினர்; முதலில் சில இன்ப நாடகங்களையும் இசை நாடகங்களையும் எழுதி வெளியிட்டார். நாளடைவில் அவ-

ருக்குத் திதெரோவின் பழக்கம் ஏற்பட்டது. அவருடைய '**சர்வ கலா சங்கிரகத்**'திற்கு ரூஸ்ஸோ இசைக் கட்டுரைகள் எழுதித்தந்தார். ரூஸ்ஸோவுக்கு 1749ல் முப்பத்தேழு வயதாயிற்று. தம் எதிர்கால வாழ்வு எப்படியிருக்குமோ என்பது அது சமயம் அவருக்கே தெரியாது.

இங்ஙனம் இருந்து வந்த போதுதான் 1749ல் ஒருநாள் பிற்கால வாழ்க்கையை அடியோடு மாற்றின பேரனுபவம் ஒன்று அவருக்கு ஏற்பட்டது: பத்திரிகைச் சட்டங்களை மீறியதற்காகச் சிறைப்பட்ட திதெரோவைச் சிறையில் பார்ப்பதன்பொருட்டு அவர் இரண்டு காததூரம் நல்ல வெயிலில் கால் நடையாய் நடந்து சென்றார்; வழியில் இலக்கியப் பத்திரிகையொன்றைப் புரட்டிப் பார்த்துக்கொண்டே மெல்ல நடந்தார். திடுமென, **திழோன் கலைக் கழகத்தார்**, 'கலை விஞ்ஞானம் ஆகியவற்றின் அபிவிருத்தியால் மக்களின் ஒழுக்கம் உயர்ந்திருக்கிறதா?' என்னும் பொருள் பற்றிச் சிறந்த கட்டுரையொன்று எழுதுபவருக்குப் பரிசு ஒன்று அளிப்பதாக அறிவித்திருந்த அறிக்கை அவர் கண்ணில் பட்டது. திடுமென, ஒளிக்கதிர்கள் ஆயிரம் அவர் கண்களைக் குத்தின; ஜீவனுள்ள கருத்துக்கள் பல திரண்டு எழுந்து அவரைத் தாக்கின; நெஞ்சடைத்தது; வெறி பிடித்தது; சாலை மரத்தின் அடியில் தொப்பென விழுந்தார்; சிந்தனை வெறியில் அரை மணி நேரம் மெய்ம்மறந்தார்; பிறகு விழிநீர்ப் பெருக்கால் சட்டையெல்லாம் நனைய எழுந்தார்; அந்த அனுபவத்தைப் பற்றிப் பின் எழுதிய போது, 'அந்த நேரத்தில் வேறோர் உலகில் நான் வாழ்ந்தேன்; வேறொரு மனிதனானேன்,' என்று எழுதினார். கலைக் கழகத்தின் கேள்விக்கு விடை கண்டார். கடல் மடை திறந்தாற்போன்று, உண்மைகளின் பெருவெள்ளம் அவர் மனத்தில் பாய்ந்தது. எதிர் காலப் பணியின் அடிப்படை அமைந்தது. இந்த அதிர்ச்சியானது அவருடைய உண்மையான ஜீவனைப் புலப்படுத்தியது. இதுகாறும் யாதொரு சமூகக் கட்டுப்பாட்டுக்கும் இணங்காமல் சுயேச்சையாய்த் திரிந்த அவருக்குப் பாரிஸ் நகரில் அறிஞரும் செல்வரும் வாழ்ந்த செயற்கை வாழ்க்கை வெறுப்பளித்தது. தம் உணர்ச்சிகளையும்,

வெறுப்பையும், எதிர்ப்பையும் அவர் முதலில் அடக்கிக்கொண்டார். ஆனால், அவை பெருகிக்கொண்டே வந்து, இப்போது வெடித்தன. ஒரே அடியில் சமூக அநீதங்களையும் ஊழல்களையும் புலப்படுத்தினார்; தம் எதிர்காலப் பணியை உணர்ந்தார்.

ரூஸ்ஸோ கட்டுரையொன்று எழுதியனுப்பினார். அதில், சமூகம் ஒழுக்கம் இழந்து வருகிறதென்றும், அதற்கு விஞ்ஞான சாஸ்திரமும் கலைகளுமே காரணமென்றும் சரித்திர ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார். அக்கட்டுரையே பரிசு பெற்றது. 1750ல் அவருக்குப் பெயரும் புகழும் கிடைத்தன. இலக்கிய உலகில் அவருக்கு முக்கியமான இடம் கிடைத்தது.

ரூஸ்ஸோ தம் கொள்கைக்கு ஒப்ப ஒழுக வேண்டி, உலக சம்பிரதாய வாழ்க்கையை அடியோடு துறந்து, எளிய இயற்கை வாழ்வை நடத்த ஆரம்பித்தார். இசைப் பாடல்களை நகல் செய்து, அதனாற்கிடைத்த சிறு ஊதியத்தைக் கொண்டு காலட்சேபம் செய்தார். சிலர் அவரை மன்னரிடம் அழைத்துச் சென்று உதவிச் சம்பளம் வாங்கித்தர முயன்றனர். ரூஸ்ஸோ அதை மரியாதையுடன் மறுத்தார்.

மூன்றாண்டுகளுக்குப் பின், ரூஸ்ஸோ, 'மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?' என்பது பற்றிச் சிறு நூலொன்று எழுதினார். அதில், ஆதியில் மனிதன் நல்லியல்புகளுடனேயே பிறந்தான் என்பதையும், தனிச் சொத்துரிமை, ஏற்றத்தாழ்வு இவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூகம் ஏற்பட்ட பின்பே இழிநிலையடைந்தான் என்பதையும் நிலை நிறுத்தினார். முன்பு எழுதிய கட்டுரையைப் போலவே இதுவும் சமூகத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டு பண்ணியது.

இதன் பின், ரூஸ்ஸோவுக்குப் பல சீமான்கள் சீமாட்டிகளின் நட்புக் கிடைத்தது. அவர் **எபினே சீமாட்டியின்** அழைப்புக்கு இணங்கி, அவர் ஆதரவில் இயற்கையழகும் அமைதியும் நிறைந்த 'ஆசிரமம்' என்ற தனியிடத்தில் இரண்டு ஆண்டுகள் தங்கினார். அக்காலத்திலேதான் **'சமுதாய ஒப்பந்தம்', நூவேல். எலோயீஸ்',**

'எமில்' என்னும் மூன்று புகழ் மிக்க நூல்களை எழுத ஆரம்பித்தார். சிறிது காலத்திற்குள் அவருக்கும் எபினே சீமாட்டிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுவிடவே, அவர் 'ஆசிரமத்தை' விட்டு விலகிச் சிறிது காலம் **மார்ஷல் லுச்சம்பூரின்** ஆதரவில் **மொம்மோரன்ஸி** மாளிகையில் தங்கினார். 1761ல் கடிதங்கள் மூலமாகக் கதை கூறும் 'நூவேல் எலோயீஸ்' என்ற நவீனம் ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் இயற்கைக்கு விரோதமான சமூக ஸ்தாபனங்களையும் கருத்துக்களையும் அழுத்தமாகக் கண்டித்தார். 1762ல் வெளியிட்ட 'சமுதாய ஒப்பந்த'த்தில் அவர் 'சமுதாயம் எங்ஙனம் ஏற்படுகிறது?' என்பதைப் பற்றித் தம் கொள்கையை வெளியிட்டார். ஆதியில் ஏற்றத் தாழ்வின்றிச் சமவுரிமை பெற்றிருந்த தனி மனிதர் தம் சுதந்தர உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டுத் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு ஒரு சமூகமாக ஒன்றுபடுகின்றனர். இவ்வொப்பந்தத்தினின்றே சமுதாயம் அல்லது அரசு ஏற்படுகின்றது. இவ்வொப்பந்தத்தின்படி தனி மனிதன் தான் சிருஷ்டித்த சமுதாயத்தின் அதிகாரத்திற்கு உட்படச் சம்மதிக்கிறான். அதற்குப் பதிலாக, சமுதாயம் அல்லது அரசு தன் முழுப்பலத்தையுங் கொண்டு தனி மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கிறது. இங்ஙனம் சமுதாயம் அல்லது அரசின் அதிகாரம் யாவும் இவ்வொப்பந்தத்தினின்றே வருவன. சமுதாயம் இவ்வொப்பந்தத்தை மீறினால், தனி மனிதன் சுயேச்சையாகப் புரட்சி செய்து அதினின்று விடுதலையடையலாம். சுருங்கக் கூறின், இதுவே அவர் அப்புத்தகத்தில் கூறும் கொள்கை.

அதே வருஷத்தில் வெளி வந்த '**எமில்**', கல்வி விஷயமான ரூஸ்ஸோவின் அபிப்பிராயங்களைக் கதையுருவில் வெளியிடுகிறது. அதிலும் இயற்கை நெறியும், இயற்கைச் சமயமும் போதிக்கப்படுகின்றனவாதலால், பாரிஸ் நீதி மன்றம் அந்நூலைக் கண்டித்து எரித்தது.

ரூஸ்ஸோ அதிகாரிகளின் அடக்கு முறைக்கு அஞ்சிப் பாரிஸினின்று ஓடி, **ஸ்விட்ஸர்லாந்தில்** அடைக்கலம் புகுந்தார். ஸ்விஸ் மாஜிஸ்திரேட்டுகளும் பாரிஸ் நீதி மன்-

றத்தைப் பின் பற்றி அவரைக் கண்டனம் செய்து, கைது செய்ய '**வாரண்டு**' பிறப்பித்தார்கள். ரூஸ்ஸோ அந்நாட்டை விட்டு முதலில் **மோத்தியே** என்னுமிடத்திலும், பிறகு **இங்கிலாந்திலும்** அடைக்கலம் புகுந்தார். அவ்விடங்களிலும் அவர் இமிசிக்கப்பட்டார். இறுதியில் 1770ல் அவர் பாரிஸ் நகரை அடைந்தார்.

ரூஸ்ஸோ பாரிஸில் எட்டாண்டுகள் அமைதியாய் வாழ்க்கை நடத்தினுர்; அந்த நிலையிலும் ஆங்கிலேய மன்னர் அளிக்க வந்த உதவிச் சம்பளத்தை மறுத்தார். செல்வருக்கும் செல்வத்துக்கும் அடிமைப்பட்ட எழுத்தாளர் மலிந்த அக்காலத்தில் ரூஸ்ஸோ ஒருவரே தம் சுயேச்சையைப் பறிகொடாதிருந்தார். அக்காலத்திலேதான் அவர் தம் கருத்துக்களை நன்கு விளக்குவனவும் சுயவரலாற்றுடன் தொடர்புடையனவுமான '**சுயசரிதை**', '**சிந்தனைகள்**', '**சம்பாஷணைகள்**' என்ற மூன்று நூல்களை எழுதினுர்.

1778ல் **ழிரார்தேன் சீமாட்டியார்** அவரை **எர்மெ**னேவில் மாளிகைக்கு அழைத்துத் தம்முடன் வாழச் சொன்னுர். அவ்வழைப்பை ஏற்று ரூஸ்ஸோ எர்மெனேவிலில் குடியேறினுர். நாற்பத்திரண்டு நாட்களே அவர் அதில் உயிர் வாழ்ந்தார்; ஒரு நாள் திடுமெனக் கீழே விழுந்து உயிர் விட்டார். அப்போது அவருக்கு வயது அறுபத்தாறு.

ரூஸ்ஸோ பேரறிஞர்; பெருமேதை.

# 9. குண்டலகேசி

[திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார், M.A.]

**சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை குண்டலகேசி, வளையாபதி** என்ற இவை ஐந்தும் **ஐம்பெருங்காப்பியங்கள்** எனப்படும். இந்த ஐந்தனுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் மற்ற மூன்று நூல்களுக்கும் காலத்தால் முற்பட்டவை. அவ்வாறு இருந்தும், சுவை காரணத்தாலோ, அன்றிப் பிற காரணத்தாலோ சிந்தாமணி முன்னர் வைக்கப்பட்டுள்ளது. பஞ்ச காவியம் என்ற தொகுதி வடமொழியில் உண்டு. **ஹர்ஷ** கவி இயற்றிய **நைடதம்**, பாரவி இயற்றிய **கிராதார்ஜுனீயம்**, காளிதாச கவி இயற்றிய **இரகு வமிசம், குமாரசம்பவம்**, மாக கவி இயற்றிய **சிசுபாலவதம்** ஆகிய இவை வடமொழியில் பஞ்சகாவியம் எனப்படும்.

காவியத்தின் இலக்கணம் யாது என நோக்குவோம்: கவியால் செய்யப்படுவது காவியம். தமிழில் பொருள் தொடர்நிலைச் செய்யுளையே காவியம் என வழங்குவர். காவியம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம் அல்லது காப்பியம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இனி, பெருங்காப்பியத்தின் இலக்கணத்தைக் காண்போம்: பெருங்காப்பியம் பாயிரத்தில் வாழ்த்து, தெய்வ வணக்கம், எடுத்துக்கொண்ட பொருள் முதலியவற்றுள் ஒன்றினை ஏற்று வரும்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளைப்பற்றியும் கூறும். காப்பியத்திற்குச் சிறந்த தலைவன் ஒருவன் உண்டு. காப்பியத்தில் மலை, கடல், நாடு, நகர், பருவம், ஞாயிற்றின் தோற்றம், திங்களின் தோற்றம் முதலியவை பற்றிய வருணனைகள் கூறப் பெற்றிருக்கும். இது திருமணம், முடி சூட்டு விழா, புனல் விளையாட்டு, பொழில் விளையாட்டு, மக்கட்பேறு, தூது, போர் முதலிய இன்னோரன்ன பிற பொருள்களைப்பற்றிக் கூறுவதுடன் '**சருக்கம், இலம்பகம்**' முதலிய பிரிவுகளைக் கொண்டு எண்வகைச் சுவைகளும் நிரம்பப்பெற்றதாகும். இதுவே பெருங்காப்பியத்தின் இலக்கணமாகும். அறம்,

பொருள், இன்பம், வீடு என்ற நான்கனுள் ஒன்றுவது பலவாவது கூறப்படாவிடில், அது சிறு காப்பியமாகும்.

ஐம்பெருங்காப்பியங்களுள் சிந்தாமணியும் சிலப்பதிகாரமும் சமண சமயச் சார்பான காவியங்கள். மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயக் காவியங்கள். வளையாபதியைச் சைன சமயக் காவியம் என்பர். அதனைப் பௌத்த சமயக் காவியம் எனக்கூறுவாருமுளர். ஐம்பெருங்காப்பியங்களுள் சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற மூன்றினையும் **மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்** அவர்கள் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார்கள். குண்டலகேசி வளையாபதி என்ற இரு காவியங்களும் இது வரையில் முற்றும் தனிப்பட்ட நூல்களாக வெளி வரவில்லை. எனவே, நமக்குக் கிடைக்காது மறைந்து போன நூல்களுள் குண்டலகேசியும் ஒன்றாகும். **புறத்திரட்டு** என்ற நூலின் வாயிலாகக் குண்டலகேசிச் செய்யுட்களுள் 19 செய்யுட்கள் நமக்கு இப்போது அகப்பட்டுள்ளன. **தொல்காப்பிய உரை, வீரசோழிய உரை, யாப்பருங்கல விருத்தியுரை** முதலிய இலக்கண நூல்களில் குண்டலகேசியைப்பற்றிச் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்றான **சிவஞானசித்தியார்** பர பக்கத்திற்கு **ஞானப்பிரகாசர்** இயற்றிய உரையில் குண்டலகேசிச் செய்யுள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இதற்குக் **குண்டலகேசி விருத்தம்** என்ற ஒரு பெயரும் உண்டு என்பதும், இதில் கலித்துறைகள் வந்துள்ளன என்பதும், **வீரசோழிய உரையினால்** விளங்குகின்றன. **யாப்பருங்கல உரையாசிரியர்** குண்டலகேசியைத் தருக்க நூலில் அடக்குவர். ஆகவே, இது வைதிக சமயத்தினையும் சைன சமயத்தினையும் தருக்க முறையில் கண்டித்துள்ளது என்பது பெறப்படுகின்றது. இந்நூலை இயற்றியவர் **நாதகுத்தனார்** என்பது நீலகேசி உரையால் (மொக்கலவாதச் சருக்கம், 78-ஆம் செய்யுள் உரை) அறியப்படும். இவரது காலம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டு என்பர். இந்நூலில் விளங்காத சொல்லும் பொருளும் பல இருந்தன

என்பது வீரசோழியவுரையால் விளங்குகின்றது. அவ்வுரையாசிரியர் இதனை **'அகலக்கவி'** என்பர்.

மணிமேகலை என்ற காவியம் அக்காவியத் தலைவியின் பெயரால் வழங்கப்படுவது போல, குண்டலகேசியும் அக்காவியத் தலைவியான குண்டலகேசியின் பெயரால் வழங்கப்படுகின்றது. குண்டலகேசியின் வரலாறு **பாலி** மொழியில் எழுதப்பட்ட **'தேரி காதை'** என்ற பௌத்த நூலிலும், **'தம்மபதம்'** என்ற பௌத்த நூலிலும் காணப்படுகின்றது. இனி அவ்வரலாற்றினை நோக்குவோம்:

**இராசகிருகம்** என்ற நகரத்தை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் பொருட்காப்பாளனாய் இருந்த ஒருவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் **பத்திரை** எனப்பெயரிட்டனர். மங்கைப் பருவம் எய்திய பத்திரை, ஒருநாள் தன் மாளிகையின் மேல்மாடியில் உலாவிக்கொண்டிருந்தாள். அது போழ்து அவ்வூர்ப் புரோகிதன் மகன் **சாதுகன்** என்பவன் வழிபறித்தல் என்ற குற்றத்தைச் செய்ததால், அவனைச் சேவகர் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றனர். (நீலகேசியில் சாதுகனுடைய பெயர் **காளன்** எனக் குறிக்கப்பட்டுள்ளது.) கட்டழகு மிக்க சாதுகனைக் கண்ட பத்திரையின் மனம், பள்ளத்துட்பாயும் வெள்ளம் போல, அவனை அடைய எண்ணியது. அவள் சாதுகனையே மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்றும், அன்றேல் உயிர் விடப் போவதாகவும் கூறினள். அவளது வார்த்தையைக் கேட்ட அவள் தந்தை, அவளிடத்தே கொண்டுள்ள அன்பின் மிகுதியால் அச்சேவகர்களுக்குக் கைக்கூலி கொடுத்துச் சாதுகனை மீட்டு, அவன் பத்திரையை மணம் புரியுமாறு செய்தான். பத்திரையும் சாதுகனும் சிறிது காலம் வாழ்க்கையை இன்பமாக நடத்தி வந்தனர்.

ஒரு நாள் அவர்களுக்குள் ஊடல் நேர்ந்தது. அப்போது பத்திரை சாதுகனை நோக்கி, 'நீ முன்பு கள்வன் அல்லையோ?' எனக் கூறினள். இதைக் கேட்ட சாதுகன் மிக்க கோபங்கொண்டானேனும், தனது கோபத்தை வெளிக்காட்டாது அடக்கிக்கொண்டான்; தன் மனைவி அணிந்திருந்த அணிகலன்களை எல்லாம் எடுத்துக்கொண்டு,

அவளை விட்டு விலகவேண்டும் என்ற தீய எண்ணம் அவன் உள்ளத்தில் குடி கொண்டது. இதனுல், அவன் ஒரு நாள் தன் மனைவியை நோக்கி, 'பத்திரை, என் உயிரை முன்பு காப்பாற்றிய தெய்வத்திற்கு யான் காணிக்கை கொடுத்து வழிபடுவதற்காக ஒரு மலை உச்சிக்குப் போகப் போகின்-றேன். நீயும் அதற்குக் காணிக்கை கொடுத்து வழிபடுவதற்கு என்னுடன் வருதல் வேண்டும்,' என்றனன். இதைக் கேட்ட பத்திரை, உயர்ந்த அணிகலன்களை அணிந்து-கொண்டு, சாதுகனுடன் மலை உச்சிக்குச் சென்றனள். கள்ளத்தனமுடைய சாதுகன் தன் மனைவியை நோக்கி, 'பத்திரை, நீ அன்று என்னைக் கள்வன் என்று கூறினுய். ஆதலால், யான் உன்னை இப்போது கொல்லப்போகிறேன். நீ இறப்பதற்கு முன் உன் வழிபடு கடவுளை நினைத்துக்-கொள்,' என்ருன். இதைக்கேட்ட அவள், அவன் தன்னைக் கொல்வதன் முன் தான் அவனைக் கொல்ல வேண்டுமென்ற கருத்தினை உட்கொண்டு, அவன் கட்டளைக்கு அடங்கி நடப்பவள் போல நடித்து, 'ஐய, என் கணவராகிய உம்மைத் தவிர வேறு தெய்வம் எனக்கு இல்லை. ஆதலின், யான் உம்மை வலம் வந்து பணிகின்றேன்,' எனக் கூறி, வலம் வருவது போலப் பின் சென்று, அவனை மலையுச்சியி-னின்றும் தள்ள, அக்கள்வன் கீழே விழுந்து இறந்தான்.

கணவன் இறந்த பின்னர்ப் பத்திரை இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு சைன மதத்தின் ஒரு பிரிவாகிய நிகண்ட வாதிகளின் கூட்டத்தைச் சேர்ந்தாள். அவர்கள் அவளைத் தம் மதத்திற் சேர்த்துக்கொண்டார்கள். அம்மத வழக்கப்படி பத்திரையின் கூந்தல் களையப்பட்டது. ஆனுல், அக்கூந்தல் மீண்டும் சுருண்டு வளர்ந்ததால், அவளை எல்லோரும் '**குண்டலகேசி**' என வழங்கினர். குண்டலகேசி என்பது சுருண்ட கூந்தலையுடையவள் எனப் பொருள்படும்.

சைன சமயத்தினைச் சார்ந்த குண்டலகேசி அந்தச் சமயத்தின் கொள்கைகளையும் சாத்திரங்களையும் நன்கு கற்றுச் சமய வாதம் புரியப் புறப்பட்டுப் பல ஊர்களுக்குச் சென்ருள். சமயவாதம் செய்யப் போவதாகக் குறிப்பிட

வேண்டி ஒரு நாவல் மரக்கிளையை நடுவது அக்கால வழக்கமாகும். அவ்வாறே குண்டலகேசி **சிராவஸ்தி** என்ற ஊரின் நடுவில் ஒரு மணல் மேட்டில் சமய வாதத்தின் நிமித்தம் ஒரு நாவல் மரக்கிளையை நட்டுவிட்டுத் தான் உணவு பெறுதற்கு வெளியே சென்றாள். புத்தரின் சீடருள் ஒருவரான **சாரிபுத்திரர்** என்பவர் குண்டலகேசியுடன் வாதம் புரிவதற்குச் சில சிறுவர்களைக்கொண்டு அம்மரக் கிளையைப் பிடுங்கி எறியும்படி செய்தார். வெளியே சென்ற குண்டலகேசி திரும்பி வந்து, நடந்ததைக் கண்டு, சாரிபுத்திரருடன் வாதம் புரிந்து தோற்றுப்போய், அவர் குருவாகிய புத்தரைக் கண்டு வணங்க, புத்தர் அவளுக்கு உபதேசம் செய்து, அவளைப் புத்த மதத்தில் சேர்த்துக்கொண்டார். இதுவே குண்டலகேசியின் வரலாற்றுச் சுருக்கமாகும்.

**சூடாமணிப் புலவர்** என்பவர் இயற்றிய **வைசிய புராணத்தில்** 34-ஆம் சருக்கமாகிய '**பஞ்ச காவியத் தலைவரில்** காவேரி குண்டலகேசி பெற்ற சருக்கம்' என்பதில் மேலே காட்டிய குண்டலகேசி வரலாற்றிற்கு ஒரு சிறிதும் பொருத்தமில்லாத வேறு ஒரு கதை கூறப்பட்டுள்ளது.

குண்டலகேசி என்பது பௌத்த சமயச்சார்பான நூலாகும். இதில் கண்ட பௌத்த சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே **நீலகேசி** என்ற சைன நூல் தோன்றியதென்பது **சிறுகாப்பியங்கள்** ஐந்தனுள் ஒன்றான **நீலகேசியால்** அறியலாகும். இப்போது நீலகேசி என்ற நூல் நமக்குக் கிடைத்துள்ளது. ஆனால், நாம் குண்டலகேசியை இழந்துவிட்டோம்.

புறத்திரட்டின் வாயிலாகக் குண்டலகேசிச் செய்யுட்கள் 19 நமக்குக் கிடைத்துள்ளன என்பதை முன்னரே குறிப்பிட்டேன். அவைகளுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம் :

அரசனது சிறப்பு இந்நூலில் அழகாக விளக்கப்பட்டுள்ளது. செங்கோல் வழுவாது மன்னுயிரைத் தன்னுயிர் போலக் கருதி அரசாளும் மன்னனைப் பண்டைத் தமிழர் கடவுளோடு ஒப்ப வைத்து எண்ணினர். இந்நூலில் மன்னன் கடவுளுக்கு ஒப்பாவான் என்ற கருத்து நன்கு வலியுறுத்தப்படுகின்றது.

" இறந்த நற்குணம் எய்தற்கு அரியவாய்
உறைந்த தம்மைஎல் லாம்உட னாக்குவான்
பிறந்த மூர்த்தியொத் தான்திங்கள் வெண்குடை
அறம்கொள் கோல்அண்ணல் மும்மத யானையான்."

(குண்டலகேசி—புறத்திரட்டு, 494)

'பிறந்த மூர்த்தி' என்பது இவ்வுலகத்தில் திருவவதாரம் செய்த **புத்தர்** பெருமானைக் குறிப்பது போலும்! அரசன் இறைவனுக்கு ஒப்பாவான் என்ற கருத்தினைச் சிறு காவியம் ஐந்தனுள் ஒன்றான **சூளாமணி**யும் பின் வருமாறு எடுத்துக் கூறுகின்றது :

" இருமையும் ஒருமை யாலே இயற்றலின் இறைவன் போலப்
பெருமையும் உடைய தெய்வம் பிறிதினி இல்லை யன்றே ?"

குண்டலகேசியில் யாக்கை நிலையாமையைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஒருவர் இறந்துவிட்டால் அவரைக் குறித்து அவர் உறவினரும் நண்பரும் வருந்துவது உலக இயல்பு. குண்டலகேசி ஆசிரியர் நாம் அவ்வாறு வருந்துதல் கூடாது என்றும், நமது பாலப்பருவம் காளைப் பருவம் இளமைப் பருவம் மூப்புப் பருவம் ஆகிய பருவங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கழிந்துகொண்டே வருவதால், நாம் நமது வாழ்நாளில் நாள்தோறும் ஒரு நாளை இழக்கின்றோம் என்றும், ஆதலால், நமக்கு நாமே அழுதல் வேண்டும் என்றும் கூறுவதைக் காண்க :

" பாளையாம் தன்மை செத்தும்
பாலனாந் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும்இவ் வியல்பு மின்னே
மேல்வரு மூப்பு மாகி
நாளுநாட் சாகின் றாமால்
நமக்குநாம் அழாத(து) என்னோ !"

# 10. பலர் புகழ் ஞாயிறு

[திரு. தோ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A.]

சமீபத்தில் நானும் சில நண்பர்களும் கங்கை கொண்ட சோழபுரம் போயிருந்தோம். அது திருச்சி ஜில்லாவில் உடையார் பாளையம் தாலூக்காவில் இருக்கிறது. **ராஜ-ராஜன்** கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோவிலை ஓர் அளவாக வைத்துக்கொண்டு, அதைவிட எல்லா வகையிலும் பெரியதொரு கோயிலைக் கட்டத் திட்டமிட்டு, அதில் வெற்றி-யும் கண்டிருக்கிறான், கங்கை கொண்ட சோழன். அந்தக் கோயிலில் பார்க்கவேண்டிய சிற்பங்கள் எத்தனையோ இருந்-தும், அங்கிருந்த நிருவாக அதிகாரி எங்களைப் பிரதான வாயில் வழியாக உள்ளே அழைத்துப் போனதும் வலப் புறத்தில் ஒரு மேடையைச் சுட்டிக் காட்டினார். அங்கே ஒரே இருட்டு. தீவட்டி ஒன்றின் உதவியால் உற்றுப் பார்த்-தோம். நாலடிச் சதுரத்திலும், இரண்டடி உயரத்திலும் ஒரு கருங்கல், அருமையான வேலைப்பாடுகளுடன் இருந்தது. அந்தக் கல்லின் மேல் தளத்தில் தாமரை மலர் ஒன்று அழ-காகச் செதுக்கியிருந்தது. அதற்கடுத்த நிலையில், எட்டுக் கோணங்களிலும் எட்டுக் கிரகத்தையும், உட்கார்ந்திருக்கிற பாணியிலேயே செதுக்கியிருக்கிறான் சிற்பி; அருணன் இரதத்தை இழுத்துச் செல்லும் ஏழு குதிரைகளையும் செதுக்கியிருக்கிறான். இந்தச் சிற்பங்களைச் சுற்றிக் கொஞ்சம் சிந்தனையைச் சுழலவிட்டால், விஷயம் விளங்கும். எல்லாவற்றையும் செய்து முடித்து மேலேயுள்ள பதும பீடத்தில் சூரியனைத் தனியாகச் செய்து நிறுத்தியிருக்கிறான்; அல்ல; தனியாகச் செய்து நிறுத்த எண்ணியிருக்கிறான். அதற்குள் அவசரப்பட்டிருக்கிறான் அந்தக் காலதேவன். ஆதலால், சூரியன் இல்லாமலே அங்கு நவக்கிரகம் இருக்-கிறது. இன்று பக்கத்தில் ஒரு சூரியனைச் செதுக்கி வைத்-திருக்கிறார்கள். ஆனால், அதன் வேலைப்பாடு அதை இந்தப் பீடத்தில் வைக்கத் தகுதியற்றதாக்கியிருக்கிறது. ஆதலால், அது பக்கத்திலேயே பூஜையை மட்டும் ஏற்றுக்கொண்டு நிற்கிறது.

இருளகற்றும் சூரியன் அங்கில்லை; மற்றக் கிரகங்கள் எல்லாம் இருந்தும் இருள் அகலவில்லை. இதைச் சிந்தித்த போது ஒரு பழம்பாட்டு என் ஞாபகத்துக்கு வந்தது. அப்-பாட்டு இதுதான் :

" ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனிஆழி வெங்கதிர் ஒன்று ; ஏனையது,
தன்நேர் இலாத தமிழ்.'

'உலக இருளை அகற்றுவான் அந்தக் கதிரவன். ஆனால், மக்கள் உளத்திருளேயே அகற்றும் இந்தத் தமிழ்,' என்று கூறுவதுதான் எவ்வளவோ நயமானது ; பொருத்தமானது !

அப்படி இல்லாமலா, தமிழ் மக்கள் இந்தச் சூரிய வழி-பாட்டை ஆண்டுதோறும் இத்தனை விமரிசையாகப் பொங்க-லிட்டுக் கோலமிட்டுக் கொண்டாடுகிறார்கள் ! மஞ்சளும் வாழையும், கரும்பும் இளநீரும், பாலும் அன்னமும் பொங்-கிப் பெருகும் பொங்கல் திருநாள்தான் தமிழர் திருநாள் ஆகும். தமிழ் மொழிக்கும் சூரிய ஒளிக்கும் அத்தனை தொடர்பு இருந்திருக்கிறது ! ஆதலாலேதான் தமிழ் நாட்-டில் இந்த ஞாயிறு வழிபாடு எவ்வளவோ காலமாக எப்படி-யெல்லாமோ நடந்து வந்திருக்கிறது.

தமிழ் நாட்டில் எங்கே பார்த்தாலும் கோயில்கள் ! கோயில்களில் எல்லாம் நவக்கிரகங்களும் உண்டு. கோவில் ஸ்தலங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இப்படிக் கோயில்தோறும் நவக்கிரகங்கள் தலைவன் சூரிய பகவா-னோடு கோயில் கொண்டிருந்தாலும், அவைகளுக்கெனத் தனிக் கோயில்களைக் காணோம். தமிழ் நாட்டில் சூரியனுக்கு மட்டும் ஒரு கோயில் தனியாக உண்டு. அந்தக் கோயில் உள்ள ஊர்கள் எல்லாமே சூரியனார் கோவில் என்று வழங்-கப்படுகின்றன. இந்தக் கோயிலைக் காண விரும்புபவர்கள், கும்பகோணத்துக்கும் வடக்கே இரண்டு ஸ்டேஷன்கள் கடந்து ஆடுதுறை ரயில்வே ஸ்டேஷனில் இறங்க வேண்டும். அங்கிருந்து மேற்கே ஒன்றரை அல்லது இரண்டு மைல் தூரம் சென்றால், ஒரு சிறு கோயிலைக் காணலாம்.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதிக்கத்-

தின்கீழ் உள்ள கோயில் ஆனாலுங்கூட, மிகவும் பழுதுடையதாகவே இருக்கும்; கோபுரம் எல்லாம் செங்கல்லால் கட்டப்பட்டுப் பல பாகங்கள் சிதைந்திருக்கும். இதுதான் சூரியனார் கோயில் என்று தெரிந்துகொள்வதற்கு, கோயில் வெளிப்பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றினாலும் போதும். சூரியனைத் தவிர்த்து மற்றைய எட்டுக்கிரகங்கள்—ஏன்—அந்தக் கிரகங்களுக்குத் தனித்தனியாகக் கட்டியிருக்கும் கோயில் ஒவ்வொன்றுமே, ஒவ்வொரு திசையைப்பார்த்து வக்கரித்துக்கொண்டுதான் இருக்கும்.

கோயிலில் மூலவிக்கிரகம் சூரிய பகவான்தான். கர்ப்பக்கிருகத்தில் உள்ள இருட்டடிப்பில் சூரிய பகவானையும், அவரது எழில் நிறைந்த மூல உருவையும் கண்டுகொள்ளுதல் எளிதன்று. அவர் நிற்கின்ற கம்பீரமும், அவர் தலைக்குமேல் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பிரபையும், உலகையே உய்விக்கும் புன்முறுவலொடு கூடிய முகத்தின் களையும், காண்பவர் உள்ளத்தை எல்லாம் கவரும். அப்பொழுது அலர்ந்த செந்தாமரை இரண்டினை இரண்டு கையிலும் ஏந்தியிருக்கும் நேர்த்தி, அந்தச் சிலைக்கே ஒரு தனி வசீகரத்தைக் கொடுக்கிறது. தோளிலும், மார்பிலும், இடையிலும், துடையிலும் அணிந்திருக்கும் பணிகள் எல்லாம் அவர் நிரம்பச் செல்வம் படைத்தவரே என்பதைக் காட்டும்.

இந்தக் கோயிலை 1107 முதல் 1138 வரை சோழ மண்டலத்தை ஆண்ட **முதற்குலோத்துங்கனே** கட்டினான் என்றும், இந்தக் கோயிலில் உள்ள மூர்த்தியை **மார்த்தாண்ட தேவன்** என வழங்கினான் என்றும் ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. இவனேதான் தென்னார்க்காட்டு ஜில்லாவில் உள்ள **திருமணிக்குழி** என்ற ஸ்தலத்தில் உள்ள கோயிலுக்கும் சூரிய தேவனது சிலா உருவை அளித்தவன் என்பதும் தெரிகிறது. அந்தச் சூரியனார் கோயிலில் உள்ள **விசுவேசுவரர் விசாலாக்ஷி சந்நிதியையும்**, அங்குள்ள மூர்த்திகளின் பிரதிஷ்டையையும் ராஜராஜன் மகன் **கங்கை கொண்ட சோழன்** தன் காசி யாத்திரை ஞாபகார்த்தமாகக் கட்டினான் என்று சரித்திரம் கூறும். **ராஜேந்திரன்** ஞாயிறு வழிபாட்டில் மிக்க சிரத்தை

கொண்டவன் என்பதைத்தான் அவன் கட்டிய இந்தக் **கங்கை கொண்ட சோழபுரத்துக்** கலைக் கோயிலிலே நவக்கிரகங்களைச் சிருஷ்டிக்க முனைந்திருக்கிறான் என்பதிலிருந்து தெரிந்துகொள்கிறோமே! அவனே பின்னும் தஞ்சை ஜில்லாவில் உள்ள **அழகாத்திரி புத்தூர்**, தென்னார்க்காட்டு ஜில்லாவில் உள்ள **எண்ணாயிரம்** என்ற இரண்டு ஊர்களிலும் சூரியனுக்குக் கோயில்கள் கட்டி மானியங்களையும் விட்டான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அவனுக்கு முந்திய பரம்பரையிலேயே சோழகுல முதல்வர்களில் ஒருவனை **பரகேசரி வர்மன்**, திரிசிராப்பள்ளிக்கு மேற்கே பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள **திருப்பராய்த்துறைக்** கோயிலில் சூரிய விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்திருக்கிறான். இப்படித் தமிழ் நாட்டுக் கோயில்களில் சூரிய வழிபாடு நடந்து வந்திருக்கிறது.

"ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!" என்று கட்டியம் கூறுவது தமிழர்களுக்கு மட்டும் உரிமையானதொன்றன்று; இந்தியமக்கள் அனைவருக்குமே உரிமையான ஒன்றுதான். வேதகாலத்து ஆரியர்களும் சூரியனை வணங்கியிருக்கிறார்கள். 'இருளை நீக்குபவன், பாவங்களைப் போக்குபவன், உலகத்தையும் மனிதனையும் உஜ்ஜீவிக்கச் செய்பவன்' என்றெல்லாம் பாடிப்புகழ்ந்திருக்கிறார்கள். காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று நேரத்திலும் காயத்திரி மந்திரத்தை ஜபித்து அவனை வணங்கியிருக்கிறார்கள். இதிகாச காலத்திலும் சூரிய வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. சூரியனை மட்டுமே வணங்குகின்ற ஒரு கூட்டத்தார், **சௌரவர்கள்** என்று வழங்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தினமும் ஆதித்தனை வணங்கி அவன் பாதத்தில் வைத்துப் பூஜிக்கும் செந்நிறச் சந்தனத்தை நெற்றியிலும், சிவந்த மலர்களைத் தலையிலும் சூடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஏன்? இராமன், இராவணாதி அரக்கர்களை வதம் செய்வதற்காக அகத்திய முனிவரிடமிருந்து '**ஆதித்திய ஹிருதயம்**' என்னும் மகாமந்திரத்தையே கற்றுக்கொண்டான் என்பர் **வான்மீகியார்**. பன்னிரண்டு வருஷம் வனவாசம் பண்ணிய தரும புத்திரனுக்கும், உற்ற துணையாய் இருந்தது

சூரிய பகவான் கொடுத்த அக்ஷய பாத்திரந்தானே? **சந்திர பாகை** நதிக்கரையில் சூரியனுக்கு ஒரு கோயிலேயே கட்டி-ஞன் **ஸ்ரீகிருஷ்ணன்** என்றெல்லாம் இதிகாசங்கள் கூறும்.

வேதகாலம், இதிகாசகாலம், புராணகாலம் ஆகிய எல்லாவற்றையும் விட்டுவிட்டுச் சரித்திர காலத்துக்கு வந்தாலும், அங்கும் ஞாயிறு வழிபாடு சிறப்பாகவே நடந்-திருப்பதைக் காண்கிரும். **மாளுவ** நாட்டில் (Malva), **மாண்டசாரில்** கி. பி. 427ல் ஒரு சூரியனர் கோயில் கட்டப்பட்டது என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. குஜ-ராத்தில் உள்ள **மூதோராவிலும்**, ஒரிஸ்ஸாவில் உள்ள **கோனரக்கிலும்** கட்டிய சூரியனர் கோயில்கள் கி. பி. 11, 13-ஆம் நூற்ருண்டில் உருவானவை. சமீபகாலத்தில் ராஜ-புதனத்திலுள்ள **சிரோஹியில்** புதைபொருள் ஆராய்ச்சி-யாளர்கள் ஒரு பழைய சூரியனர் கோயிலேயே தோண்டி எடுத்திருக்கிருர்கள். இப்படி விந்தியமலேக்கு வடக்கிலும் தெற்கிலும் பரவிக்கிடந்த ஞாயிறு வழிபாடு வேங்கடத்திற்குத் தெற்கிலும் வந்து பல இடங்களில் நிலே பெற்றிருக்கிறது.

இப்படிக் கோயிலாகவும் மூர்த்தியாகவும் கல்லிலே உருவான சூரிய வழிபாடு, கவிஞர்களது சொல்லிலும் உருவாகியிருக்கிறது. கி. பி. ஏழாம் நூற்ருண்டில், **ஹர்ஷ-வர்த்தனரின்** சம்ஸ்தான கவிஞஞன **மயூரன், 'சூரிய-சதகம்'** என்னும் நூறு பாடல்களே இயற்றியிருக்கிருன். அவன் அந்தப் பாடல்களேப் பாடித் துதித்துத் தனக்கு வந்த குஷ்டநோயினின்றும் மீண்டிருக்கிருன். அந்தப்பாடல்களுட் சில, **காஞ்சி கச்சபேசுரர்** கோயில் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழ் இலக்கியத்தில், தமிழ்க்கவி உலகில் எல்லாம் ஞாயிறு வணக்கம் சிறப்பாய் இருக்கிறது.

> " முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி,
> ஏமுற விளங்கிய சுடர் "

என்று **நற்றிணே** கூறும். சங்க இலக்கியங்களில் ஞாயிறு போற்றும் பாடல்கள் நிறைய உண்டு.

“ பாய்திரை வேலிப் படுபொருள் நீஅறிதி
காய்கதிர்ச் செல்வனே ! கள்வனோ என்கணவன் ? ”

என்று கேட்ட கண்ணகியின் சொற்கள் நம் காதில் என்றுமே ரீங்காரம் செய்யும். எல்லாவற்றிற்கும் மேலாக,

“ கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தால்
எனவிரிந்த கதிர்கள் ”

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பனும் தன் வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறான். தமிழ்க் கடவுளான நடராஜனுக்கும், உலகு புகழ் இறையான கதிரவனுக்கும், இவர்களுக்கெல்லாம் மூலம் என்று சொல்லும் வகையில், நம் பழந்தமிழ்ப் புலவன், அந்த அஞ்சா நெஞ்சன் நக்கீரன்,

“ உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு ”

என்ற பாராட்டுடனேதான் தன் திருமுருகாற்றுப்படையை ஆரம்பிக்கிறான். ஆம், நாமும் அவனுடன் சேர்ந்து இந்தப் பலர் புகழ் ஞாயிற்றைத் தினம் ஒரு முறை பார்ப்போம்; வாழ்த்துவோம்; வணங்குவோம்!

# 11. தோல் வாத்தியங்கள்

[பேராசிரியர், R. K. விசுவநாதர், M.A.]

சங்கீதத்திற்குத் **தாளம்** இன்றியமையாதது. ஒலிகளின் சுருதியைத் தொடர்ச்சியாக மாற்றுவதனுல் உண்டாகும் இன்ப உணர்ச்சியுடன் அவ்வொலிகளினிடையே உள்ள காலப் பிரமாணத்தினுல் ஏற்படும் சுகத்தையும் நாம் அனுபவிக்கின்ருேம். ஒரு பாட்டு விறுவிறுப்பாகவோ அல்லது தாமதமாகவோ இருப்பதன் காரணம், அதில் அமைந்துள்ள தாளமேயாகும். உதாரணமாக, **தியாக ராஜா**வின் கீர்த்தனைகளுக்கும் **தீக்ஷிதரி**ன் கீர்த்தனை-களுக்கும் காலப்போக்கினுல் ஏற்பட்டுள்ள வித்தியாசத்தை அனைவரும் கவனித்திருக்கலாம். இதன்பொருட்டு ஒலி-களினுல் ஏற்படும் இன்ப உணர்ச்சியும் வேறுபடுவதைப் பார்க்கலாம். எல்லா நாட்டினரது சங்கீதத்திலும் இருக்கும் தாள வகைகளைக்காட்டிலும் நமது சங்கீதத்தில் அனேக வகை இருக்கின்றன. அதிலும், கர்நாடக சங்கீதத்தில் உள்ளவை எல்லாவிதத்திலும் சிறந்தவையெனக் கூறுகிருர்கள். வாய்ப்-பாட்டுக் கச்சேரிகள் சில சமயம் தாளக் கச்சேரிகளாய்விடு-கின்றன என்று சிலர் குறை கூறுவதை நாம் அறிவோம். பாட்டு நன்ருய் இருப்பதற்கு வேண்டிய அமிசங்களில் தாளம் முக்கியமானது என்பதை இவர்கள் மறந்துவிடுவதால் இவ்வாறு குறை கூறுகிருர்கள். நம் முன்னேர்கள் தாளத்தின் தனிச்சிறப்பை உணர்ந்து, பல்லவி பாடும் சம்பிரதாயத்தை வைத்திருக்கின்ருர்கள். சங்கீதத்தில் ஒருவர் அடைந்-திருக்கும் பயிற்சி அவர் பல்லவி பாடுவதிலிருந்துதான் வெளிப்படும்.

தாள வகைகளைப் பயின்று வாசிப்பதற்குப் பிரத்தியேக-மாகச் சில வாத்தியங்களை நம் முன்னேர்கள் அமைத்திருக்-கின்ருர்கள். அவற்றில் முக்கியமாக **மிருதங்கம், தவுல், தபேலா, கஞ்சீரா** என்பவற்றைக் கூற வேண்டும். இவை எல்லாம் தோல் வாத்தியங்களே ஆகும். இவற்றின் அமைப்பு, இவற்றின் ஒலி முதலியவற்றின் விவரங்களை இக்கட்டுரையில் கவனிப்போம் :

சங்கீத வாத்தியங்களில் அனேக வகை உண்டு. அவற்றில் எல்லாம் ஒலிகளை எழுப்பி அவை முழக்கத்துடன் வெளிவருவதற்குத் தக்க சாதனங்கள் உள்ளன. தோல் வாத்தியங்கள் எல்லாவற்றிலும் தோல்களின் அசைவு ஒலிகளுக்கு முக்கிய காரணமாய் இருக்கின்றது. தோல் துடிப்பதற்கு அதன் பரப்பு முழுதும் பிகுவாய் இருக்க வேண்டும். இதற்கு அதன் விளிம்பின் பல பாகங்கள் இழுத்துக் கட்டப்பட வேண்டும். மேலும், மிருதங்க வாத்தியத்தில் இருப்பதைப் போலக் காலியான மரப் பிப்பாயின் இரு பக்கங்களிலும் தோல் இழுத்துக் கட்டப்பட்டிருந்தால், அதன் துடிப்புக்கள் பின்னும் எளிதில் உண்டாகும். இவ்வாறு இழுத்துக் கட்டப்பட்ட தோல் ஒன்றை விரல்களினுலோ அல்லது ஒரு குச்சியினுலோ தட்டினுல், ஒலி எழும்புவதைக் கவனிக்கலாம். இத்துடிப்புக்களை நன்ருய் அறியுமுன் கம்பித் துடிப்புக்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம் :

இரண்டு முனைகளிலும் இழுத்துக் கட்டப்பட்ட ஒரு கம்பி துடிக்கும்போது அதன் இரண்டு முனைகளும் அசையாமல் இருந்து, அதன் மையம் அதிக அசைவுடன் துடிப்பதைக் கவனிக்கலாம். அசைவு இல்லாமல் இருக்கும் இடங்களை **முடிகள்** (Nodes) என்றும், அதிக அசைவு உள்ள இடங்களை **எதிர்முடிகள்** (Anti-nodes) என்றும் கூறுவார்கள். எனவே, கம்பி துடிக்கும்போது கம்பியின் இரு முனைகளும் முடிகளாகவும், அதன் மையம் எதிர் முடியாகவும் அமைகின்றன என்று சொல்லலாம். தோல் துடிக்கும்பொழுது அதன் பரப்பில் ஏற்படும் முடிகளும் எதிர் முடிகளும் கோடுகளில் அமைந்திருப்பதைக் கண்டார்கள். முடிகளைக் கொண்டுள்ள கோடுகளுக்கு **முடிக்கோடுகள்** (Nodal-lines) என்பது பெயர். இக்கோடுகள் தோலின் துடிப்புக்குத் தகுந்தவாறு அமைவதையும், இவை சில சமயம் வட்டங்களாகவும், பின்னர் நேர்க்கோடுகளாகவும் காணுவதையும் கண்டார்கள். இதை விளக்கக் கீழ்க்காணும் சோதனையைச் செய்யலாம் :

மிருதங்க வாத்தியத்தின் இடப்பக்கம் கீழே இருக்குமாறு

அதை நிமிர்த்தி வைத்துக்கொள்வோம். இப்பொழுது அதன் மேற்பக்கத்தில் சன்னமான மணலைத் தூவி, இலேசாகத் தோலின் விளிம்பைத் தட்ட, உடனே தோலின்மீதுள்ள மணலும் துடித்துச் சில இடங்களில் சென்று குவிவதைக் காணலாம். இம்மணல் படிந்து நிற்கும் கோடுகளே முடிக்கோடுகள் ஆகும்.

இன்னுமொரு விஷயத்தைக் கவனிப்போம்: முற்கூறிய கம்பித் துடிப்பிலிருந்து வெளிப்படும் ஒலியும் தூயதாய் இருப்பதில்லை. இவை இரண்டிலும் ஓர் ஆதார சுருதியுடன் பல்வேறு பரிவார சுருதிகளும் (Over–tones) கலந்து வருவதைக் கண்டார்கள். இத்தகைய பரிவார சுருதிகள் கலந்திருப்பதே ஒலிகளின் பண்பு வேறுபாட்டிற்குக் காரணமாகிறது. கம்பி, காற்று, நிரை ஆகியவை துடிக்கும்பொழுது அவற்றின் ஒலியில் அடங்கிய பரிவார சுருதிகள் பிரதான சுருதியைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு இம்மாதிரி வரிசைக்கிரமமாய் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஆனால், தோல் துடிப்பினால் உண்டாகும் ஒலியில் ஏற்படும் பரிவார சுருதிகள் இம்மாதிரி தொடர்ந்து அதிகரிப்பதில்லை. எனவே, இப்பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் இல்லாமல் போய்விடுகிறது. அதனால், அதன் பண்பு விரும்பத்தக்கதாயிருப்பதில்லை. இதன்பொருட்டுத் தோல் துடிப்புக்களை ஆதாரமாய்க் கொண்டுள்ள வாத்தியங்களை மேனாட்டார்கள் சங்கீத வாத்தியங்களாக ஒப்புக்கொள்வதில்லை. இக்குறையை நீக்கி மிருதங்க வாத்தியத்தை நம் முன்னோர்கள் இயற்றியிருக்கிறார்கள். இதன் ஒலியை நம் நாட்டுப் பிரபல விஞ்ஞானிகளான **ஸர் சி.வி. இராமன், ஆர். என். கோஷ்** என்னும் இருவரும் பரிசீலனை செய்து, அதன் மேன்மையை மேனாட்டார்களுக்குக் காட்டினார்கள். அவர்களும் நம் முன்னோர்களின் சங்கீத அறிவைக் கண்டு வியந்தார்கள். இக்குறை எவ்வாறு நீக்கப்பட்டது என்பதை மிருதங்க வாத்தியத்தின் அமைப்பைப் பார்த்த பிறகு காண்போம்.

தோல் வாத்தியங்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்து விளங்குவது மிருதங்க வாத்தியமே ஆகும். இது நந்தி

**பகவான்** வாத்தியம் என்று நம்மிடையே வழங்கிவரும் புராணக் கதையை அனைவரும் கேட்டிருக்கலாம். இதிலிருந்து இவ்வாத்தியம் எவ்வளவு பழமையானது என்பதை ஊகிக்கலாம். இதன் மரப்பிப்பாய் பலாமரத்தால் செய்யப்படும். இது சுமார் இரண்டு அடி நீளம் கொண்டிருக்கும். இதைவிட நீளம் குறைவான வாத்தியங்களும் உண்டு. மிருதங்க வித்துவான்கள் சுருதிக்குத் தகுந்தவாறு வாய்ப்பாட்டுக்கென்று ஒரு வாத்தியத்தையும், கம்பி வாத்தியத்துக்கென்று மற்றொரு வாத்தியத்தையும் உபயோகிப்பார்கள். பிப்பாயின் நீளம் முழுவதும் அதன் விட்டம் ஒரே அளவாக இல்லாமலிருப்பதைப் பார்க்கலாம். இடப் பக்கத்தின் விட்டம் வலப் பக்கத்தின் விட்டத்தைவிட அதிகமாய் இருக்கும். இதன் இரண்டு பக்கங்களையும் தோல் மூடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இடப் பக்கத்துக் தோலின் அமைப்பைக் காட்டிலும் வலப் பக்கத்துத் தோலின் அமைப்புச் சற்றே சிக்கலானது. வலப் பக்கத்தை மூடிக்கொண்டிருக்கும் தோல் மூன்று அடுக்குக்கள் கொண்டது. இதில் இரண்டு தோல் வளையங்களாகவும், மற்றொன்று வட்ட வடிவமான வில்லையாகவும் இருக்கும். தோல் வளையங்களுக்கு இடையே வில்லை இருக்கும். தோல் வளையங்களை ஆட்டுத் தோலினாலும், வில்லையைப் பசு மாட்டுத் தோலினாலும் செய்வார்கள். வாத்தியம் செய்வதற்கு முன் இம்மூன்று தோல்களையும் சில நாட்கள் தண்ணீரில் ஊற வைப்பார்கள். பிறகு இவற்றை எடுத்து, பிப்பாயின் வலப்பக்கத்தின்மீது வைத்துக்கொண்டு இவற்றின் விளிம்பில் சில இடங்களில் துவாரங்களை இட்டு, அவற்றில் நீண்ட தோல் வார்களைப் புகுத்திவிடுவார்கள். இடப் பக்கத்துக்குத் தோலைத் தயார் செய்து, அதையும் அதன் இடத்தில் பொருத்திக்கொண்டு, முன் சொன்ன நீண்ட தோல் வார்களினால் இட வலப்பக்கங்களை நன்றாக இழுத்து இணைத்துவிடுவார்கள். இடப்பக்கத்துத் தோல் இரண்டு அடுக்குக்கொண்டது. ஒன்று வளையமாகவும், மற்றொன்று முழு வில்லையாகவும் இருக்கும். வளையத்தை ஆட்டுத்தோலினாலும், முழு வில்லையை எருமைத் தோலினாலும் செய்வார்கள். இவ்வாறு இணைக்கப்பட்ட இரண்டு

பக்கத்துத் தோல்களும் பிகுவுடன் இருக்கும். வார்களுக்கு இடையே சிறு மரத்துண்டுகளைப் புகுத்திப் பின்னும் பிகுவை அதிகரித்துக்கொள்ளலாம். மிருதங்க வாத்தியத்தின் வலத் தோலின் மைய பாகம் கருமையாய் இருப்பதை அனைவரும் கவனித்திருக்கலாம். இது மற்றப் பாகத்தைக்காட்டிலும் உயர்ந்தும் இருக்கும். இது எவ்வாறு உண்டாயிற்று என்பதை இப்பொழுது கவனிப்போம் :

ஒரு விதச் சுக்கான் கல்லைப் பொடி செய்து அதனுடன் **சாதமும் ரோசனமும்** கலந்துகொண்டு, இக்கலவையை வலப்பக்கத்தின் நடுவில் இலேசாகத் தடவுவார்கள். இது காய்ந்தவுடன் ஒரு குழவியை வைத்துக்கொண்டு இதை நன்ருகத் தேய்ப்பார்கள். பின்பு தோலின் விளிம்பிலும், நடுப்பகுதியிலும் தட்டி, இரண்டு ஒலிகளின் சுருதியும் ஒன்ருய் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்வார்கள். அவ்வாறில்லாவிடில், மறுபடியும் இக்கலவையைப் பூசி, காய வைத்துக் குழவியினுல் பின்னும் தேய்ப்பார்கள். இதனுலேதான் வலப்பக்கத்தின் மத்திய பாகம் பளபளவென்று கரிய நிறமாய்த் தோன்றுகிறது. வாசிக்கும்பொழுது இப்பக்கத்தின் ஒலி ஷட்ஜமாகக் கேட்கும். இதன் கீழ், பஞ்சமம் இடப்பக்கத்துத் தோலின் ஒலியினுல் உண்டாகும். இதற்காக, வாசிப்பதற்கு முன், ரவை மாவை நீருடன் கலந்து, அதை இடப்பக்கத்துத் தோலின் மத்தியில் தடவிக்கொள்வார்கள். கச்சேரி முடிந்தவுடன் அம்மாவை எடுத்து எறிந்துவிடுவார்கள்.

முன் சொன்ன விஞ்ஞானிகள் தோலின் துடிப்புக்களைப் பரிசீலனை செய்து பார்த்த பொழுது அதன் கனம் விளிம்பிலிருந்து மையத்துக்கு வரவரச் சீராக அதிகரித்துக்கொண்டே வருமானுல், அதன் ஒலியில் அடங்கிய பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் உண்டாகி, நாதம் இனிமை அடைந்துவிடுவதைக் கண்டார்கள். மிருதங்க வாத்தியத்தின் நாதம், பெரும்பாலும் அதன் வலப்பக்கத்துத் தோலைப் பொறுத்தது. இத்தோலின் கனம் சீராக விளிம்பிலிருந்து மையம்வரை அதிகரித்துக்கொண்டு வருவதனுலேதான் மிருதங்கத்தின் நாதம் இனிமையாய் இருக்கின்றது என்று

அவர்கள் கூறுகின்றார்கள். மேலும், தோல் துடிக்கும்பொழுது பிப்பாயினுள்ளிருக்கும் காற்றும், பிப்பாயின் புறங்களும் துடித்து, நாதத்தின் இனிமையைப் பின்னும் அதிகரிக்கச் செய்கின்றன என்றும் கூறுகின்றார்கள். பிப்பாயில் ஏதாவது விரிசல் உண்டானால், நாதம் கெட்டுவிடுவதைக் கவனிக்கலாம். வாய்ப் பாட்டுக் கச்சேரிகளோ, அல்லது கம்பி வாத்தியக் கச்சேரிகளோ, மிருதங்கம் இல்லாமல் சோபிப்பதில்லை. ஏனெனில், மிருதங்கத்தின் மீட்டு சாபுக்களினால் உண்டாகும் ஒலிகளும் கலந்து வரும்பொழுதுதான் வாய்ப்பாட்டுக் கச்சேரிகளும், கம்பி வாத்தியக்கச்சேரிகளும் முழு இனிமை தருகின்றன. வாய்ப்பாட்டுக்காரர்கள் கீர்த்தனைகளில் ஸ்வரம் பாடும்போது மிருதங்கத்தின் நாதத்தினால் உண்டாகும் இன்ப உணர்ச்சியை நன்றாக அறியலாம். எவ்வாறு வாய்ப்பாட்டுப் பாடுபவர் ராக ஆலாபனை செய்யும் பொழுது அவரது மனோதர்மத்தை வெளிப்படுத்துகிறாரோ, அவ்வாறே மிருதங்கம் வாசிப்பவரும் ஒரு குறிப்பிட்ட தாளத்தில் தனி ஆவர்த்தனம் வாசிக்கும்பொழுது அவரது மனோதர்மத்தை வெளிப்படுத்துவர். எனவே, மிருதங்க வாத்தியத்தின் பெருமையை நன்கு உணரலாம்.

தவுல் வாத்தியத்தின் அமைப்பு ஏறக்குறைய மிருதங்க வாத்தியத்தின் அமைப்பை ஒத்திருக்கும். ஆனால், இதன் பிப்பாய் பெரியதாய் இருக்கும். மேலும், இதன் விட்டம் எல்லா இடங்களிலும் ஒன்றாய் இருக்கும். இதன் ஒலியில் அடங்கியுள்ள பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் இல்லாததனால் இதன் நாதம் விரும்பத்தக்கதாய் இல்லை. இது நாதசுரவாத்தியத்தின் முழக்கத்திற்குச் சமமான தாளவாத்தியம் என்பதைத் தவிர இதற்கு வேறு பெருமை இல்லை. வடவிந்தியாவில் தபேலா வாத்தியத்தைத் தாள வாத்தியமாக உபயோகப்படுத்துகிறார்கள். அரைக் கோள வடிவமுள்ள இரண்டு மரப் பிப்பாய்களை அவர்கள் உபயோகிக்கின்றார்கள். ஒன்றை இடக்கையினாலும் மற்றொன்றை வலக்கையினாலும் வாசிப்பது வழக்கம். வலக்கையினால் வாசிக்கப்படுவதை மிருதங்கத்தின் வலப்பாகத்திற்கும், இடக்கையினால் வாசிக்கப்படுவதை மிருதங்கத்தின் இடப்பாகத்திற்கும் ஒப்பிடலாம்.

மேலும், வலக்கையினுல் வாசிக்கப்படும் பிப்பாயின் தோலில் உள்ள கரிய வட்டம் தோலின் மையத்தில் இல்லாமல் சற்று விலகி இருப்பதைக் கவனிக்கலாம். இதன் நாதம் பெரும்பாலும் மிருதங்கத்தின் நாதத்தைப் போலவே இருக்கும்.

கடைசியாக, கஞ்சீரா வாத்தியத்தை எடுத்துக்கொள்வோம். இதற்கு மிருதங்கத்தைப் போலப் பிரத்தியேகமானதொரு சுருதி இல்லை. இதைச் சங்கீத வாத்தியமாக அனேகர் ஒப்புக்கொள்வதில்லை. இதில் நிரவல் செய்யும்போது ஏற்படும் ஒலிகளே சற்று இனிமையாய்த் தோன்றும்.

# 12. எங்கள் இன்பச் செலவு

[புலவர், பு. செல்வராசனார்,]
தமிழாசிரியர், C. A. H. இந்து முஸ்லிம்
உயர்நிலைப்பள்ளி, சென்னை.

இவ்வாண்டு இன்பச் செலவில் எழில் மிக்க **எருமை நாட்டினைக்** காணுதல் வேண்டும் எனத் தலைமை ஆசிரியர் கூறியபோது, மாணவர்மட்டுமன்றி, ஆசிரியரும் பேருவகை எய்தினர் ; எருமை நாடு என்ற போதினில், பண்டைத் தமிழ்நாடு அருவாநாடு, குடநாடு, குட்டநாடு முதலிய பன்னிரண்டு நாடாகப் பிரிந்திருந்ததும், அவற்றுள் ஒன்றாக எருமை நாடு அமைந்திருந்ததும் நினைவில் எழுந்தன. 'பண்டைத் தமிழக நாடுகளுள் ஒன்றிற்குச் செல்கிறோம்!' என்ற உணர்ச்சி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்தது. எருமை நாடு எனும் பெயரே, ஆரியம் இந்நாட்டில் நுழைந்த பிறகு '**மகிஷாசூர்**' என மாற்றப்பட்ட பின், ஆங்கிலம் நுழைந்த பிறகு '**மைசூர்**' என்றாகிவிட்டது. **மகிஷாசுரன்** என்னும் கொடிய அரக்கன், கொற்றவையால் அடக்கி ஒடுக்கப்பட்ட இடமாகலின், அவ்வரக்கன் பெயரே மகிஷாசூர் என அந்நாட்டிற்கு இடப்பட்டதென்று புராணம் கூறுகிறது. அதற்கேற்ப அந்நாட்டின் காவல் தெய்வம் **சாமுண்டீசுவரி** (மகிஷாசுர மர்த்தனி) யாகவே விளங்குகிறது.

மைசூர் நாடு, கடம்பர், ஹொய்சலர், விஜயநகர மன்னர் என்ற மன்னர் பரம்பரையினரின் ஆட்சியைக் கண்டதாகும். ஒரு காலத்தில் அந்நாடு அசோகரின் மௌரியப் பேரரசில் இணைந்திருந்தது. இப்போது ஆட்சி புரியும் உடையார் மரபினர் 1399ல் மைசூர் வந்து குடியேறி 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ஆண்டிருந்தனர். பிறகு, அந்நாடு **ஹைதர் அலி, திப்புச்சுல்தான்** ஆட்சிகளுக்குட்பட்டதெனினும், 1799ல் திப்புச் சுல்தான் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டதும் முன்னைய உடையார் மரபினர் வசமே மைசூர் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது.'

மாணவர்களும், ஆசிரியர்களுமான ஐம்பத்தொருவர் 22-9-52 திங்களன்று இரவு 9-45 மணிக்குச் சென்னையி-னின்று '**பெங்களூர் மெயில்**' வண்டியில் புறப்பட்டோம்; 222 கல் தொலைவிலுள்ள பெங்களூர் நகரை அடைய மறு-நாட்காலை மணி எட்டாயிற்று. உடனே அனைவரும் காலைக் கடன்களை முடித்து, புகை வண்டி நிலையத்திருந்த **ஐ. ஆர். ஆர்.** சிற்றுண்டிச் சாலையில் பசியாறினோம்; பின்பு அவ்வெழில் மிக்க நகரங்காணச் சென்றோம்.

மைசூர் நாட்டின் முதன்மை வாய்ந்த நகரம் **பெங்களூரே** ஆகும். அங்குத்தான் நாட்டாட்சித் தலைமை மன்றங்கள் அமைந்துள்ளன. அந்நகரம் பதினேழாம் நூற்-றாண்டில் **கெம்பே கௌடா** என்பவரால் முதன்முதலாக நிறுவப்பட்டது. இன்று அந்நகரம் 25 சதுரமைல் சுற்றள-வுடன் சற்றேறத்தாழப் பத்து இலட்சம் குடிமக்களைக் கொண்டு விளங்குகிறது. பெங்களூர் நகர் கடல் மட்டத்-திற்கு 3000 அடி உயர்ந்து விளங்கும் பீடபூமியில் அமைந்-திருப்பதால், அங்கு வெப்பநிலை எப்போதும் 76·2 டிகிரிக்கு மேற்படுவதில்லை. அந்நகரம் **நகரப் பகுதி, பாசறைப் பகுதி** (Cantonment) என இரண்டாகப் பிரிந்துளது. அவ்-விரு பகுதிகளிலும் வரலாற்றுப் புகழ் வாய்ந்த அரண்கள், தொழிற்சாலைகள், எழில் மிக்க பூஞ்சோலைகள், ஆட்சி மன்-றங்கள், பொருட்காட்சிச்சாலை, நூல் நிலையம், சந்தைகள் எனக் காண்பதற்குரியவை பல உள. அங்குத் திரைப்படக் காட்சிக் கொட்டகைகள் மட்டும் நாற்பதுக்கு மேலிருக்-கின்றன. இத்துறையில் அந்நகர் இந்தியாவில் இரண்டாவ-திடத்தைப் பெறுகின்றது. பெங்களூர் என்னும் பெயர் உண்டானதற்குக் கூறப்படும் காரணம் விந்தை மிக்கது. அந்நகரைத் தோற்றுவித்தவராகிய கெம்பே கௌடா, முதலில் அந்த இடம் வந்தபோது, கிழவி ஒருத்தி **வெந்தகடலையை** அவருக்குப் பசியாறக் கொடுத்ததாகவும், அதனால் அவர் அந்த இடத்திற்குப் '**பெந்த காளூ**' என்னும் பெயரிட்ட-தாகவும், பின்னர் அப்பெயர் மருவிப் பெங்களூர் என்றா-யிற்றென்றும் கூறப்படுகிறது.

நாங்கள் முதலில் அந்நகரிலுள்ள **வேட்கோவர்**

**தொழிற்சாலை** (Porcelain Factory) சென்றோம். அங்கே வெண்களிமண் கொண்டு பல வகைப் பீங்கான் சாமான்கள் செய்யப்படுகின்றன. பீங்கான் தட்டை, கோப்பை, கெண்டி, கிண்ணம், பதுமை, மின்சார 'இன்ஸுலேட்டர்' (Insulator) முதலிய பல வகையான பொருள்கள் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. வெள்ளைக்களிமண் கொண்டு வந்து நீரிற்கரைத்து, கல் மணல் முதலியவை அகலச் செய்து, பின்பு களிமண்ணைத் தனியே பிரித்து எடுத்துச் சிறு உருளைகளாகச் செய்து, பின்பு அவற்றை உருக்களாக்கி உலர வைத்துச் சுட்டுப் பளபளப்பாக்கி, வண்ணங்கள் தீட்டி விற்பனைக்கு அனுப்புகின்றனர். இத்தனையும் மின்சாரத்தின் உதவிகொண்டே நடைபெறுகின்றன. சூளையிடும் அடுப்பும் மின்சார அடுப்பே. வண்ணங்கள் தீட்டுவது ஒன்றுதான் கையால் ஆகும் வேலை.

அத்தொழிற்சாலையை அடுத்து, **கண்ணாடித் தொழிற்சாலையும்** (The Mysore Glass and Enamel Works Ltd.) **மின்சார விளக்குத் தொழிற்சாலையும்** (Mysore Lamp Works) அமைந்திருக்கின்றன. கண்ணாடித் தொழிற்சாலையில் கண்ணாடிப் பொருள்கள் அனைத்தும் உற்பத்தியாகின்றன. விளக்குத் தொழிற்சாலையில் மின்சார 'பல்புகள்' (Bulbs) செய்யப்படுகின்றன. போர்ஸிலின் தொழிற்சாலைக்கு அறுநூறு அடித்தொலைவில் **இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம்** (The Indian Institute of Science) அமைந்துளது. அந்த நிலையம் **சர். சி. வி. ராமன்** அவர்கள் தலைமையில் மிகத் திறம்பட நடைபெறுகிறது. அங்கு நடைபெறும் ஆராய்ச்சிகளின் பயனாகப் பல புதிய தொழில்கள் அங்குத் தோன்றுகின்றன. அவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்த பிறகு, நாங்கள் புகை வண்டி நிலையம் மீண்டோம்.

பகலுணவை அங்கே முடித்துக்கொண்டு **அரசாங்கச் சவுக்காரத் தொழிற்சாலை** (Government Soap Factory) சென்றோம். வழியில் **சிட்டி மார்க்கெட்டு** (City Market) என வழங்கப்படும் **கிருஷ்ண ராஜேந்திர அங்காடியைக்** கண்டோம். அங்கே பெங்களூர்க் காய்கறிகளும், பழ வகைகளும் பன்னிறத் தோற்றம் அளித்துக் காண்போர் கருத்தை

ஈர்த்த வண்ணமிருந்தன. அவற்றைக் காண்போர், எதை-யேனும் வாங்காமல் வெளியேறுதல் கடினம்.

நாங்கள் அரசாங்கச் சவுக்காரத் தொழிற்சாலையை அடைந்த போது பகல் மணி இரண்டாகிவிட்டது. அதில் பல வகையான சோப்புக்கள் செய்யப்படுகின்றன. உலகப் புகழ் வாழ்ந்த **மைசூர் சந்தனச் சோப்பு** உற்பத்தியாவது அந்தத் தொழிற்சாலையிலேதான். அங்கே முதலில் துணி துவைக்கப் பயன்படும் சாதாரணச் சோப்புக்களை ஆறடி நீளம், எட்டடி உயரம், இரண்டடிக் கனமுள்ள பாளங்களாகச் செய்கின்றார்கள்; பின்னர் அவற்றைச் செதுக்கி, நிறமும் மணமும் ஊட்டிக் குளிக்கும் சோப்புக்களாக்குகின்றனர். சோப்புச் செய்யப் பயன்படும் பொருள்களைக் கொதிக்க வைத்தல், பின்பு பெரிய பாளங்களாக அச்சில் ஊற்றிக் குளிரவைத்து இறுகச் செய்தல், இறுகிய பின் அறுத்து நாடாக்களைப் போலச் சீவுதல், சீவப்பட்டவை உலர்ந்ததும் நிறமூட்டல், நறுமணமூட்டல், பின்பு அச்சீவல்களைத் தடித்த திரணைக் கம்பி போல அழுத்தி வெளிப்படுத்தல், அதனைச் சிறுசிறு சோப்புக் கட்டிகளாக அழுத்தி முத்திரையிடுதல் ஆகிய இத்தனையும் மின்சார உதவியினால் நடைபெறு-கின்றன. சோப்புக் கட்டிகளின்மீது காகிதம் சுற்றிப் பெட்டிகளில் அடைக்கும் வேலைமட்டுந்தான் பெண்கள் செய்-கின்றார்கள்.

அங்கிருந்து **தொழிற்பயிற்சி நிலையம்** (Occupational Institute) சென்றோம். கோலார்த் தங்க வயலில் நிலத்திற்கடியில் சுரங்கம் வெட்டித் தங்கம் எடுக்கும் முறை-யினை அங்கே சிறு அமைப்பாகச் (Model) செய்து வைத்து, அங்குச் செல்லும் மாணவர்க்கு விளக்குகின்றனர். மைசூர் நாட்டில் கிடைக்கும் தாதுப் பொருள்கள் (Minerals), மர-வகைகள், கற்கள் முதலிய பல பொருள்கள் அங்குக் காட்-சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. சுரங்கத்தில் துளையிட்டுச் சென்று தங்கம் வெட்டுவதற்குரிய கருவிகளும் அங்குள. அந்நிலையத்தில் பல்வேறு வகையான தொழிற்பயிற்சிகள் மைசூர் மாணவர்க்கு அளிக்கப்படுகின்றன. திரைப்படம் எடுத்தல், அதற்குரிய 'பிலிம்' செய்தல், படம் பிடித்தல் முதல்

பிளாஷ்டிக்குச் சாமான்கள் செய்தல் ஈருகப் பல வகையான தொழில்களில் அங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த மகத்தான அழகிய கட்டடத்தின் ஒரு பகுதியை மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்தே கட்டி முடித்தார்கள் என்ற உண்மையை அங்குள்ள நிலைய உதவித் தலைவர் கூறக்கேட்டு நாங்கள் பெருவியப்பெய்தினோம். அதனால், அரசாங்கத்துக்குச் செலவு குறைந்ததுடன், மாணவரும் ஆசிரியரும் ஊதியம் பெற்று மகிழ்ந்தனர். மாணவரும் ஆசிரியரும் அதில் முனைந்ததால், கூலிக்காரரர் போன்று காலத்தை வீணாக்காமல், செய்வதைத் திருந்தச் செய்து முடித்திருக்கின்றனர் என்பது அதனைக் காண்கையில் நன்கு உணரக்கிடக்கிறது. அதனையடுத்து, **'ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர சில்வர் ஜுபிளி டெக்னாலஜிக்கல் இன்ஸ்டிடியூட்டு'** இருக்கிறது. அக்கட்டடம் பெங்களூர் நகரிலுள்ள மிக அழகிய கருங்கற்கட்டடங்களுள் ஒன்றாகும்.

அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு, **'கப்பன் பூங்கா'** சென்றோம். அப்பூங்கா மிக அழகியதாய் விளங்குகிறது. அங்குள்ள சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்திவிட்டு **'ரஸ்ஸல் அங்காடி'** (Russel Market) சென்றோம். அந்த அங்காடி சென்னை மூர்மார்க்கெட்டைப் போன்றது; ஆனால், சிறியது. அவ்வங்காடி எதிரில் கிறிஸ்தவக் கோயில் ஒன்று **'நாட்டிரடேம் சர்ச்சு'** அமைப்புப் போன்று கட்டப்பட்டுளது.

ரஸ்ஸல் அங்காடியைப் பார்த்து முடிந்ததும் நேரே **'லால்பாகு'** சென்றோம். லால்பாகு என்பது அரசாங்க இளமரக்கா ஆகும். அங்கு எல்லா வகைத் தாவர இனங்களும் அழகான முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பன்னிறப் பூக்கள் ஆங்காங்கு மலர்ந்து மணம் பரப்பிய காட்சி மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அரிய மூலிகை இனங்கள் ஒருபாலும், பல வகைப் புல்லினங்கள் ஒருபாலும், செடி கொடி மரங்கள் ஒருபாலும் ஆங்குக் காணப்பட்டன.

லால்பாகின் கிழக்குக் கோடியில் ஒரு பெரும்பாறை இருக்கிறது. அப்பாறைமீது கெம்பே கௌடாவின் நினைவுச் சின்னம் ஒன்றெழுப்பப்பட்டிருக்கிறது.

லால்பாகைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு, அவெனியூ தெரு வழியே சென்று திப்புச்சுல்தான் கோட்டையைக் கண்டோம். இரு புறமும் முற்றம் உள்ளதாய், நாற்புறமும் பால்கனி (Balcony) உடைய மாடி ஒன்றுள்ளதாய், எங்கும் சிற்பவேலைப்பாடுள்ளதாய்த் தூண்களனைத்தும் சிற்பங்கள் செதுக்கப்பட்டதாய் அமைந்த அழகிய சபா-மண்டபத்தையே, அங்குள்ளோர் கோட்டை என்கின்றனர். திப்புச்சுல்தான் மக்கள் முறைகளைக் கேட்டறிவதும், நீதி வழங்குவதும் அந்தச் சபா மண்டபத்திலிருந்து என்பதை அறிந்தோம். அதையும், அதன் அருகில் உள்ளதும், திப்புச்-சுல்தானால் ஆதரிக்கப்பட்டு மானியம் வழங்கப்பட்டதுமான கோவிலையும் பார்த்துக்கொண்டு புகை வண்டி நிலையம் சென்று, உணவு கொண்டபின் மைசூர் பாசஞ்சரில் மைசூர் நோக்கிப் புறப்பட்ட நாங்கள், நாற்பத்தாறுமைல் தொலைவில் இருக்கும் **மத்தூரை** இரவு இரண்டு மணிக்கு அடைந்தோம். சிவசமுத்திர நீர்வீழ்ச்சியைக் காண விழைபவர்கள் புகை வண்டிப் பாதை வழியே செல்ல விரும்பினால், மத்தூர்ப் புகை-வண்டி நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து இருபத்தேழுமைல் தொலை பஸ்ஸில் போக வேண்டும். இதற்குப் போக வர இரண்டரை ரூபா கட்டணம். இவ்வழியிலல்லாமல் பெங்களூரி-லிருந்து நேரே பஸ் மூலமாகவும் சிவசமுத்திரம் போகலாம்.

மத்தூர்ப் புகை வண்டி நிலையத்தில் நாங்கள் அவ்விர-வினைக் கழித்தோம்; விடிந்ததும் அருகிலிருந்த வாய்க்காலை அடைந்து, காலைக்கடன்களை முடித்தோம்; பசியாறினோம்; பின் பஸ் ஒன்றை எங்களுக்கென்றே தனியாக அமைத்துக்-கொண்டு, சிவசமுத்திரம் சென்றோம்.

காவிரியாறு குடகு நாட்டில் மேற்குமலைத் தொடரைச் சேர்ந்த **சையமலை**யில் தோன்றி, மேட்டு நிலத்தின் வழியே நெடுந்தொலை பாய்ந்து வந்து, சிவசமுத்திரத்திற்கருகில் சமதரையில் விழுகிறது. காவிரியாறு சமதரையில் பாய்ந்-தோடத் தொடங்கும் முதலிடம் அதுதான். அங்குக் காவிரி சற்றேறக்குறைய 250 அடி ஆழத்தில் அருவிகளாய் வீழ்வது கண் கொள்ளாக் காட்சியாய் இருந்தது. இயற்கை எழில் நலங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற கைபுனைந்து

இயற்றுக் கவின்பெறு வனப்பு, கண்டோர் கருத்தைக் கவர் வதில் வியப்பொன்றுமில்லை. மூன்று நான்கு அருவிகளாகப் பிரிந்து, பால் வழிவது போலக் காவிரி நீர் நுரைத்துப் பொங்கி விழும் தோற்றம், அதைப் பார்த்துக்கொண்டே-யிருக்குமாறு மனத்தை ஈர்த்து நின்றது.

காவிரி சமதரையில் விழும் இடத்தினின்று சற்றுத் தொலையில் சமதரையில், அதாவது 300 அடி ஆழத்தில், **மின்சார உற்பத்தி நிலையம்** (Electric Generating Station) கட்டப்பட்டிருக்கிறது. நீர் வீழ்ச்சிக்கு மேற்கே இரண்டு கல் தொலையில் காவிரியிலிருந்து ஒரு தனிக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. அக்கால்வாய் வழியே மின்சார உற்பத்தி நிலையமுள்ள இடம் வரை தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. காவிரியிலிருந்து கால்வாய் பிரியு-மிடத்தில் ஓர் அணைகட்டப்பட்டுத் தண்ணீர் தேக்கப்படுகிறது. இவ்வாறு அணைமூலம் தண்ணீர் தேக்கி வைக்கப்படுதலால், மின்சார உற்பத்தி நிலையம் நோக்கி வரும் கால்வாயில் தண்ணீர் என்றும் குறைவதில்லை. அந்த அணையும் தேக்கமும் மின்சார உற்பத்தி நிலையம் உள்ள இடத்திற்கு ஏறத்தாழ நானூறு அடி உயரத்தில் அமைந்துளவாகலின், கால்வாயில் வரும் நீர் கடுகிப் பாய்ந்தோடி வருகிறது. இடையிடையே இவ்விரண்டு கல் தொலைவுக் கால்வாயில் மதகுகள் கட்டப்-பட்டுள்ளன. அங்கங்கே நீரின் வேகம் குறைக்கப்பட்டு, மின்சார நிலையம் உள்ள இடத்திற்குமேலே இருநூற்றைம்பது அடி உயரத்தின் விளிம்பருகில் வன்மையான ஒரு சிற்றணை கட்டப்பட்டுத் தண்ணீர் கீழ்நோக்கி நீர்வீழ்ச்சியாய்ப் பாய்ந்-தோடிவிடாதபடி தடுக்கப்பட்டிருக்கிறது. அச்சிற்றணையில் பதின்மூன்று கண்ணறைகள் உண்டாக்கி, அவற்றில் பதின்-மூன்று இரும்புக் குழைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்த இரும்புக்குழைகளுள் ஒவ்வொன்றும் நான்கடிக் குறுக்-களவு கொண்டதாகும்; சற்றேறத்தாழ 250 அடி உயரமுடைய-தாகும். அக்குழைகள் மேலேயுள்ள சிற்றணையின் மதகு-களில் பொருத்தப்பட்டுச் செங்குத்தாய் 250 அடி கீழே இறக்கி, மின்சார உற்பத்தி நிலையத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன; மிகப்பெரிய உருளைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. செங்-

குத்தாய் உள்ள அக்குழைகளின் வழியே கடுவேகத்துடன் பாய்ந்தோடிவரும் தண்ணீர், கீழே மின்சார உற்பத்தி நிலையத்தில் அகன்று குவிந்த முறம் போன்ற பல்சக்கர அமைப்புடன் கூடிய பெரிய உருளைகளில் (Power Generators) மோதி, அவற்றினைக் கடுவேகத்தில் சுழலச் செய்கின்றது. அவ்வாறு விரைந்து உருளைகள் சுழல்வதால் உண்டாகும் சத்தியைக்கொண்டு காந்தசத்தி மின்சார சத்தியாக மாற்றப்படுகிறது. இந்த மின்சார சத்தியைத் திரட்டவும் பல இடங்களுக்கு அனுப்பவும் மாபெரும்பொறிகள் பல பணியாற்றுகின்றன. இவ்வண்ணம் திரட்டப்படும் மின்சாரசத்தி, மேட்டு நிலத்தில் அதாவது 100 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள மற்றொரு மின்சார நிலையத்திற்கு (Power Station) அனுப்பப்பட்டு, அங்கிருந்து மைசூருக்கும், பெங்களூருக்கும், கோலாருக்கும், மற்றவிடங்களுக்குமாகப் பிரித்தனுப்பி வைக்கப்படுகிறது. இம்மின்சார உற்பத்தி நிலையத்தைக்காண முன்னதாகவே எழுதி உத்தரவு பெறவேண்டும்.

சிவசமுத்திரத்தில் சிற்றுண்டியருந்திவிட்டு அங்கிருந்து பஸ் மூலம் மத்தூர் மீண்டோம்; வந்தவுடன் வாய்க்காலில் நீராடிக் களித்தோம்; பிறகு உணவருந்தி **மண்டியா** செல்லப் புகை வண்டி ஏறினோம். மத்தூரிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள மண்டியாவுக்கு ஒரு மணி நேரத்தில் போய்ச் சேர்ந்து, புகை வண்டி நிலையத்தில் படுத்து உறங்கினோம். விடிந்ததும், காலைக் கடன்களை முடித்துப் பசியாறியதும், அங்குள்ள **'மைசூர்ச் சர்க்கரை** ஆலை'யைக் காணச் சென்றோம்.

மண்டியாவிலுள்ள 'மைசூர்ச் சர்க்கரை ஆலை' இந்தியாவில் இரண்டாவது இடம் வகிக்கும் பெரிய ஆலையாகும். ஆண்டில் ஒன்பது மாதங்கள் அங்கே சாறு பிழிந்து சர்க்கரை செய்யும் வேலை நடைபெறுகிறது. நாள் ஒன்றுக்கு 2000 டன் கரும்பு, சாறு பிழியப்படுகிறது. 4000 ஆட்கள் அந்த ஆலையில் வேலை செய்கிறார்கள். அந்த ஆலைக்குச் சொந்தமாக 2600 ஏக்கர் கரும்பு விளையும் நிலம் மண்டியாவைச் சுற்றியிருக்கிறது. ஆனால், அந்த நிலங்களில் விளையும் கரும்பு சேமிப்பில் வைக்கப்பட்டு, உழவர்களிடமிருந்து

கிடைக்காமற்போகும் காலங்களில் மட்டும் பயன்படுத்தப் படுகின்றது.

அந்த ஆலையைப் பார்ப்பதற்கு முன் கூட்டி அனுமதி பெற்றுக வேண்டும். அதன் தலைமை அலுவலகம் பெங்களூர் சிட்டி (City)யில் ஸ்ரீ ஜெய சாமராஜேந்திர தெருவில் இருக்கிறது. அங்குள்ள அக்கம்பெனியின் காரியதரிசியிடமிருந்து அனுமதி பெறலாம். நாங்கள் சென்னையிலிருந்தவாறே எழுதி அனுமதி பெற்றோம்.

அனுமதியுடன் சென்ற எங்களை ஆலை அலுவலர்கள் வரவேற்றார்கள்; எங்களிடமிருந்த காமிராக்களை வாங்கி வைத்துக்கொண்ட பின், எங்களை நான்கு குழுவினராகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வோர் அலுவலர் தலைமை தாங்கி, எங்களை ஆலைக்குள் அழைத்துச் சென்று, சர்க்கரை செய்யப்படும் வகையினை நன்கு உணரும் வகையில் விளக்கிக் கூறினர்.

அந்த ஆலையில் வயலிலிருந்து அறுவடை செய்து கொணரும் கரும்புகளை அப்படியே கொண்டு வந்து ஒரு முனையில் கொட்டினால், மறு முனையில் வந்து விழும் சர்க்கரை கோணிகளில் பிடிக்கப்பட்டு மூட்டைகள் ஆக்கப்படுவதைக் கண்டு பெருவியப்படைந்தோம்.

இந்தப் பிரமாண்டமான ஆலையைப் பார்த்து முடித்த பிறகு, பகலுணவு உட்கொண்டு, புகை வண்டியேறி, அங்கிருந்து 19 கல் தொலைவிலிருக்கும் மைசூர் மன்னர்களின் பழைய தலை நகரமாயிருந்த **சீரங்கப்பட்டணம்** போய்ச் சேர்ந்தோம்.

வரலாற்றுப் புகழ் பெற்ற சீரங்கப்பட்டணத்தில் நாங்கள் சத்திரம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தினோம்; படுக்கை, பெட்டி முதலியவற்றை அங்கு வைத்துவிட்டு, திப்புவின் கோட்டையைக் காணச் சென்றோம். மூன்று அகழிகளுடன் மகத்தான அரண்களைக் கட்டி 1792ல் **காரன்வாலிஸ்** தலைமையில் வந்த வெள்ளையர் படையெடுப்பை எதிர்த்துப் போரிட்டும், 1799ல் **ஜெனரல் ஹாரிஸ்** தலைமையில் வந்த வெள்ளையர் படையெடுப்பை எதிர்த்துப் போரிட்டும், வெள்ளையரைத் திணற வைத்த அஞ்சா நெஞ்சர், மகாவீரர்

திப்புவின் அரண்கள் இன்று சிற்சில சின்னங்களாகவே காட்சியளித்தன. அங்குள்ள பள்ளி வாயிலின் ஒரு மினூரா-வின் உச்சியில் நின்று பார்க்க, காவிரி இரண்டாகப் பிரிந்து அவ்வூருள்ள இடத்தை அரங்கமாக்குவது நன்ருகத் தெரிந்தது. காவிரியில் அமைந்துள்ள மூன்று அரங்கங்-களில் அது ஒன்று என்பதும், மற்ற இரண்டும் சிவசமுத்-திரத்தில் ஒன்றும் திரிசிராப்பள்ளியின் அருகில் ஒன்றுமாய் அமைந்துள்ளன என்பதும் விளங்கும்.

அங்கிருந்து, திப்புவின் கொடிமரம், யானைத் தொழுவம் முதலியவற்றைப் பார்த்துக்கொண்டு, **தரியா தௌலத்து** என்னும் எழில் ஒழுகும் கட்டடத்தைக் காணச் சென்ருேம். தரியா தௌலத்து என்பது **'செல்வக் கடல்'** எனப் பொருள் படும். அது ஹைதர் அலியின் சபா மண்டபம் என்பதை அறிந்தோம். பின்னர்த் திப்பு அதைத் தம் வன-மாளிகையாகப் பயன்படுத்திஞர்.

தரியா தௌலத்து ஓர் அழகிய கலா நிலையமாகக் காட்சி-யளிக்கிறது. எங்கு நோக்கினும் ஓவியங்களும், சிற்ப வேலைப்பாடு நிறைந்த தூண்களும், சுவர்களும் அம்மண்ட-பத்தின் எழிலைப் பெருக்கிக் காட்டுகின்றன. அம்மண்ட-பம் கீழ்த்தளமும் மேல் தளமுமாய் அமைந்திருக்கிறது. கீழ்த்தளம் சுமார் எட்டடி உயரமிருக்கும். மாடியே சபா மண்டபமாகப் பயன்பட்டிருக்கிறது. நாற்புறமும் அழகிய பால்கனிகளும், மாதர் இருக்கத் தனியறைகளும் அதில் உள. அந்த பால்கனியில் ஹைதர் அலி அமர்ந்து வெளி முற்றத்-தில் நிற்பவர்களுக்குப் பேட்டியளிப்பதும் வழக்கு விசாரணை-கள் நடத்துவதும் வழக்கமாம். அந்த மண்டபத்தின் தாழ்-வாரச் சுவர்களில் முதல் மைசூர்ப் போர், இரண்டாவது மைசூர்ப் போர் முதலியவற்றின் காட்சிகள் ஓவியங்களாய்த் தீட்டப்பட்டிருக்கின்றன.

தரியா தௌலத்தைப் பார்த்தபின், அங்கிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ள திப்புவின் சமாதியைப் பார்த்துவிட்டு, அரங்கநாதப் பெருமான் திருக்கோயில் சென்ருேம். கி. பி. 894ல் **திருமலையா** என்பவரால் கட்டப்பட்ட அக்கோயில், அமைதி மிக்க அவ்விடத்தில் அழகுபட விளங்குகின்றது.

திருமால் வெளியுலக ஆரவாரம் எதுவும் காதிற்படாமல் அமைதியாகப் பள்ளிகொண்டு உறங்குவது போலவே, கருவறையிலிருந்த மூலவரைக் கண்டபோது எங்கட்குத் தோன்றியது. அரங்கநாதர் திருவடிகளில் காவிரி அன்னை அமர்ந்த கோலத்தில் வீற்றிருப்பது போலவும், அருகில் **கௌதம முனிவர்** நின்று வணங்குவது போலவும் அங்கு உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கோவிலில் கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன. கி. பி. 1210ன் தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் அங்கே காணப்படுகிறது. அந்த ஊருக்குச் சீரங்கப்பட்டணம் என்னும் பெயரிட்டவரும் திருமலையாவே என்பதைத் தெரிந்துகொண்டபின், அங்கிருந்து நாங்கள் தங்கியிருந்த சத்திரம் சென்று, இரவு உணவருந்தி, பள்ளி கொண்டோம். விடிந்த பின் காவிரிக் கன்னியைக் கண்டோம் ; களிப்பு மிகக் கொண்டோம்; நீராடி மகிழ்ந்தோம். பின்னர் ஒன்பது மைல் தொலைவில் உள்ள மைசூரைப் புகை வண்டியின் வாயிலாகச் சென்றடைந்தோம்.

மைசூரை, 'இந்தியாவின் பூம்பொழில் நகரம்' எனக் கூறுதல் பொருந்தும். கடல் மட்டத்துக்கு 2525 அடி உயரத்தில் மைசூர் நகரம் அமைந்திருக்கிறது. அந்நகரில் இருநூறுயிரம் மாந்தர் உறைகின்றனர். தெருக்கள் படுபள்ளத்தில் தாழ்ந்தும் நெடுமேட்டில் ஏறியும் அமைந்துள்ளனவெனினும், எங்கும் பூஞ்சோலைகளும் அழகிய கட்டடங்களும் இருந்து அந்நகரை அழகுபடுத்துகின்றன.

மைசூர் சென்றவுடன், பகல் உணவை முடித்துக்கொண்டு, தலைக்கு மூன்றணைக் கட்டணம் கொடுத்து, **ஜகன் மோகன் மாளிகையினுள்** சென்றோம். அது ஓவியக் கலைக்காட்சி நிலையமாகும். மிக அரிய ஓவியங்கள் அங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. பழங்கால ஓவியங்கள் பல அங்குள்ளன. உலகிற்சிறந்த ஓவிய அறிஞரால் வரையப்பட்ட அதியற்புத ஓவியங்கள் மனத்தைக் கவர்கின்றன. ஓர் அணங்கு ஒரு கையில் விளக்கொன்றை ஏந்தி அது காற்றில் அணைந்துவிடாமல் மற்றொரு கையால் அதனை மறைத்து எடுத்து வரும் ஓவியம், இயற்கையினின்றும் சற்றும் வழுவாமல், மிக உயர்ந்த ஓவியமாய்த்

திகழ்கிறது. **ராஜா ரவிவர்மா** தம் கையினுல் வரைந்த ஓவியங்களையும் அங்கே நாங்கள் பார்த்தோம். ஒன்றை-யொன்று மிஞ்சக் கூடிய வகையில், தமிழ் நாட்டு ஓவியங்-களும், வங்காளம், குஜரத்து, பஞ்சாபு, மேனுடுகள் என உலகின் பல நாடுகளின் ஓவியங்களும் சிறப்புற்றுக் காணப்-பட்டன.

பழங்கால இசைக் கருவிகளும் அங்குக் காட்சிப் பொருள்களாக்கப்பட்டுள்ளன. செதுக்கு ஓவியங்கள் பல-வும் உள்ளன. இவற்றையெல்லாம் கண்ட பிறகு மைசூருக்கு வடமேற்கே பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள **கண்ணம்-பாடி அணை**யைக் காணச் சென்ருேம்.

காவிரியாறு சையமலையினின்று புறப்பட்டு, **கனகா, ஹேமாவதி, இலட்சுமண தீர்த்தம்** முதலிய கிளையாறு-களுடன் கலந்து வருகையில், **பைரபூர்** என்னுமிடத்திற்-கருகில் கண்ணம்பாடி அணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணையின் சுவர் ஒன்றே முக்காற்கல் நீளமுடையதாகும். இதனுல் தடுக்கப்பட்டுக் கடல் போலத் தேங்கும் காவிரித் தேக்கம், $49\frac{1}{2}$ சதுரமைல் பரப்புடையதாகும். இது **கிருஷ்ணராஜ சாகரம்** என வழங்கப்படுகிறது.

இந்த அணைச்சுவரின் மறுபுறத்தில் '**பிருந்தாவனம்**' என்னும் பெயரில், கைபுனைந்தியற்றிய கவின் பெருவனப்-புடையதொரு பூம்பொழில் அமைந்திருக்கிறது. அப்பூங்கா இந்தியாவில் வேறு எங்குமில்லாத எழில் நலங்கள் அனைத்-தும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருக்கிறது. இயற்கையையும் செயற்கையையும் கலந்து, மனித மூளை அங்கே ஓர் எழிற்-கலையை உண்டுபண்ணியிருக்கும் மாண்பை என்னென்-றுரைப்பது! வண்ண மலர்ச் செடிகளை, வகைப்படுத்தி, காவிரியின் நீரைப் பல சிறு அழகிய பொய்கைகளாகவும், ஏரிகளாகவும், சின்னஞ்சிறு நீர் வீழ்ச்சிகளாகவும் செய்து, ஆங்காங்கே நீர்த்தூம்புகள் நின்று தண்ணீரைக் கண்ணுடிக் கம்பிகள் நின்றிருப்பதுபோல இடைவிடாது மேலெழுந்து விழச்செய்து, இராக்காலத்தில் பன்னிற மின்சார விளக்கு-களை நீருக்குள் மறைத்து வைத்து, நீரே அப்பன்னிறங்-களுடன் விளங்குவதுபோலத் தோன்றச்செய்து வைத்துள்ள

காட்சி கண் கொள்ளாக் காட்சியேயாகும். பிருந்தாவனத்தின் மேற்புறமுள்ள அணையின் சுவரில் காவிரியம்மையின் கற்சிலை ஒன்று காட்சியளிக்கிறது. அவ்வம்மையின் கைகளிற் பற்றியுள்ள சிறு குடத்தின் வாயினின்று நீர் வழிந்துகொண்டிருக்குமாறு அது அமைக்கப் பெற்றுள்ளது. அந்நீர் இடையறுமல் வழிந்துகொண்டிருக்கும்படி செய்யப்பட்டுள்ள அமைப்பு, திவான் விசுவேசுவரையாவின் மூளைத்திறன் என்று கூறப்படுகிறது.

பிருந்தாவனம் கண்டு முடித்த பிறகு, மைசூர்ப் புகை வண்டி நிலையம் திரும்பி உணவருந்தியதும், மைசூரில் நாங்கள் தங்குவதற்கென அரசாங்கக் கல்வித்துறை அதிகாரி ஒதுக்கிக் கொடுத்திருந்த பள்ளிக்கூடம் சென்று அன்றிரவைக் கழித்தோம்.

மறுநாள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, **இந்திரபவன்** என்னும் சிற்றுண்டி விடுதியில் பசியாறினேம். மைசூரில், '**போண்டா**' மைசூர் போண்டா எனப்படுகிறதா அல்லது மதராஸ் போண்டா எனப்படுகிறதா என்ற ஐயம் ஒரு மாணவருக்கு எழ, அங்கும் மைசூர் போண்டா, மைசூர்ப் பாகு, மைசூர் ரசம் என்னும் பெயர்களே வழக்காற்றில் இருக்கின்றன என்பதை அம்மாணவர் விசாரித்தறிந்துகொண்டார்.

பிறகு, தசராவின் பத்தாவது நாளைய உலாவின் ஒத்திகை 9-ஆம் நாட்காலை நடந்தது. அதனை நாங்கள் பார்வையிட்ட பின்னர், பஸ்ஸில் **சாமுண்டி மலை**க்குச் சென்றேம். சாமுண்டி மலை, மைசூர் ராஜப்பிரமுகரின் அரண்மனையிலிருந்து தென்கிழக்காக இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. அது கடல் மட்டத்தினின்று 3489 அடி உயரத்தில் இருக்கிறது. அம்மலைமீதேறப் பாறையில் படிகள் வெட்டப்பட்டிருக்கின்றனவென்றாலும், மோட்டாரில் செல்வதற்கென அழகிய சாலையும் அமைக்கப்பெற்றுள்ளது.

சாமுண்டி மலைமீது மைசூர் அரச குடும்பத்தினர் வணங்குதற்குரிய **சாமுண்டீசுவரி கோயில்** இருக்கிறது. அக்கோவிலைப் பிற கோவில்களைப் போன்று வைத்திராமல், மிகத் துப்புரவுடையதாக வைத்துக்கொண்டிருக்கின்றனர்

அங்குள்ளோர். அக்கோவிலின் பெருங்கதவுகள் எல்லாம் சொக்க வெள்ளியாலானவை. கருவறையில் உள்ள அம்மனுக்குத் தங்கத்தகட்டால் கவசம் அணிந்திருக்கின்றனர். அக்கோவிலின் வெளிக் கதவு மட்டும் இருநூறுயிரம் ரூபாய் மதிப்புடையதென்பது எங்கட்குக் கூறப்பட்டது. கோயிலுக்குச் சற்றுத் தொலேவில் அரசரின் மாளிகை ஒன்று அழகொழுகக் கட்டப்பட்டிருக்கிறது. அதன் பெயர் **ராஜேந்திர விலாச மாளிகை** என்பதாகும்.

இவற்றையெல்லாம் பார்த்த பிறகு நாங்கள் மலேயடி வந்து, நேரே உணவருந்தச் சென்றோம். பிறகு புகழ் வாய்ந்து விளங்கும் '**மைசூர் ஸ்ரீ சாமராஜேந்திர விலங்குக் காட்சிப் பூங்கா**'வைக் காணச் சென்றோம். அதனுட்செல்வதற்குக் கட்டணம் நான்கணுவாகும். அப்பூங்காவினுள் சென்னேயில் இல்லாத சில விலங்குகள் இருக்கக் கண்டோம். நீர் யானேகள் இரண்டு, வாயைப் பிளந்துகொண்டு வந்து நின்ற காட்சி, காண்போரை அஞ்ச வைத்தது. மனிதக் குரங்கு (Ape Man) ஒன்று இருக்கிறது. அதற்குப் பாலும் பழங்களும் அளிக்கின்றனர். அது மனிதரைப் போலவே, ஆரஞ்சுப் பழத்தைத் தோலுரித்துச் சுளே சுளேயாகத் தனியே எடுத்து, அச்சுளேகளேயும் பிரித்துத் தின்னும் காட்சி வேடிக்கையாயிருக்கிறது. அப்பூங்காவினுள் வெள்ளே நிற மான்கள், நான்கு பேர் மேலே அமர்ந்து செல்லக்கூடிய அளவு மேலோடுடைய மிகப்பெரிய ஆமைகள், காட்டெருமைகள், காட்டு ஆடுகள், பன்னிறங்கள் வாய்ந்த கிளிகள் முதலியன பார்க்கத் தக்கவைகளாய் இருக்கின்றன.

அதனேப் பார்த்த பிறகு நேரே, மைசூர் மகாராஜாவின் **அரண்மனே** நோக்கிச் சென்றோம். அன்று தசராத் திருவிழாவின் ஒன்பதாம் நாளாகலின், மகாராஜா சிம்மாதனத்தமர்ந்து தர்பார் நடத்திய காட்சியைக் கண்டோம். அவ்வரண்மனே முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, அரசர் தமது அரியணேயின்மீது அடியெடுத்து வைத்தவுடனே அவையனேத்தும் பேரொளியுடன் எரியத் தொடங்கும் காட்சியும், மன்னர் அவை முன்னர் மற்போர் முதலியவை நடத்தப்பட்டதும், மன்னர் அறிஞர் பலருக்கு

அரியணையிலமர்ந்து பரிசுகள் வழங்கியதும் காண்பதற்கழகா-யிருந்தன. இந்த அரண்மனையைத் தசரா அல்லாத சாதாரண காலத்தில் சனி ஞாயிறுகளில் எவரும் சென்று காணலாம். ஆயின், முன்னதாக அனுமதி பெற்றாக வேண்டும். அரசரின் அரியணைக் காட்சியைப் பார்த்த பிறகு இரவு உணவருந்தி, மனமின்றி மைசூரைப் பிரிந்து, பெங்களூர் மெயில் ,ஏறி, பெங்களூரை அதிகாலையில் அடைந்து, அங்கிருந்து பெங்-களூர் எக்ஸ்பிரஸ் ஏறி 28-ஆந் தேதிப் பிற்பகல் சென்னையை அடைந்தோம்.

---